Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් நவ. 12-18, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 382

## மலையகக் குழப்பங்கள்

## எதிர்காலத்துக்கான எச்சரிக்கை



## பலமான ராட்சசியே

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## அவதானம் அவசியம்!

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

கடந்த வாரம்
நாட்டில் மிக பதற்றமான
வாரமாக முடிந்தது.
ஒரு குட்டி இனக் கலவரத்துக்கான
நெருப்புக் கீற்றுக்கள்
பொறிதட்டி மறைந்தன.
பற்றிப் பரவி
பெரும் இனக்கலவரமாக
வியாபிக்காது அடங்கியது
எம் அதிஷ்டம் என்றே கூறலாம்.
1983க்கு பின்னர்–
நீண்டகாலமாக
பாரிய இனக் கலவரம் ஒன்று
இங்கு ஏற்படவில்லை.

1983 இனக்கலவரத்தை
தோற்றுவித்த 13 இராணுவத்தினரை
யாழ்நகரில் போராளிகள்
தாக்கிக் கொன்ற
சம்பவத்தை விட
மிகப் பாரியதும்
மிகப் பாரதூரமானதுமான
பல சம்பவங்கள்
இந் நாட்டில்
நடைபெற்றும்
அவ்வாறான இனக் கலவரங்கள்
மீண்டும் ஏற்படவில்லை.

இந் நாட்டின்
ஜனாதிபதி ஒருவர்
கொலை செய்யப்பட்டும்
இன்னொரு ஜனாதிபதி
தற்கொலைக் குண்டில்
மயிரிழையில் உயிர் தப்பியும்
மற்றொரு ஜனாதிபதி வேட்பாளர்
ஜனாதிபதி தேர்தலின் போதே
படுகொலை செய்யப்பட்டும்,
இன்னும் பல
அரசியல் அமைச்சர்கள்,
அரசியல்வாதிகள்,
இராணுவத் தளபதிகள்
படுகொலை செய்யப்பட்டும்
பாரிய இராணுவ முகாம்கள்
தாக்கி அழிக்கப்பட்டும் கூட
இவ்வாறான இனக்கலவரங்கள்
ஏற்படவில்லை.

இதற்குக் காரணம்
அப்பாவித் தமிழ் மக்கள்
இவற்றிற்குப் பொறுப்பாளிகள் அல்ல,
என்பதை சிங்கள சமூகம்
உணர்ந்து கொண்டது தான்.
அத்தோடு இத்தகைய
கலவரங்கள் பிரிவினைப்
போராட்டத்துக்குத் தான்
வலுவூட்டுவதாக
அமைந்துவிடும் என்றும்
புரிந்துகொண்டதும் தான்.

இதேவேளை
அண்மைக்காலமாக
மீண்டும் இங்கே
இனவாதக் குரல்கள்
ஒலிக்க ஆரம்பித்து இருக்கின்றன.
இனப்பிரச்சனைக்கான
அரசியல் தீர்வு பற்றிய
விடயங்கள் அக்கறைக்குரிய
கட்டத்தை அடைந்த போது,
மறுபுறம் இனவாத ஆர்ப்பாட்டங்கள்
வெளிப்படையாகவே
உச்சஸ்தாயியில் ஒலித்ததை
அவதானிக்க முடிந்தது.
அடுத்து வந்த
தேர்தல் பிரசாரங்களில்
இனவாதக் கருத்துக்கள்
பல்வேறு தரப்பாலும்
எடுத்தாளப்பட்டன.

இந்த நிலைக்கு
மக்களை உசுப்பிவிட்டு
அதன் விளைவுகள்
வெடித்தபோது அங்கலாய்ப்பதால்
அர்த்தமில்லை.
பண்டாரவளைப் படுகொலையில்
இதன் உடனடி வெளிப்பாடு
மறுபுறம் அப்படுகொலைகளைக்
கண்டிக்கவும் துக்கம் அனுஷ்டிக்கவும்
உரித்துடைய தமிழ் மக்களை–
குறிப்பாக அப்பாவி
மலையக மக்களை
எல்லைத் தாண்டி
வன்முறைக்கு உந்தித் தள்ளி
அரசியல் லாபம் தேட முனைந்த
சக்திகளும் கூட
இனவாதத்துக்கான
தூண்டுகோலர்கள் தான்.

மலையகத் தமிழர்கள்
செறிந்து வாழும் பகுதிகளில்
சிங்களவர்களைத் தாக்குவதால்
தமிழர்கள் ஐதாக உள்ள பகுதிகளில்
அதன் எதிரொலிகள்
ஏற்படத்தான் செய்யும் என்பதை
நன்கு தெரிந்திருந்தும்
அவ்வாறு நிகழ்வதே
தமது அரசியல் பிழைப்புக்கு
அவலாக அமையும் என்ற
வக்கிர எண்ணத்துடன்,
எதுவும் அறியாத மக்களை
இவர்கள் தூண்டிவிட்டுள்ளார்கள்.
அதன் விளைவுகள்
பாரதூரமாக மாறாததால்
இது பலிக்கவில்லை.
இருந்தும் எதிர்காலத்தில்
மக்களைத் தூண்டிவிடும்
முயற்சிகள் பற்றி
விழிப்பாய் இருப்பது அவசியமே.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*
**என்றென்றும் அன்புடன்,**
***ஆசிரியர்.***

# ஆன்மீகம்

## அன்பு செய்க!

மக்களாகிய எங்கள் வாழ்வு நிலையற்றது. குறுகிய காலம் வாழும் நாம் இயன்றளவு இனிமையான நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். இனியவை செய்ய மனதில் இரக்கம் வேண்டும், இரக்கம் அன்பினால் உண்டாகும், "அன்புதான் இன்ப ஊற்று!" சான்றோர் கூறியது. மனிதன் முதல் விலங்கு, பறவை ஆகிய உயிர்களிடம் அன்பாயிருக்க வேண்டும்.

யாருடைய இதயத்தில் அன்பு உண்டோ அந்த இதயம், ஏழைகள், நோயாளிகள், அங்கவீனர், நாய், பூனை, பசு முதலாய ஜீவராசிகளின் துன்பம் கண்டு இரங்கும், அவ்வுயிர்கட்கு இரங்கி நல்லன செய்யுமேயன்றி அல்லன் செய்யா. அன்புள்ள உள்ளங்களில் தான் ஆண்டவன் கோயில் கொள்வான்.

அன்பில்லாதவர் எல்லாம் தமக்குரியவை என்றும் அன்புடையவர் தமது என்பும் பிறர்க்கு உரியதெனக் கருதுவதாக வள்ளுவர் கூறுகிறார். அன்பு அறம் செய்யத் தூண்டும். அறம்தான் தருமம். 'தருமம் தலை காக்கும்!' இம்மையிலும் மறுமையிலும் இன்பம் தரும்.

நாம் எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டு நடப்போமாயின் அவர்களின் அன்பைப் பெறுவதுடன் ஆண்டவனுடைய கருணையைப் பெற்று இம்மை மறுமை இரண்டிலும் இன்ப மடைவோம்.

செல்வி. பா. வேலுப்பிள்ளை



## ஆட்சியாளருக்கு அல்லாஹ் பகர்பவை

அரசாட்சியை நிறுவும் ஒரு தலைவர், அல்லாஹ் வுடைய சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிந்து ஆட்சி நடாத்த வேண்டும். பொதுவாகக் கலந்தாலோசித்தல் எல்லா வாழ்க்கைத் துறையிலும் குறிப்பாக அரசியல்துறையில் மிகவும் இன்றியமையாதது.

"அல்லாஹ்வின் ஆணைக்குத் தலைசாய்த்து இறைவணக்கத் தைக் கடைப்பிடித்து தங்கள் விடயங்களை ஆலோசனையின் மூல மாகக் கலந்தாலோசித்து முடிவு செய்வோர்-இவர்களுக்கு அல்லாஹ் விடத்திலுள்ள கூலி மிகச் சிறந்ததும் நிரந்தரமானதுமாகும். (4:58)

மானக்கேடான காரியம், அக்கிரமம், கலகம் செய்து குழப்பம் விளைவித்தல், அடக்குமுறை இவற்றிலிருந்து உங்களை அல்லாஹ் விலகியிருக்கக் கட்டளை இடுகிறான். (16:19)

"விசுவாசிகளே! இறைவனுக்குக் கீழ்ப்படியுங்கள், இறை தூதருக்கும் கீழ்படிந்து உங்களால் ஆளப்படும் மக்களுக்கு கண்ணியத்தையும் அளித்து அன்பையும் அளியுங்கள்." (11:86) இதுவே ஓர் ஆட்சியாளனின் சிறந்த பண்பு.

"நீங்கள் உங்கள் ஆட்சி அதிகாரங்களின் போது மக்களுக்குக் கொடுப்ப வற்றை நீதமாகவே கொடுத்துவிடுங்கள்; ஏனென்றால் நீதம் தவறுவோருக்கு அல்லாஹ் விடத்தில் கடும் தண்டனை உண்டு!"

வை. எம். தாஹிர்கரீம்-கல்முனை 06.

## அதிகாரம்

ஆன்மீக வழியில் அதிகாரங்கள் இரண்டு வகைப்படும்.

1. முழு அதிகாரம் கடவுளுக்கு மட்டும் உரியது.

2. மனிதன் பாவிக்கும் படியான அதிகாரம், அல்லது அனுமதி. இது அடிமைப்பணி செய்து, அதிகாரத்தை அழகு படுத்தும்படி கடவுளால் கொடுக்கப்படுவது. இன்று, இவ்வதிகாரமுள்ள பொறுப்புக்கள், பணம் பட்டம், பதவி, புகழ், செல்வாக்கு, என்பவைகளால் நிர்ணயிக்கப்பட்டு கடவுளுக்கு பிரியமற்ற முறையில் கைமாறி விடுகின்றன.


இறுமாப்பினாலும் அகம் பாவம், ஆணவம், சண்டித்தனம், போன்றவற்றால் மக்களை கட்டுப்படுத்த நினைப்பதாலும், ஒற்றுமை, ஒத்துழைப்பு, ஒருமைப்பாடு சிதைந்து போவதோடு, கடவுள் மகிமைப்பட வேண்டிய காரியங்கள் கடவுளின் பெயரில் மகிமையற்று நடந்தேறுகின்றன.

எனவே, இந்த நிலமைகள் மாறி அடிமைப்பணிசெய்து அதிகாரத்தை அழகு படுத்தி, ஆண்டவர் இயேசுவை மகிமைப்படுத்தக் கூடிய, ஆற்றல் உள்ள கடவுளின் பிள்ளைகளிடத்தில், இவ்வதிகாரங்கள் சென்றடைய வேண்டுமென பிரார்த்திப்போமாக.

உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்க்கடவன். (மத் 20:26)

எஸ். யேசுநாதன்-துறைநீலாவணை.

## கவிதைப் போட்டி இல.382



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 18.11.2000

கவிதைப் போட்டி இல.382
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல379

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### பரிசுக்குரிய கவிதை

### வளமான வாழ்வு??

வாயில்லாச் சீவன்களுக்கே
வளமான வாழ்விருக்க;
வளமாக வாழ்ந்தோரின்று
வாய்க்குணவு தானுமின்றி
வக்கற்று நடுத்தெருவில்
வாழ்கின்றார் பாருமையா??

காரைதீவூர் சிவம்-

### அரியாசனம்

பெண்ணே! நீ அரியாசனத்தில் அமர்ந்து
ஆனந்தப்படுவது,
உன் கீழ் இருப்பவர்களெல்லாம்
நன்றி உடையவர்கள் என்பதால்!

வ. பாலமுருகன்-கொக்குவில் கிழக்கு.

### நன்றியுள்ள இனம்

செய்த நன்றியை மனித இனம் மனதினால்
மரணித்து விடும் என்று தானோ பெண்ணே,
சேர்ந்துவிட்டாய் நன்றியுள்ள நாய் இனத்துடன்?

எஸ். ராஜ்குமார்-வவுனியா.

### அடைக்கலம்!

ஐந்தறிவு படைத்த ஜீவன்களுக்கு
இருக்கும்; இன ஒற்றுமையும்-அன்பான,
அடைக்கலமும்-இன்று
ஆறறிவு படைத்த மானிடனுக்கில்லை!
ஓ.... அவை, வாய் பேசா ஜீவன்கள் என்பதாலா?

கி. ஆனந்தி-வத்தளை.

### அரவணைப்பு

அநாதை அகதிகள் அவனியிலே
அல்லல்பட்டிடும் போரினிலே
அனைத்தும் இழந்து பரிதவிக்கையிலே
அன்னை நிகர் உன் மடியினிலே
இந்த காவலர்களுக்கு மட்டும்
தான் இடம் உண்டோ?

ஏ. எம். பாதிமா மர்சூகா-ஹபுகஸ்தலாவை.

### தேவைதானோ?

எங்களுக்கோ என்றுமே
ஒரே சீமாட்டி தான்-மனிதா!
உங்களுக்கோ? அய்யகோ!
எல்லாருமே மந்திரிகள்!

ச. மகாலிங்கம்- வெலிமடை.

### சுடுகாடு

நன்றியை 'சென்றி' வைத்து
நடுவில் ஒளித்திருந்தாலும்
சென்றிடத்தான் வேண்டும் ஒரு நாள்
சொல்லாமல் நீ சுடுகாடு!

த. தமயந்தி-சாம்பல்தீவு.

### காவல்

எஜமான் வரும் வரை
எஜமானியைச் சுற்றி
ஏவலர் போன்று
காவல் புரியும்
நன்றிமறவா நாய்கள்

அ. யாழினி-மட்டக்களப்பு.

### நட்பு!

நன்றி கெட்ட-சில
மனித ஜென்மங்களை விட
நன்றியுள்ள நாய்களே
நட்புக்கு மேலடா!

ஏ. ஏ. மொஹமட் அஸ்ரின்-கற்பிட்டி.

### காவலர்கள்

பாடுபட்டுப் பணத்தை
கோடி கோடியாய்
தேடி வைத்த இவனுக்கு
காடு செல்லும்வரை
காவலர்கள் இவைகள்!

சோ. சங்கரலிங்கம்-
திருப்பழுகாமம்-02.

### பாதுகாப்பு

தரித்திரம் கண்டு,
சரித்திரம் படைத்த
ஏழுசேய் நல்லதங்காள்
அல்ல நான்...!
ஏழு நாய் எசமானி
எல்லாம் என்
பாதுகாப்பிற்காகவே...!

பாஜினா நஸீர்-மாத்தளை.

### வேசம்

வேசம் போடும்
மனிதர் நடுவில்
பாசம் உள்ள
நாய்களை-பார்

தியோப்பிளஸ்-
மட்டக்களப்பு.

### சிந்தி!

பெண்ணே! நீ
நாய்களை வளர்ப்பதை விட
நாதியற்ற
பிள்ளைகளை வளர்க்கலாமே?

ஞா. நிரஞ்சன்-சிலாபம்.

# வாசக[ர்]சாலை

'தமிழ் அரசியலின் பலப்பரீட்சை கூட்டணிக்கு வந்தது சோதனை!' என்னும் கட்டுரை,

இனப்பற்றற்ற தமிழ் கட்சியொன்றின் அரசியல் சாயத்தை வெளுக்க வைத்தது. 'சிந்தியா பதில்களில்' யதார்த்தம் அதிகம். கீப்....இட்....அப்.

ஏ. என். எம். ஜவாத்-புத்தளம்.

அன்பான முரசே!

உன் இனிமையான பாகங்களில் வரும் பொன்னான ஆக்கங்கள் அனைத்தும் இனிமையிலும் இனிமை. எனவே இன்னும் உன் ஆக்கங்கள் திறம்பட எனது தீபாவளி வாழ்த்துக்கள்.

எஸ். சச்சி-ஸ்ரீநாராயணபுரம்.

அன்பின் முரசே! ஞாயிறு தோறும் எம் கரங்களில் வந்து எங்களை சந்தோஷம் அடையச் செய்யும் உனக்கு எப்படி நாங்கள் நன்றி சொல்வோம்? முரசே நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமையப்பா. உன் சேவை மென்மேலும் வளர்ச்சியடைய என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

லதா-குவைத்

வாரத்தில் ஒரு முறை மலரும் தினமுரசு வார மலரில் இடம் பெறும் ஒவ்வொரு பக்கமும் பலவித அம்சங்களை அள்ளி வருகின்றது. அரசியல் கட்டுரைகள், நாட்டு நிலவரங்களை அவ்வப்போது சுவைபடவும் தருகிறது. 'அண்டை மண்டலத்தில்' பகுதியில் இடம்பெறும் கட்டுரைகள், சிறுகதைகள் தெரியாத பல விடயங்களை விரிவாக அறிய முடிகின்றது. அத்தோடு தொடர் கதைகள், தொடர் கட்டுரைகள், சிறுகதை, சினிமா, 'பாப்பா முரசு', 'தேன் கிண்ணம்' போன்ற இன்னோரன்ன அம்சங்களும் தினமுரசை மெருகூட்டுகின்றன.

ஏ. சீ. எம். முஸம்மில்-குளியாப்பிட்டிய.

தமிழர்களை விழிக்க வைக்கும் எம் இனிய தினமுரசே! உன் எதிர்வு கூறல் திறமையை என்னவென்று சொல்லுவது? உனது பக்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மணம் வீசும். 376ல், 377ல், 378ல், முரசின் தேர்தல் கணிப்பு மிகச் சரியாகவே அமைந்து விட்டது. மகத்தான இக்கணிப்புகள் முரசின் மூச்சு!

'எக்ஸ்ரே ரிப்போர்ட்' ஆசிரியருக்கு என்றென்றும் எனது நன்றிகள்!

அ. அச்சுதன்-சேனையூர்.

முத்தான முத்தமிழ் முரசே!

நீ சுமந்து வரும் அனைத்தும் பிரமாதம். வியாழன் வரை என்று ஏங்கும் ரசிகைகளில் நானும் ஒருவத்தி. மற்றும் எனக்கு மிகவும் பிடித்தது 'மோனிக்கா என் மோனிக்கா', 'அதிரடி அய்யாத்துரை', 'சிறுகதைகள்' நீ சுமந்து வரும் அனைத்துமே மிக மிக அற்புதம். அற்புதனின் மறைவு பல ஆண்டுகளானாலும் கூட முரசு நினைவு காட்டுவார். முத்தான முத்தமிழ் முரசே உன் சேவை என்றும் நீண்ட காலம் வலம் வர வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்.

லலிதா-மஸ்கெலியா.

இனிய தமிழ் முரசே!
உனது சேவை
தொடர எனது
நல்வாழ்த்துக்கள்.
உன்னில் என்னை
கவர்ந்தவை–
'அதிரடி அய்யாத்துரை',
'மோனிக்கா என்
மோனிக்கா',
'நில் கவனி முன்னேறு',
'பாப்பா முரசு',
'கலையுலகில் கருணாநிதி',
'சிந்தியா பதில்கள்',
'ஸ்போர்ட்ஸ்' என்பன
எனக்கு மிகவும்
சுவைத்தவை. மேலும்
முரசு 377ல்
டொன்பிரட்மனின் பட
அல்பம் பிரமாதம்.
தொடர்ந்து இதுபோன்ற
அல்பங்களை தொகுத்து
தரவும்.
உனது நலன் விரும்பி,

சி. லவன்.

அன்பின் முரசே...

உனது பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருத்தி. உன்னை வியாழன் தோறும் பெறுவதில் மட்டில்லா மகிழ்ச்சி தான்.

முரசு 380ல் நீ தாங்கி வந்த அத்தனை அம்சங்களும் அருமையே.

முரசின் சிறுகதை 'பதிவு திருமணம்' நன்று. 'சீதனம் இல்லாத வாழ்க்கை கேட்டேன்', 'தேன் கிண்ண'த்தை அலங்கரித்தவை. எல்லா அம்சங்களும் பிரமாதம்.

அதையெல்லாவற்றையும் விட, முத்தான அம்சங்களை தித்திக்கும் வகையில் தாங்கி வரும் உந்தன் வருகை அசத்தலானது.

ந. புஷ்பமலர்-ராகமு.



எனது அன்பு முரசே! வியாழக்கிழமை என்றால், விடிந்தால் வந்து விடும் நீ பொதறிவுகளையும், சிறுகதைகளையும், சுவாரசியமான செய்திகளையும் வெளியிடுவதற்கு எனது நன்றிகள். முரசில் சிறுவர் ஆக்கங்களை சேர்த்துக் கொள்வதே எனது விருப்பம். உன் புகழ் பல ஆண்டுகள் வாழ்ந்து மக்கள் மத்தியில் ஆணி வேர் போல் ஊன்றி வாழ எந்நாளும் என் வாழ்த்துக்கள்.

சு. தர்மினி-வவுனியா.

வாரத்தில் ஒரு முறை வாசகர் நெஞ்சங்களை வட்டமிடும் தினமுரசே! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. அதில் 'அதிரடி ஐய்யாத்துரை', 'தகவல் பெட்டி', 'இலக்கிய நயம்' அனைத்தும் அருமை.

பி. ஆறுமுகம்-அக்கரபத்தனை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):– 074-513266


### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# நோர்வே காட்டிய பாதையில் நாட்டில் அமைதி தோன்றட்டும்

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகர னுடன் நோர்வே நாட்டின் அமைதிக்கான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்து உரையாடினார் என்ற செய்தி நாட்டு மக்கள் மத்தியில் பெருமகிழ்ச்சி ஆரவாரத்தை ஏற்படுத்தியது. எந்தவிதமான சுயநல அடிப்படையுமில்லாமல் பொதுவான நல்லெண்ணம் ஒன்றையே கொண்ட நோர்வே நாட்டின் வழிகாட்டலை அடியொற்றி அரசாங்கமும் ஏனைய அரசியற் கட்சிகளும் அமைதிப் பேச்சு வெற்றியளிக்க சகல ஒத்துழைப்பையும் வழங்க வேண்டுமென்றே இந் நாட்டின் மக்கள் அனைவரும் ஒரே மனதாக விரும்புகின்றனர்.

இலங்கையில் மிகப் பாரதூரமான சீரழிவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இனப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்து, இந்நாட்டில் சமாதானமும் அமைதியும் நிலைபெறவேண்டும் என்று இந்நாட்டு மக்கள் மட்டுமல்ல, உலகநாடுகள் பலவற்றிலும் கூட எண்ணம் எழுந்துள்ளது. அமைதிக்கான முயற்சியில் தன்னை ஈடுபடுத்திய நோர்வே நாட்டின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல் ஹெய்ம், ஏற்கனவே பல தடவைகள் இங்கு வந்து அரசாங்கத்துடனும் வேறு பல அரசியல் கட்சிகளுடனும் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். ஐரோப்பிய நாடுகளிலுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுடனும் சந்திப்புக்களை ஏற்படுத்தினார்.

நோர்வே நாட்டின் இந்த அமைதி முயற்சிகளுக்கு இந்த நாட்டிலுள்ள சில தீய சக்திகள் பலதரப்பட்ட முட்டுக் கட்டைகளைப் போட்டும் கூட, அவர்கள் கவலைப்பட வில்லை. தாம் மேற்கொண்ட முயற்சியில் துணிந்து இறங்கினர். எவருமே எதிர்பாராத நிலையில் வன்னிக் காட்டுக்குள் சென்று விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனையும் சந்தித்து உரையாடிவிட்டு வந்துள்ளனர்.

கடந்த பல வருடங்களாக எந்த வெளி நாட்டவரையும் சந்தித்து உரையாட விரும் பாத பிரபாகரன் அவர்கள் நோர்வே நாட் டின் சமா தானத் தூதுவரைச் சந்திக்க முன்வந்தமை உண்மையில் திரு.சொல் ஹெய்ம் அவர்களின் ஓர் அரிய சாதனை என்றே கருத வேண்டும்.

தங்கள் நாட்டுடன் சிநேக பூர்வமான உறவைக் கொண்டுள்ள ஒரு நாட்டில் சமா தானம் நிலவ வேண்டும், அங்கு வாழும் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் உறவு கொண்டு வாழ வேண்டும் என்ற ஒரே நோக்குடன் மட்டுமே இந்த அமைதிப் பேச்சில் அந்நாட்டுப் பிரதிநிதிகள் இறங்கியுள்ளனர். ஆனால் இந்த நாட்டிலுள்ள பேரினவாதிகள், சுயநலமெதுவுமற்ற அந்த நாட்டின் முயற் சிக்குக் களங்கம் கற்பிக்க ஆரம்பித்திருப்ப தானது துரதிஷ்டமானதே.

சகலதுறைகளிலும் இந்த நாடு அதள பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக் கிறது. செல்வ வளங்கள் அனைத்தும் சின்னா பின்னப்பட்டுப் போயின. விலைமதிப்பற்ற மனித உயிர்களும் உடமைகளும் அழிந் தொழிந்து போகின்றன.

யுத்தத்தின் கோரப்பிடியினால் நாடே தீப்பற்றி எரிகிறது. இந்த நிலையிலும் கூட அமைதியையும் சமாதானத்தையும் விரும் பாத எவரும், இந்த நாட்டின் நலனில் அக் கறைக்காட்டாத தேசத் துரோகிகள் என்று தான் கூறப்படவேண்டும். நாட்டுப்பற்று, மனிதாபிமானம் சிறிதளவேனும் அவர்களிட மிருக்குமானால், எப்பாடுபட்டாவது இந்த நாட்டில் சமாதானம் ஓங்கவேண்டும் என்று தான் எண்ணுவார்கள். இந்த நாட்டு மக்கள் சகலரும் எந்தவிதமான பேதமுமின்றி அமைதியும் சமாதானமும் நிலைபெற வேண்டுமென்றே விரும்புகிறார்கள். எனவே இன்று ஏற்பட்டுள்ள சூழ்நிலையைப்பயன் படுத்தி, விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சினை கூடிய விரைவில் ஆரம்பித்து எமது எதிர்கால சந்ததியினராவது ஒற்றுமை யுடன் வாழ உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இந்த நாட்டில் வாழும் சகல இனமக்களும், புத்தி ஜீவிகளும், வர்த்தக சமூகத்தினரும், மதங்களின் தலைவர்களும், அரசாங்கம் மேற்கொண்டு எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளை ஆர்வத்துடன் அவதானித் துக் கொண்டிருக்கின்றனர்.

அரசாங்கம் இந்நிலையில் எடுக்கப் போகும் நடவடிக்கைகள் பரிபூரணமான அமைதியை இந்நாட்டில் ஏற்படுத்த உதவட்டும். இதற்கு முட்டுக் கட்டை போடும் எவரையும் பொருட்படுத்தா மல் துணிவுடன் செயலில் இறங்க வேண்டும் என்பதே மக்கள் அனைவரினதும் வேண்டு கோளாகும்.

## வன்செயல்களில் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கல்!

(கண்டி நிருபர்)

பண்டாரவளை பிந்துனுவெவ முகாம் படுகொலைச் சம்பவத்தை அடுத்து தலவாக் கலை, நுவரெலியா, அட்டன் போன்ற இடங்களில் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு களை வழங்க அரசாங்கம் தீர்மானித்திருப்ப தாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த இரண்டாவது சம்பவத்தில் கொல லப்பட்டோர் எண்ணிக்கை 6 ஆகும். பொலி ஸார் சுட்டதில் ஏற்பட்ட மரணங்கள் இவை என தெரிவிக்கப்படுகின்றது. நூற்றுக் கணக் கானோர் இந்தச் சம்பவங்களினால் பாதிக் கப்பட்டிருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கண்டியில் குயீன்ஸ் ஹோட்டலில் 31ம் திகதி இடம்பெற்ற செய்தியாளர்களின் மாநாட்டில் இனவிவகார ஒருங்கிணைப்பு அமைச்சர் திரு.ரெஜி னோல்ட் குரேயிடம் கண்டிச் செய்தியாளர்கள் இந்த இரு இடங்களிலும் இடம்பெற்ற வன் முறைகளையும் கண்டித்து உரைத்ததுடன் அமைதியுடன் வாழ விரும்பும் மலையகப் பிரதேச மக்கள் மத்தியில் இன ஒருமைப் பாட்டுக்கான சகல முயற்சிகளையும் உடனடி யாக தொடருமாறு மிகவும் வினயமாகக் கேட்டுக் கொண்டனர்.

## சேதமடைந்த வணக்கஸ்தலங்கள் விவரம் சேகரிப்பு

(காரைதீவு நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வன் முறைகளினால் சேதமடைந்த வணக்க ஸ்தலங்களின் விபரங்களை மாகாண கல்வி யமைச்சின் கலாசாரப்பிரிவு கோரியுள் ளது.

இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவா லயங்கள், இஸ்லாமிய பள்ளிவாசல்கள், பௌத்த கோவில்கள் என்பவற்றின் பூரண விபரங்களே அதில் கோரப்பட்டுள்ளன.

கலாசார உதவிப் பணிப்பாளர் எஸ்.எதிர்மன்னசிங்கம் அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருபத்திற்குரிய விபரங்களை அவ் வப்பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் அனுப்பிவைப்பார்கள்.

வணக்கஸ்தல நிருவாகிகளும் ஒத் துழைப்பு வழங்கவேண்டுமென்று அவர் மேலும் கோரியுள்ளார்.

## ஆதாரம் இல்லாமல் தான் கைதுசெய்யப்பட்டமைக்கு ம.ம.மு. தலைவர் சந்திரசேகரன் கண்டனம்

பிந்துனுவெவ சம்பவத்தின் பின்னர் தலவாக்கலையில் அமைதியின்மை ஏற்பட்ட தைத்தொடர்ந்து "எவ்விதமான ஆதாரமோ அடிப்படையோ இல்லாமல் நான் கைது செய்யப்பட்டேன். நகரில் கொள்ளைகளும் தீவைப்புச் சம்பவங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது தான் நான் கைது செய்யப்பட்டேன். என்னைச் சார்ந்த மக்கள் துன்ப துயரங்களுக்கு ஆளாக்கப்பட்டு துடித் துக்கொண்டிருக்கின்ற பொழுது என்னை கைது செய்தமை உண்மையில் வேண்டு மென்றே திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப் பட்ட தீய நோக்கம் கொண்ட செயலாகும்!"

இவ்வாறு திங்கட்கிழமை அன்று விடு தலை செய்யப்பட்ட ம.ம.முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

"பிந்துனுவெவ சம்பவத்தின் பின்னர் மலையக மக்களின் மனக் கொதிப்பினையும் கண்டனத்தையும் வெளிப்படுத்துவதற்காகவே கடந்த 29ம் திகதியை துக்கதினமாகப் பிர கடனப்படுத்தினோம். ஆனால் துரதிஷ்டவச மாகப் பல சம்பவங்கள் நடந்து முடிந்துவிட் டன. மக்கள் மத்தியில் மலையக மக்கள் முன் னணிக்கு களங்கம் கற்பித்து முன்னணியை ஒழித்துக்கட்டிவிடலாம் என்று கருதிய சிலரின் சூழ்ச்சியும் சதியும் சேர்ந்தே என்னையும் எமது முன்னணியின் முன்னோடிகளையும் சிறையிலடைக்க திட்டங்கள் வகுக்கப்பட்டிருப் பதை நானறிவேன். சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காகவும் ஜனநாயகத்துக்காகவும் சாத்வீகமான முறையில் போராடிவரும் எமது கடமையிலிருந்து எம்மைத் திட்டமிட்டு ஒழித்துக் கட்டும் முயற்சி என்றுமே பலிக்கப் போவதில்லை என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்!" என்று திரு. சந்திர சேகரன் தனது விடுதலைக்குப் பின்னர் கொழும்பில் வைத்து தனது ஆதரவாளர்கள் மத்தியில் தொடர்ந்து கூறினார்.

## மோதல்களில் உயிரிழந்த புலிகள் புலிகள் வெளியிட்ட பட்டியல்!

திருமலைத் துறைமுகத் தாக்குதலில் பலியான 6 கரும் புலிகளின் பெயர் விபரங் களைப் புலிகளின் குரல் வானொலி அறிவித் துள்ளது.

ஒரு வாரத்திற்குள் இருமுறை திரு மலைத் துறைமுகத் தாக்குதல் திட்டமிடப் பட்டது. முதலாவது தாக்குதலில் லெப்டி னன்ற் ஜெனரல் இரும்பொலி, கரும்புலி சதாசிவம், மேஜர் லஷ்சலா, மேஜர் நிலவன் ஆகிய நால்வர் கொல்லப்பட்டிருக்கின்ற னர்.

இரண்டாவது தடவை திட்டமிடப்பட்ட தாக்குதலில் கடற்கரும்புலி சிவராஜா-ஸ்ரீதரன் (மேஜர் சுடர்மணி), லெப்டினன்ற் ஜெனரல் முருகேசு-பிறேம்குமார்(நரேன்) ஆகிய இருவர் கொல்லப்பட்டிருக்கிறார் கள்.

கிளாலியில் எதிர்பாராமல் படையின ரிடம் சிக்கிய லெப்டினன்ற் ஜெனரல் யோ.ஜோர்ஜ் மனோ (தர்ஷன்) மட்டுவிலில் இடம் பெற்ற தாக்குதலில் விஷேட எல்லைப் படையைச் சேர்ந்த சிவலிங்கம்-இதயவர்மன் (ரவி) கொல்லப்பட்டுள்ளார். மன்னாரில் இடம்பெற்ற மோதலில் சண்முகம் ரவீந்திரன் (சுசீலன்-மட்டக்களப்பு) 2ம் லெப்டினன்ற் ஆகியோர் கொல்லப்பட்டதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

## திருமலை அகதிகளுக்கு உதவி! நலன்புரி சங்கத்தின் பணி!

திருகோணமலை மாவட்ட அகதிகள் நலன்புரிச் சங்கம் சேருவிலைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆதியம்மன் கோவிலடி மீள்குடியேற்ற கிராமத்திலுள்ள விதவைப் பெண்களுக்கு அவர்கள் ஜீவனம் நடத்துவதற்கான பொருளாதார உதவிகளை வழங்கியுள்ளது.

19 விதவைகளுக்கு ஒரு ஏக்கர் விவசாயத் துக்காக ரூபாய் 8000/- வழங்கப்பட்டது. 7 விதவைப் பெண்களுக்கு ஆளுக்கு 5 ஆடுகள் வீதம் வழங்கப்பட்டன. 11 விதவைக் குடும்பங்களுக்கு 2000/- பெறுமதியான உடைகள் இரண்டு ஆடுகள் வீதமும் வழங்கப் பட்டுள்ளன. 3 விதவைப் பெண்கள் ஆளுக் கொரு தையல் இயந்திரத்தை பெற்றுள்ளார்கள்.

அத்துடன் வன்செயலால் பெற்றோரை இழந்த திருகோணமலை மாவட்ட மாண வர்கள் 60 பேருக்கு ஒன்றரை வருடங்களுக் காக மாதாந்த உதவிப் பணம் வழங்கப்பட்டு வருகிறது. மாதாந்தம் க.பொ.த. சாதாரண மாணவர்களுக்கு 250/- வீதமும் உயர்தர மாணவர்களுக்கு 300/- வீதமும் பல்கலைக் கழக மாணவர்களுக்கு 400/- வீதமும் வழங் கப்பட்டு வருகிறது.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கூங்கான்குழி கிராமத்தில் வீட்டுத்தோட்டத்திற்காக நீர் இறைக்கும் இயந்திரமும் தெளிகருவிகளும் வழங்கப்பட்டு இருப்பதாக அகதிகள் நலன்புரி சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

## மலையகத்தில் தொடரும் கைதுகள்

நுவரெலியாப் பகுதியில் சுமார் 80ற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகள் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

பண்டாரவெல-பிந்துனுவெவ புனர் வாழ்வு முகாம் தாக்கப்பட்டத்தை தொடர்ந்து மலையகப் பகுதிகளில் தமிழ் மக்கள் மீதான நெருக்கடிகள் பல்வேறு வழிகளில் அதிகரித் துள்ளன. அந்தவகையிலேயே தொடர்ந்து தோட்டப்புற இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். தோட்டத் தொழி லாள மக்களை எந்நேரமும் அச்சத்துடனும் பீதியுடனும் காலங்கழிக்க வைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே பல அதிகாரத் தரப்பார் செயற்பட்டு வருவதாகவும் கவலை தெரிவிக் கப்படுகிறது.

மலையகப் பகுதிகளில் சோதனைக்கெடு பிடிகளும், நெருக்கடிகளும் அதிகரித் துள்ளன.

## ஒருடலுக்கு உரிமைகோரும் இரு குடும்பத்தினர்?

பண்டாரவளை-பிந்துனுவெவ முகா மில் படுகொலை செய்யப்பட்ட இளைஞர்கள் பலரது உடல்கள் சிதைக்கப்பட்டும் எரிக்கப் பட்டும் இருந்ததால் ஒரே உடலுக்கு இரு பெற்றோர் உரிமை கொண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை அலஸ்தோட்டம் அகதி முகாமைச் சேர்ந்த கனகசிங்கம் பிரபாகரன் திருகோணமலை துவரக்காட்டை அடுத் துள்ள புதுக் குடியிருப்பைச் சேர்ந்த சுந்தர லிங்கம் சிவசங்கர் ஆகிய இரண்டு இளைஞர் களின் பெற்றோர்களும் ஒரே உடலை தங் கள் பிள்ளைகள் என்று சாதிக்கப் போய் எவரிடமும் உடல் ஒப்படைக்கப்படாத நிலமை தோன்றியுள்ளது. கொழும்பு ஆஸ்பத் திரியில் வைக்கப்பட்டு உடல் அரச செலவில் அடக்கம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

பிரபாகரனின் தாயார் கனகசிங்கம் பூபதியை முரசு சந்தித்தபோது, அந்த உடல் தன்னுடைய பிள்ளையுடையதே என்று சாதிக்கிறார். 1983 ஆனி மாதம் 18ம் திகதி பிறந்த பிரபாகரன் குடும்பத்தின் மூத்த பிள்ளை நான்கு சகோதரர்கள் இருக்கிறார் கள். தந்தை ஒரு கடற்தொழிலாளி.

சிவசங்கருடைய தந்தையார் சுந்தர லிங்கம் "எனக்கு தெரியாதா என் பிள்ளையின் அடையாளங்கள்? அந்த உடல் எனது மகனுடையது" என்று அடித்துக் கூறுகிறார். விறகுவெட்டும் தொழிலாளியான சுந்தரலிங் கத்தின் இரண்டாவது மகன் சிவசங்கர் 1983 ஏப்ரல் 23ம் திகதி பிறந்த சிவசங்கருக்கு வாய்பேசாத ஒரு அக்கா மாத்திரம் இருக் கிறார். கடன் நிலமை காரணமாக தனது பிள்ளை முகாமிலிருந்தபோது கேட்ட ஆயிரம் ரூபாயைக் கூட அனுப்பமுடியாது போய் விட்டதே என்று கண்ணீர்விடுகிறார் சுந்தர லிங்கம்.

இரு பெற்றோர்களும் தங்கள் பிள்ளை களின் உடலைக் கூட கையேற்று அடக்கம் செய்ய கொடுத்துவைக்காதவர்களாக இருக் கிறார்கள்.

## காணாமல் போன படையினரின் உறவினர் சங்கம் விடுத்துள்ள வேண்டுகோள்!

தென்னிலங்கையிலிருந்து படையில் சேர்க்கப்பட்டு மோதல்களின் போது காணா மல் போன தமது உறவினர்களைப் போய்ப் பார்ப்பதற்கு உதவுமாறு காணாமல் போன படைவீரர்களின் உறவினர் சங்கம் பாப்பரச ருக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக் கிறது. வன்னி செல்ல அனுமதி கோரி அரசாங் கத்திடம் இச்சங்கம் பல தடவைகள் அனுமதி கோரியும் அனுமதி மறுக்கப்பட்டு வந்தது.

இச்சங்கம் தங்கள் பிரச்சனையை சர்வ தேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வரு கிறது. இதனடிப்படையிலேயே பாப்பரசருக் கான கோரிக்கையை அனுப்பிவைத்துள்ள னர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தி னூடாகவும் இச்சங்கம் புலிகளுக்கு தம்மை அனுமதிக்குமாறு வேண்டுகோளை விடுத் திருக்கிறது.

இந்த வேண்டுகோளை புலிகள் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. வட பிராந் தியத்தில் போர்ச் சூழல் நிலவுவதால் இத் தகைய கோரிக்கையை தாம் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையிலிருப்பதாக புலிகள் அறி வித்துள்ளனர் என்று தெரிகிறது. வன்னியில் புலிகளிடம் 3000 வீரர்கள்வரை கைதிகளாக இருக்கலாம் என்று இச்சங்கம் கருதுகிறது.

## இனவிவகார ஒருங்கிணைப்பு அமைச்சரின் திட்டங்கள்!

(கண்டி நிருபர்)

இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பது தொடர்பாக நிருவாக ரீதியில் பல முன்னேற் பாடுகளை நடைமுறைப்படுத்த முன்பு தமிழ் மொழிக்கு வழங்கப்பட்டுள்ள உரிமையை முதலில் செயல் உருவில் கொண்டு வர வேண்டுமென இனவிவகார ஒருங்கிணைப்பு அமைச்சர் திரு. ரெஜினோல்ட் குரே கண்டியில் தெரிவித்தார்.

கண்டி, மாத்தளை, நுவரெலியா போன்ற மாவட்டங்களில் ஓடும் பஸ்களில் தனிச்சிங்களத்திலேயே பெயர்ப்பலகைகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. மூன்று மொழிகளிலும் இவை குறிப்பிடப்பட்டால் என்ன என தமிழ் ஊடகங்களின் செய்தி யாளர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் பதில் அளித்துப் பேசுகையிலே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

தமிழ் மொழிபெயர்ப்பாளர்களின் தட்டுப் பாடு நிலவுவதனாலும் இதன் பொருட்டு மாற்றுத் திட்டம் ஒன்றை விரைவில் கொண்டு வரப் போவதாகவும் தெரிவித்த அவர் தமிழ் தட்டெழுத்தாளர்களின் குறைபாடு இருப்பதால் மாவட்ட ரீதியாக இத்துறையில் பயிற்சியளிக்கவும் அதனூடாக தமிழ் அரச கரும மொழிச்சட்டத்தை மேலும் நடைமுறைப் படுத்தவும் உறுதி பூண்டிருப்பதாகவும் அவர் மேலும் சொன்னார்.

## கைதிகளை விசாரித்து விடுவிக்கவும் அல்லது இடம் மாற்றவும்

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெருந்தொகையான தமிழ் இளைஞர் யுவதிகள் கொழும்பு மற்றும் தென்பகுதிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

பல வருடங்களாக எதுவித வழக்கு விசாரணைகளுமின்றியும், விடுதலையின்றியும் அவர்கள் அவஸ்தைப் பட வேண்டியுள்ளது. சிறையிலுள்ளவர்களின் நலனை கவனிப்பதற் காகச் செல்லும் அவர்களது உறவினர்களும் வெவ்வேறு நெருக்கடிகளையும், பணக் கஷ்டத்தையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்த கஷ்டங்களை போக்குவதற்காக மட்டக் களப்பைச் சேர்ந்த கைதிகளை மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கே மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவும் என்று மட்டக்களப்பு ஐ.தே.க. எம்.பி. அலிஸாஹிர் மௌலானா அரசைக் கேட்டுள்ளார்.

சிறைக்கைதிகள் மீதான வழக்கு விசா ரணைகளைத் துரிதப் படுத்தி சிறையிலுள் ளோரின் அவலங்களையும் அவர் தம் குடும்பத்தினர் அனுபவிக்கும் வேதனைகளை யும் போக்குமாறும் மௌலானா எம்.பி. தனது வேண்டுகோளில் கேட்டுக் கொண்டுள் ளார்.

## "அதிபர் மரணமடையவில்லை"

(காரைதீவு நிருபர்)

பாடசாலையொன்றுக்கு விஜயம் செய்த ஆசிரிய ஆலோசகர் ஒருவர் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் "பாடசாலையில் அதிபர், ஆசி ரியர்கள் இல்லை. தொண்டராசிரியர் ஒரு வரே கடமையிலுள்ளார்" என்று எழுதிவிட்டு வந்திருக்கிறார்.

பிரஸ்தாப அதிபர் வெளியில் இரு நாட்கள் சென்றிருந்தபோதும் மேற்படி புத்த கத்தில் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

மூன்றாம் நாள் கடமைக்குவந்த அதிபர் சம்பவத்திரட்டுப்புத்தகத்தைப் பார்த்துவிட்டு இப்படி எழுதியுள்ளார்.

"அதிபர் மரணமடையவில்லை, அதிபர் பயிற்சிவகுப்புக்கு சென்றிருந்தார்."

சம்பவத்திரட்டுப்புத்தகம் படும்பாடு பார்த்தீர்களா? இச்சம்பவம் கிழக்கில் ஒரு பாடசாலையில் இடம்பெற்றுள்ளது.

# 1வது பிறந்த நாள் வாழ்த்து



**செல்வி-பிரியங்கா**

**12.11.2000**

கொக்குவில் 3கணியடியைச் சேர்ந்த திரு.திருமதி. சாந்தகுமார்-வனிதா தம்பதிகளின் செல்வப் புதல்வி பிரியங்கா தனது முதலாவது பிறந்த நாளை 12.11.2000 அன்று பருத்தித்துறையில் உள்ள தமது இல்லத்தில் மிக விமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா,அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரிய மாமா, மாமி (சுவிஸ்), பாஸ்கர் மாமா, பிரபு மாமா(லண்டன்) சித்தி, சிறிமாமா, அத்தைமார், உறறார், உறவினாகள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

தகவல் : திரு.திருமதி.தங்கமயில்


---

உலகப் புகழ்பெற்ற

# எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காயச்சல்
- தலைச்சுற்று
- ஜலதோஷம்
- மூக்கடைப்பு
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை
- தலைவலி
- தலைப்பாரம்
- இருமல்
- பல்வலி



கோடாலித்தைலம்

Rs.25/= Only (3.ml)

**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

**SINGHA HOLDINGS (PVT) LTD**

**14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.**

**T.P : 888214 Fax : 682984**

---

**நீங்காத நினைவில் ஐந்தாண்டுகள் சென்றனவே**

உதயம்
31 ★ 07 ★ 1983



அஸ்தமனம்
11 ★ 11 ★ 1995

**செல்வன் புஸ்பநாதன் உதயசங்கர்**

(பருத்தித்துறை யாழ்/ஹாட்லிக் கல்லூரி, 7ம் ஆண்டு மாணவன்)

எமது குடும்பத்தின் ஒளி விளக்கே!
வானத்து நிலவொன்று வாசலில்
வந்ததென்று நீ வந்தாய்-எம் வீட்டிலே
துன்பத்தை மறக்கடித்து.
இன்பமதை தந்தவனே உதயா! உனை நினைத்து
வளர்த்திட்ட கற்பனைகள் ஒரு கோடி!
கனவுகளோ எண்ணிலடங்கா!
கனவுகளும் கலைந்தன.
கற்பனையும் முடிந்தது.
துயரமதை நாம் சுமந்து
நடைபிணமாய் வாழ்கிறோம் வையகத்தே
ஓம் சாந்தி!
பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

*தகவல்: அம்மா திருமதி ம.புஸ்பநாதன். மங்களகிரி, கரணவாய்மத்தி கரவெட்டி. (தற்போது வெள்ளவத்தையில்)*

---

**தபால் மூலம் விஞ்ஞானம்**

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்
Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: **குமார் சிவப்பிரகாசம்**

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்

**P.T.C** 14, Covington Road, Batticaloa.

---

**மனோதத்துவ வைத்தியம்**

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் நவம்பர் 20 முதல் 28 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 609388.

**கல்முனையில் டிசம்பர் 02, 03 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் நவம்பர் 11, 12 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNIINN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

---

# விளம்பரப் பகுதி



**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும்இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ∴பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
**Fax-00941344831.**
**Tel-00941431137.**
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
**01-466271-466571**

---



**வணக்கம்**



**இந்தியா**



**வாரீர் !**

# பிருந்தாவனம்

**தமிழகம் வருகை தரும் இலங்கை தமிழ் அன்பர்கட்கு,**
**இனிய செய்தி ! இனிய சேவை ! நீங்கள் செய்ய வேண்டியது**

**Just Dial To "BRINDAVANAM"**

**எமது இனிய சேவைகள்**

### கல்வி சேவை



இந்தியாவில் கல்வி கற்க விரும்பும் மாணவர்கட்கு பொறியியல், மருத்துவம், இசை, நடனம், பட்டதாரிப் படிப்புகளில் சேர கல்லூரிகளில் அனுமதி பெற்றுத் தரப்படும்.

### சுற்றுலா சேவை



இந்தியாவின் எழில்மிகு ரம்மியமான இயற்கை காட்சிகள் மற்றும் புனித ஆன்மீக ஸ்தலங்களையும் சுற்றி பார்வையிட, எம்மிடம் பாதுகாப்பான அனுபவம் வாய்ந்த வாகன ஓட்டுனர்களுடன் கூடிய நவீன ரக சொகுசு வாகனங்கள். **பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் நேரடி தரிசனத்திற்கு செல்ல விருப்பமுள்ளவர்களுக்கு சகல உதவிகளும் சேவை நோக்குடன் செய்து தரப்படும்.**

### தங்கும் இடவசதி



குடும்பத்தினருடன் பாதுகாப்புடன் தங்குவதற்கு சென்னை நகர மையப்பகுதியில் சகல வசதியுடன் கூடிய (ஏர்கண்டிஷன்) செய்யப்பட்ட சமையலறை வசதிகளுடன் கூடிய நவீன "Delux Guest House".

### திருமண விழா


தமிழகத்திற்கு வந்து திருமணம் செய்து கொள்ள வரும் அன்பர்கட்கு

- திருமணம் நடத்திவைக்க இலங்கை தமிழ் குருக்கள் (இலங்கைத் தமிழ் முறைப்படி)சகல ஆயத்தங்களுடன்
- இலங்கை தமிழ் திருமணமுறைப்படி மணவறை அமைப்பு



- திருமண மண்டபம்
- மங்கல வாத்தியங்கள் (மேளம், நாதஸ்வரம்)
- திருமண விழாவை என்றும் நினைவில் அடக்கிக்கொள்ள, புகைப்பட நிபுணர்களுடன் கூடிய வீடியோ, காமிரா படப்பிடிப்பு
- திருமண விழாவின் விருந்து சிறப்புற, அறுசுவை உணவு ஏற்பாடுகள்
- சட்டப்படி திருமணம் பதிவு செய்து இந்தியாவின் வெளியுறவு அமைச்சகத்திலிருந்து மிகக் குறுகிய காலத்தில் திருமண அத்தாட்சி பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும் (இப்பத்திரம் மணமக்கள் வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்ல, விசாவிற்கு மிகவும் அத்தியாவசியமானது).

### மருத்துவ சேவை



இந்தியாவின் பிரபல மருத்துவ நிபுணர்களையும், நவீன மருத்துவ உபகரணங்களையும் கொண்ட எமது **"சரவணா மருத்துவமனை"** உங்களுக்கு அனைத்து மருத்துவ பரிசோதனை மற்றும் மாற்று அறுவை சிகிச்சை செய்வதற்காக ஆம்புலன்ஸ் வசதியுடன் 24 மணி நேர சேவையில் உள்ளது. **வசதியற்றவர்களுக்கு இலவச மருத்துவ உதவி செய்யப்படும்.**

### விமான சேவை



இந்தியாவை குறுகிய காலத்தில் சுற்றி பார்க்க விரும்புவோர் 6 இருக்கைகள் உள்ள சிறந்த விமானிகளைக் கொண்ட தனியார் விமானங்களும் எமது சேவையில் உண்டு.

### பயண ஒழுங்குகள்



- வெளிநாடு செல்ல விரும்புவோர்கட்கு பயண ஆலோசனை வழங்கப்படும். இத்துடன் விமான டிக்கட் ஏற்பாடுகளும் செய்துத் தரப்படும்.
- உங்களை விமானநிலையத்திலேயே வரவேற்று உங்கள் இந்திய இனிய பயணம் நிறைவு பெறும் வரை எமது ஸ்தாபனம் ஊழியர்கள் உங்களுக்கு பாதுகாப்பாக உங்களுடனேயே இருப்பார்கள்.

**எமது சேவையை விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

**"பிருந்தாவனம்"**

Executive Suite Nos. 1 & 2, First Floor, Parsn Manere, 602, Anna Salai
(Old Gemini Studio Compound), Chennai - 600 006. Tamil Nadu, India.
✆:8209711/8209712/8239983, Fax:8254455, E-mail:brindavanam@hotmail.com

**நம்பிக்கை ★ உத்திரவாதம் ★பாதுகாப்பு**

எக்ஸ்ரே ரிப்போர்ட்

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைகளை அடுத்து மலையகத்தில் பரவிய குழப்பங்களும் அதன் விளைவுகளும் எம்மைப் பலமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக்கியுள்ளன. இதனால் விளைந்த பாதிப்புக்கள் வெறும் உடல் ரீதியானதும் பொருளாதார ரீதியானதுமல்ல. அதைவிட ஒரு சமூக அச்சுறுத்தலுக்கும் இது வித்திட்டுள்ளது.

பிந்துனுவெவ சம்பவம் சாதாரணமாக எடுத்துக் கொள்ளப்படக் கூடிய ஒன்றல்ல. நாட்டின் ஒரு பகுதியில் வாழும் மக்கள் ஒரு திரளாகத் திரண்டு இவ்வாறான புனர்வாழ்வு முகாமைத் தாக்கி, அங்கிருந்த கைதிகளில் 29 பேரைக் கொலை செய்வதென்பது ஒரு தற்செயல் நிகழ்வல்ல . இச்சம்பவத்தை இவ்வாறு இப்பகுதி மக்கள் தான் நடத்தினரா என்பதும் நம்பக்கூடிய ஒன்றல்ல. அம்மக்களுக்கு அவ்வாறு இக்கைதிகளைத் தாக்கிக் கொல்ல வேண்டுமென்று என்ன தேவை வந்தது என்பது ஆச்சரியத்துக்குரியது. அப்படி ஒர் இனவாத வெறிதான் அம் மக்களுக்கிடையே நிறைந்திருந்ததென்றால், அது பண்டாரவளைப் பிரதேசத்தில் குடியிருந்த பல தமிழ் முஸ்லிம் மக்களை நோக்கியல்லவா பாய்ந்திருக்க வேண்டும்? மாறாக இது சிறைப் பொறுப்பதிகாரிகள் எங்கு சென்றிருந்தார்கள் ஏன் மறைந்து போனார்கள் என்பவை குறித்த எந்த விளக்கமும் தெரியப்படுத்தப்படவில்லை. ஒரு முறைக்கு இருமுறை நிகழக்கூடியதாக இருந்த இப்படுகொலைகளுக்கு எந்த ஒருவரும் பொறுப்பாளியாக இனங்காணப்படவும் இல்லை. முழு உலகமும் அறிந்த இப்படுகொலைகள் அப்படியே மூடி மறைக்கப்பட்டன. ஆனால் இப்படுகொலைகளின் போது, தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் போன்ற தமிழ்ப் போராளித் தலைவர்களை நாம் இழந்தோம்.

இதே போன்று வகையான படுகொலையாகவே இப் பிந்துனுவெவ படுகொலைகளும் அமைந்துள்ளது. இங்கு வைக்கப்பட்டிருந்த கைதிகள் பெரும்பாலும் புனர்வாழ்வுக்காக வைக்கப்பட்டிருந்தவர்கள். அதாவது புலிகள் இயக்கத்திலிருந்து கைதாகும் போது அவர்களின் கட்டுப்பாட்டின்படி சயனைட் அருந்தாது கைதானவர்கள், அல்லது சரணடைந்தவர்கள். அவ்வாறானவர்களை புலிகளின் ஒழுக்கத்தை மீறியவர்களாக அவர்கள் கருதக்கூடிய அதேவேளை, அரசாங்கம் தீவிரவாதத்திலிருந்து திருந்தக்கூடியவர்களென்ற கருத்தில் புனர்வாழ்வுக்காகப் பயிற்றுவிக்க விழைந்திருந்தது. இப்படியானவர்களையும் படுகொலை செய்யத் துணிந்ததனால் இங்கு வெளிப்படுத்தப்படும் செய்திகள் மிகவும் பாதகமானவை.

களை மறுதலிப்பதற்கான நியாதிக்கத்தை வழங்குமென்றோ நினைத்திருந்தால், அது வடிகட்டிய முட்டாள்தனமாகவே அமையும். 83 ஜூலைக் கலவரத்தைப் போல் தமிழ் மக்களைப் பாதித்தது எதுவுமில்லை. இருந்தும் அக்கலவரத்தால் ஆயுதப் போராட்டம் மிக உயர்ந்த ஒரு கட்டத்துக்குப் பெருக்கெடுத்ததேயன்றி அடங்கி ஒடுங்கிவிடவில்லை. அத்தோடு 'யுத்தமென்றால் யுத்தம், சமாதானமென்றால் சமாதானம்' என்று சவால்விட்ட அன்றைய ஜனாதிபதி ஜே.ஆரே பின்னர் இந்திய-இலங்கைச் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட நிர்ப்பந்திக்கப்பட்டார். அத்தோடு தமிழ்ப் பேசும் மக்களின் நியாயபூர்வமான உரிமைகள் பற்றிய கோரிக்கை மேலும் வலுவடைந்து நின்றதேயன்றி கைவிடப்படவில்லை. தற்போதைய ஜனாதிபதிகூட தீர்வுத் திட்டம் என்று ஒன்றை முயற்சிப்பதுகூட இத்தகைய தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகள் பற்றிய கேள்விக்கு பதிலளித்தாக வேண்டுமென்ற கட்டாயத்தின் பேரிலேயே.

எனவே இச் சம்பவங்களால் அவர்கள் எந்தவித அனுகூலத்தையும் ஈட்டிவிடப் போவதில்லை.

இதேவேளை இப் படுகொலைகள் குறித்து ஏற்பட்ட எதிர் வினைகள் பற்றியும் நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம். எவ்வாறு இச் சம்பவம் அதன் விடப்பட்ட நிலையில்தான் முறுகல் நிலமை தோன்றியது. அத்தோடு அக்கொட்டிலிருந்து கொட்டகலை வரை ஒரு பெரும் ஊர்வலம் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அப்படியான ஊர்வலத்தின் வழிவழியே இடையிலுள்ள எஸ்டேட்டுகளிலிருந்து சனத்திரள் வந்து சேர்வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்படியான ஒரு பாரிய ஊர்வலம் நடக்குமாயின் அது சிங்கள எதிர்ப்புப் பேரணியாக, கட்டுப்பாட்டை மீறிய விபரீத நடவடிக்கைகளில் இறங்கிவிடலாம் என்ற அச்சம் தலைதூக்கியிருந்தது. ஆனால் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதால் அவ் ஊர்வலம் நடக்கவில்லை. எனினும் ஹட்டனில் அவ்வூர்வலத்துடன் இணைவதற்காக எஸ்டேட்டுகளிலிருந்து ஊர்வலமொன்று வந்தபோது இராணுவத்தினால் இடை மறித்து கலைக்கப்பட்டது. அவ்வாறு கலைக் கப்பட்டவர்கள் இராணுவத்துக்கு எதிர்ப்புக் காட்டியபடி கொட்டகலைக்குச் சென்றனர்.

புனர்வாழ்வு முகாமில் கொல்லப்பட்ட ஒரு மலையகத் தமிழ் இளைஞர் கொட்டகலை வாசியாவார். அவரது உடல் கொட்டகலைக்கு கொண்டுவரப்பட்டது. அப்போது கொட்டகலையில் பதட்டம் நிலவியது. அங்கு கடையடைப்பு நடத்தப்பட்டது. அதன்போது அங்கிருந்த சிங்களக்கடைகளை மூடும்படி தாலும், எதிர்க் கட்சிகள் சட்ட நடவடிக்கைகளில் இறங்க முற்பட்டதாலும் அரசாங்கம் அவரை நவம்பர் 6ம் திகதி விடுவித்தது.

இவ்வாறிருக்க, ஹட்டனைச் சுற்றிய பகுதிகளில் சிங்களவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் நடைபெற்றன. வட்டகொட ரெயில் நிலையத்தில் ரெயில் பெட்டிகள் 4 எஞ்சினுடன் எரிக்கப்பட்டது. வட்டவளை நகருக்கு அண்மையிலிருந்த சிங்களக் கொலனியொன்று தாக்கப்பட்டது. ஹட்டனை அண்டிய குயில்வத்தை எனும் எஸ்டேட்டிலிருந்த சில சிங்களப் பெட்டிக் கடைகள் எரிக்கப்பட்டன. காயத்துக்குள்ளாகிய பல சிங்களவர்கள் வைத்திய சிகிச்சைக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

பொகவந்தலாவையில் பொலிசை வெளியேற விடாது வீதிகளுக்கு மரம் தறித்து வழிமறிக்கப்பட்டிருந்தது. பின்னர் இராணுவம் வந்தே அவ் வழிகளை துப்பரவு செய்து பொலிஸார் நடமாட வழிசெய்தது.

இவற்றின் எதிரொலி மலையகத்திலிருந்து வெளியேறும் பகுதிகளில் நிகழ்ந்தது. கினிகத்தேனையில் தமிழர்களின் வாகனங்கள் வழிமறிக்கப்பட்டுத் தாக்கப்பட்டன. பஸ்கள் நிறுத்தப்பட்டு தாக்கப்பட்டன.

இவ்வாறான ஒன்றுக்குப் பதில் ஒன்றென்ற வகையில் அசம்பாவிதங்கள் மாறிமாறி நிகழ்ந்து ஒரு குட்டி இனக்கலவரத்தை

# மலையகக் குழப்பங்கள்

# எதிர்காலத்துக்கான எச்சரிக்கை

வெறுமனே அம் முகாமை மட்டும் இலக்கு வைத்த தாக்குதலாகவல்லவா அமைந்திருக்கிறது? இத் தாக்குதலையடுத்துக்கூட இது அப்பகுதிவாழ் தமிழ் முஸ்லிம் மக்களை நோக்கிப் பரவவில்லை. எனவே தெட்டத் தெளிவான திட்டத்தோடு நடந்த தாக்குதலாகவே இது தென்படுகிறது. மாறாக, தன்னிச்சையான ஒர் ஆத்திர உணர்வால் பொங்கியெழுந்து நடந்த விடயமாகத் தென்படவில்லை.

அப்படியான திட்டமிட்ட தாக்குதலாக இது அமைந்திருந்தால் அதை யாரோ என்ன நோக்கத்துக்காகவோ ஒழுங்கு செய்திருக்க வேண்டும். அவ்வாறான ஒழுங்கும் கூட வெளியேயிருந்தவர்களால் மட்டுமே செய்யப்பட்டிருக்கச் சாத்தியமில்லை. உள்ளேயிருந்த சில முகாம் அதிகார மட்டங்களின் ஈடுபாடு-இதில் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் இப்படியான ஒரு தன்னெழுச்சியான தாக்குதலில் முகாம் காவலர்கள் நிட்சயம் எதிர்த் தாக்குதல் நடத்தியே இருப்பர். அவர்கள் அவ்வாறு எதிர்த் தாக்குதல் நடத்தியிருப்பதனால் இத்தாக்குதலின் நோக்கம் அவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். அத்துடன் அந்நோக்கத்துக்கு அவர்களும் உடந்தையாக இருந்திருக்க வேண்டும், அல்லது ஆக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறானால் இத்தாக்குதல் பற்றி அவர்களுக்கு முன் கூட்டியே உணர்த்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு இவ்விடயத்தைத் திட்டமிட்டவர்கள் உள்ளே இருக்கவே சாத்தியமேயன்றி வெளியிலிருந்திருக்கச் சாத்தியமில்லை. அவர்களை கண்டுபிடித்து, தண்டனையளித்து, இத்தாக்குதலின் மர்மத்தைத் தெளிவு படுத்துவதே அரசாங்கத்தால் செய்யக் கூடிய நீதியான காரியமாக இருக்கும்.

முன்னைய ஐக்கியதேசியக் கட்சி ஆட்சிக்காலத்திலும் 1983 ஜூலை கலவரத்தின் போது 23, 25ம் திகதிகளில் நிகழ்ந்த வெலிகடை சிறைப்படுகொலைகளும் ஏறத்தாழ இவ்வாறே நிகழ்ந்தன. அங்கு, வெளியேயுள்ள கிராம மக்களுக்குப் பதில் கிரிமினல் குற்றவாளிக் கூண்டுகளிலிருந்த சிங்கள சிறைக் கைதிகள் கொலையாளிகளாகப் பயன்படுத்தப்பட்டனர். அங்கும்கூட தமிழ்க் கைதிகள் அடைக்கப்பட்டிருந்த கூண்டுகளின் கதவுகள் திறக்கப்பட்டது எவ்வாறென்ற மர்மம் வெளிப்படவில்லை. அச்சம்பவங்களின்போது

ஒருபுறம் அரசாங்கத்தின் கருத்தில் 'தீவிரவாதத்திலிருந்து திருந்துவது' என்ற விடயம் கூட இத்தாக்குதற்காரர்களால் அனுமதிக்க முடியாததாகவே காணப்படுகிறது. மேலும் அத்தகையவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படுவதைக் காழ்ப்புணர்வுடன் நோக்கும் மனோபாவம் இங்கு உணரப்படுகிறது.

இவ்வாறான தாக்குதல் மூலம் ஒரு புறத்தில் இவர்கள் தமது காழ்ப்புணர்வையும் இனவாதத்தையும் வெளிப்படுத்தினாலும் மறுபுறத்தில் உண்மையில் புலிகளிலிருந்து அரசாங்கத்தை நம்பிச் சரணடைவது அபாயகரமானது என்ற எண்ணத்தைத்தான் ஏற்படுத்தப் போகிறது என்பதை அவர்கள் உணரவில்லை. தாம் ஏதோ புலிகளுக்கெதிரான ஒரு வீரத் தாக்குதலை நடத்தி விட்டதான பெருமை உணர்வுடன் அவர்கள் இருந்தால் அது மடமையே. ஏனெனில் உண்மையில் அவர்கள் புலிகளுக்கு அவர்களால் செய்ய முடியாத ஒரு காரியத்தைச் செய்து உதவி புரிந்தே உள்ளனர்.

இது இருவிதத்தில் புலிகளுக்கு உதவிகரமானதாக அமையும். ஒருபுறம் நேரடியாக, புலிகளிலிருந்து சரணடைபவர்களுக்கான ஒரு எச்சரிக்கைச் செய்தியாக அமைகிறது. இரண்டாவதாக இலங்கையில் நிலவும் இனவாதத்தை சர்வதேச ரீதியாக எடுத்துக் காட்டக் கூடிய ஒரு சம்பவமாக அமைகிறது. மூன்றாவதாக இங்கு மனித உரிமை மீறல்களுக்கு உள்ள தாராளமான திறந்த கதவையிட்டு இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கு சுட்டிக்காட்டக்கூடிய சம்பவமாக அமைகிறது. நான்காவதாக, அரச பாதுகாப்புப் படைகளுக்குள் இனவாத, அரசியல் செல்வாக்குகள் மலிந்து காணப்படுவதாக எடுத்துக் காட்டக்கூடிய சம்பவமாக அமைகிறது. இவற்றைவிட அரச படைகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லை எப்பதையும் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. மேலும் யுத்தப் பிரதேசங்களில் மற்றும் உணர்ச்சிகரமான சூழ்நிலைகளில் இப்படைகள் கட்டுமீறிச் செயல்படுவதற்கான சாத்தியங்கள் பற்றியும் எச்சரிப்பதாக உள்ளது.

இந்த 29 பேரின் படுகொலைகளின் மூலம் தமது மன அசூசையை வெளிப்படுத்திக் கொண்டதையும் அநியாயமாகச் சில உயிர்க் கொலைகளைச் செய்ததையும் தவிர, அவர்கள் சாதித்தது எதுவுமில்லை. இவ்வாறான கொலைகள் போராட்டத்தை மிரட்டி நிறுத்துமென்றோ, தமிழ்ப் பேசும் மக்களின் உரிமை

காரணகர்த்தாக்களுக்கு எதையும் அனுகூலமாக்கிவிடப் போவதில்லையோ, அதேபோல் இச் சம்பவத்துக்கான எதிர் வினைகள் பிரதிகூலங்களை ஏற்படுத்திவிடவும் கூடுமென்பதில் விழிப்பாக இருத்தல் வேண்டும்.

இச்சம்பவத்துக்கான எதிர்வினையின் விளைவே மலையகக் குழப்பங்கள்.

பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்தில் தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்டுவிட்டார்கள் என்ற செய்தி மலையகத் தமிழ் மக்களிடையே உணர்ச்சிகரமான பாதிப்புக்களை இயல்பாகவே தோற்றுவிப்பதாக இருந்தது. பண்டாரவளை, மலையகத் தமிழர்களின் ஒர் உறைவிடமாக அமைந்திருந்ததும் இதற்கு ஒரு காரணம். மலையகத்தில் நிகழ்ந்த இந்தச் சம்பவம் மலையகத் தமிழர்களுக்கு தமது வீட்டுக்குள்ளேயே நடந்த படுகொலை போன்ற உணர்வை ஏற்படுத்தியிருந்தது.

அத்தோடு, மலையகத்தில் கைதான சில மலையகத் தமிழ் இளைஞர்களும் அம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அதிலும் மோசமான விடயமாக, இப் படுகொலைகளின் போது அங்கிருந்த மலையகத் தமிழ் இளைஞர்களும் படுகொலை செய்யப்பட்டுமிருந்தனர்.

இத்தகைய சூழ்நிலை மலையகத் தமிழர்களிடையே மன ஆவேசத்தை ஏற்படுத்துவதாக இருந்தது. இதை உணர்ந்துகொண்ட சில மலையக அரசியல் சக்திகள் இந்த உணர்ச்சிகர நிலைமையை தமது அரசியல் செயற்பாட்டுக்குப் பயன்படுத்திக் கொள்ள விளைந்தன.

இச் சம்பவத்துக்கு எதிர்ப்புக் காட்டும் முகமாக மலையக மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா மாவட்டத்தின் ஹட்டன், தலவாக்கலை பகுதிகளில் கறுப்பு வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டன. இங்கு பதற்றம் உருவாகுவதை உணர்ந்து இராணுவம் தருவிக்கப்பட்டது. இவ்வாறு கட்டப்பட்ட கொடிகள் சில இராணுவத்தின் பஸ் வண்டிகளின் முகட்டின் மீது ஏறி அறுக்கப்பட்டன. இதனால் ஆத்திரமடைந்த மலையகத் தமிழ் இளைஞர்கள் திரளாகத் திரண்டு வீதிதோறும் நின்று பலாத்காரமாக சகல கடைகள் வாகனங்களிலும் கொடிகளைக் கட்டினர். எனினும் அதைத் தடுக்க இராணுவமோ, பொலிஸோ உடனடியாக முற்படாததால் அப்போது மோதல்கள் விளையவில்லை.

எனினும் மறுநாள் 29.10.2000 அன்று ஹர்தால் நடத்தப்பட்டது. அதன்போது சகல கடைகளும் மூடப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. சிங்களக் கடைகளை மூடச்செய்வதற்கு ஒருவகை அச்சுறுத்தல் வலியுறுத்தப்பட்டது. அவ்வாறு மூட மறுத்த வேளையில் மார்ட்டின் என்ற சிங்களவரது கடை தாக்கப்பட்டது. அதையடுத்து அங்கிருந்த வேறு சில 7 சிங்கள ஹொட்டேல்கள், கடைகள் தாக்கப்பட்டன. அங்கு நின்ற இராணுவத்தினருக்கு கல்லெறிகளும் எதிர்ப்புக் காட்டல்களும் நிகழ்ந்தன.

இதையடுத்து தலவாக்கலை சென்ற இராணுவம் அங்கிருந்த பன்சாலை ஒன்றில் மணியை ஒலிக்கச் செய்து அப்பகுதி சிங்களவர்களை ஒன்று கூட்டியது. பின்னர் தலவாக்கலைப் பகுதியை இராணுவம் காவல் காக்க, அங்குள்ள தமிழ்க் கடைகள் சிங்களவர்களால் சூறையாடப்பட்டு தாக்கி உடைக்கப்பட்டன. வாகனங்கள் தீவைக்கப்பட்டன.

தலவாக்கலையிலேயே அதிகளவு அநர்த்தங்கள் நிகழ்ந்தன. சில பெண்கள் கடத்தப்பட்டதாக அறியப்படுகிறது. உணவுக்கென அரிசி வாங்கிச் சென்ற ஒருவரிடமிருந்து இராணுவத்தினர் அரிசியைப் பறித்துக் கொட்டியதைத் தான் கண்ணால் கண்டதாக அங்கிருந்த ஒருவர் முரசுக்குத் தெரிவித்தார். இராணுவம் தலவாக்கலையைப் பொறுத்தவரை மிகவும் பக்க சார்பாகவே நடந்து கொண்டதாக குற்றம் சாட்டப்படுகிறது.

அங்கு சுமார் 15 தமிழ்க் கடைகள் சிங்களவர்களால் எரிக்கப்பட்டன. அவற்றில் மகாலக்ஷ்மி ஹொட்டேல் (இது தாளாக்கப்பட்டுள்ளது), Cheep side, தனலக்ஷ்மி, பஞ்சலிங்கம் டெக்ஸ்டைல் ஆகிய கடைகள் குறிப்பிடத்தக்கவை. இவை லொறியால் மோதி இடிக்கப்பட்டன. அத்துடன் இராணுவம்

**நரன்**

சுட்டதில் 3 பேர் இங்கு கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை தமிழர்கள் குழுக்கள் குழக்களாகத் திரண்டு கிராமங்களிலுள்ள சிறிய சிங்களக் கடைகளைத் தாக்க முனைந்துள்ளனர்.

இவற்றுக்கு முன்னதாக மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் தலவாக்கலையில் கூட்டத்தின் மத்தியில் உரையாற்றியிருந்தார். அதையடுத்து சிலர் சிங்களக் கடையொன்றைத் தாக்கியிருந்தனர். இவற்றை முடிச்சுப்போட்டு இக் கலவரங்களுக்கு சந்திரசேகரனே பின்னணியிலிருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு, அவர் பின்னர் கைதுசெய்யப்பட்டார். சில நாட்கள் விசாரித்துவிட்டு, நிரூபணங்கள் இல்லாததாலும் மலையகத்தில் அரசியல் கொந்தளிப்புகள் ஏற்படலாம் என்ப

நோக்கி நிலமை மோசமாகிச் சென்றது. எனினும் இதன் மையப் பகுதியான ஹட்டனில் பொலிஸார் மிக நிதானத்துடனும் சாதுரியத்துடனும் நடந்து கொண்டதால், கலவரம் வெடிக்காமல் பாதுகாக்கப்பட்டது. ஹட்டனில் மட்டுமே தமிழ் சிங்கள இருபகுதியைச் சார்ந்தவர்களும் ஒன்றாக விழிப்புக்குழு அமைத்து அசம்பாவிதங்கள் நடக்காமல் காவலிருந்தனர். இந்த ஏற்பாட்டால் ஆத்திர உணர்வுகள் வன்முறைகளாகப் பிரதிபலிக்காதவாறு தவிர்க்க முடிந்தது.

எனினும் இந் நிகழ்வுகளின் படிப்பினையை அப்பகுதி மக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். இப் படிப்பினைகள் எதிர்காலத்துக்கான சில எச்சரிக்கைகளை விடுக்கின்றன. அரசியல் நோக்கங்களுக்காக எவராலும் உந்தப்பட்டு நிதானமிழந்த கட்டுப்பாடற்ற செயல்களில் இறங்குவது அங்கு எத்துனை பாரதூரமான நிலைமையைத் தோற்றுவிக்கும் என்பதை உணரவேண்டும். அதிகாரத்துக்கும் இனவாதத்துக்கும் பணிந்து போகாது உறுதியுடன் நிற்கின்ற அதேவேளையில் எல்லை தாண்டாத நிதானத்துடனும் பொறுப்புணர்வுடனும் அங்கு செயலாற்ற வேண்டியது அவசியம். மலையகத் தமிழர் மலையகத்தின் சில பகுதிகளில் செறிவாக இருந்தாலும் சுற்றிவர சிங்கள மக்களால் சூழப்பட்ட நிலையிலேயே வாழ்கிறார்கள். இந்த யதார்த்தத்தை உணர்ந்த நிலையிலேயே தமது இருப்பையும் உரிமைகளையும் நிலைநாட்டவும் முற்பட வேண்டும். வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் போராட்டத்தின் வெளிநீட்டலாக மலையகத்தை உருவாக்க விளைவது பாரதூரமானதாக மாறிவிடும்.

மலையகத் தமிழ் மக்களின் உணர்ச்சிகளையும், பலங்களையும் உணர்ந்து விழிப்படைந்து அவற்றை அடக்கக்கூடிய ஏற்பாடுகளுக்கு அரசாங்கம் முனையாமல் பார்த்துக் கொள்வது அவசியமாகிறது. தலவாக்கலை சம்பவங்களை நோக்கும்போது அங்கு ஒர் இராணுவ முகாமை நிறுவ அரசாங்கம் முற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையெனத் தோன்றுகிறது.

இதேவேளை மலையக மக்கள் தமிழ் சகோதரர்களுக்கு நிகழ்ந்த அநியாயத்துக்காகப் பொங்கியெழுந்தமையும், அதனால் தமக்கேற்பட்ட தாக்கங்களைத் தாங்கிக் கொண்டமையையும் நன்றியுணர்ச்சியுடன் பார்க்க வேண்டியது ஏனைய தமிழ் மக்களது கடமையாகும். அத்துடன் மலையகத் தமிழர்களின் துன்ப துயரங்களிலிருந்து மீட்சிக்கான ஒத்தழைப்புகளையும் வழங்க வேண்டியதும் அவர்களின் தார்மீகக் கடமையாகும். ●

# செய்திச் சிதறல்

✷ நாட்டின் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைத்து அமைதியை நிலை நாட்டுவதற்காக நோர்வே நாட்டைச் சேர்ந்த எரிக் சொல்ஹெய்ம் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் திரு.பிரபாகரனைச் சந்தித்து, உரையாடினார் அல்லவா. நோர்வே தூதுக் குழுவினர் வன்னி செல்வதற்கு ஜனாதிபதியும் பாதுகாப்புத்துறை தலைமைப் பீடமும் ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது. ஆனால் இந்த முக்கியமான விடயம் பற்றி தனக்கு எதுவுமே தெரியாது என்று நாட்டின் பிரதமர் ரத்னசிரி விக்கிரமநாயக்க தெரிவித்திருந்தார். கடந்த திங்கட்கிழமையன்று பிரதமரை அலரிமாளிகைக்கு அழைத்த ஜனாதிபதி சந்திரிக்கா, நோர்வேயின் சமாதான முயற்சி பற்றி பிரதமரிடம் தெளிவாக எடுத்துரைத்ததாகத் தெரிகிறது.

✷ தேர்தல் காலத்தில் இடம் பெற்ற பிரசாரக் கூட்டங்களிளெல்லாம் உரையாற்றி வந்த பிரதமர் ரத்னசிரி விக்கிரமநாயக்க, "போர் முனையில் பிரபாகரனைத் தோற்கடித்த பின்னரே சமாதானப் பேச்சுவார்த்தை!" என்று மேடைக்கு மேடை அறைகூவி வந்தார். ஆனால் ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் நோர்வேயின் சமாதான முயற்சிபற்றி தனது கருத்தை மாற்றிக் கொண்டுள்ளார் என்று நம்பப்படுகிறது. எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம், நோர்வேயின் சமரச முயற்சிபற்றி அரசாங்கம் கொண்டுள்ள கருத்தை பிரதமரே எடுத்து கூறியிருக்கிறார் என்று பிந்திவந்த செய்திகள் கூறுகின்றன.

✷ நோர்வே தூதுக்குழுவினர் பிரபாகரனைச் சந்தித்தது தொடர்பாகவும் அதனை தொடர்ந்து மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைத் தொடர்பாகவும் அரசியல் கட்சித் தலைவர்களை அழைத்து விளக்கம் தரப்போவதாக ஜனாதிபதி அறிவித்திருந்தார். இக்கூட்டம் இந்த வாரத்திலேயே நடைபெறுவதாக இருந்தது. ஆனால் அடுத்தடுத்த வாரங்களிலேயே சர்வக் கட்சிக் கூட்டம் நடைபெறலாம் என்று தெரியவருகிறது.

✷ நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு 'சிஹல உறுமயகட்சியும், மக்கள் விடுதலை முன்னணியான ஜே.வி.பி.யும் கண்டனக்குரல் எழுப்பியுள்ளது. உள்நாட்டுப் பிரச்சனையில் அளவுக்கு மீறி அந்நாடு தலையிடுவதாக இவ்விரு கட்சியினரும் எதிர்ப்புக்குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளன. ஐவரைக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் குழுவொன்று நோர்வே செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இக்குழுவில் ஜே.வி.பி.யைச் சேர்ந்த நந்தன குணதிலக பா.உ. சேர்க்கப்பட்டிருந்தார். ஆனால் நோர்வே நாட்டின் தலையீட்டை ஆட்சேபிக்கும் முகமாக ஜே.வி.பி.யின் உறுப்பினர் இந்தக் குழுவிலிருந்து தான் விலகிக் கொள்வதாக அறிவித்திருக்கிறார்.

✷ இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் கெப்டன்களான அர்ஜுன ரணதுங்கவும், அரவிந்த டிசில்வாவும் பந்தயத்தில் ஈடுபடுவோரிடம் இலஞ்சம் பெற்றதாக இந்தியமத்திய புலனாய்வுத்துறை குற்றம் சுமத்தியதைத் தொடர்ந்து இது தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி சட்டத்தரணியான டெஸ்மன்ட் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஒழுக்காற்று ஆணைக்குழுவின் உறுப்பினராக இருக்கிறார். அண்மைக் காலங்களில் கிரிக்கெட் ஆட்டக்காரார்கள் பலர் இத்தகையக் குற்றச்சாட்டுக்களில் மாட்டிக் கொண்டுள்ளனர். இதனால் பல சிறந்த வீரர்கள் கிரிக்கெட் ஆட்டங்களிலிருந்து விலக்கி வைக்கப்பட்டதுடன், பெரும் பணம் தண்டமாகவும் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் ஆளாக்கப்பட்டனர். இவர்களிடம் சட்டவிரோதமாக பெரும் தொகைப் பணமும், சொத்துக்களும் சேர்ந்திருந்தமையினால் இவற்றை இழக்க வேண்டிய நிலையும் உருவானது. ▭

# அண்டை மண்டலத்தில்....

## சூதாட்டம்

## அசாரிலிருந்து ரணதுங்க உட்பட லாரா வரை

இந்தியாவின் மத்திய புலனாய்வுத்துறை, சி.பி.ஐ., கிரிக்கெட் சூதாட்டம் குறித்த தனது அறிக்கையினை சமர்ப்பித்துவிட்டது. அசாருதீன், அஜய் சர்மா, அஜய் ஜடேஜா, மனோஜ் பிரபாகர், விக்கெட் கீப்பர் மொங்கியா என இந்திய பிரபலங்கள் மட்டுமல்ல, க்ரோன்யே உட்பட ஒன்பது வெளிநாட்டு வீரர்களும் சூதாட்டக்காரர்களுக்கு துணை போயிருக்கிறார்கள் என்று சி.பி.ஐ.யின் 102-பக்க அறிக்கை கூறுகிறது.

இலங்கை வீரர்கள் அர்ஜூன ரண துங்க, மற்றும் அரவிந்த டி சில்வா ஆகியோர் சூதாட்டக்காரர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு தங்களணி தோல்வியுறக் காரணமாயிருந்ததாகவும் அறிக்கை குற்றஞ்சாட்டுகிறது.

அசார் தான் பல சூதாட்டக்காரர்களுடன் தொடர்பு வைத்திருந்ததாகவும், நிறைய பணம் பெற்றுக் கொண்டதாகவும் ஒப்புக் கொண்டாலும், இரண்டே இரண்டு பந்தயங்களில் மட்டும் தான் இந்தியா தோல்வி அடைய தான் காரணமாயிருந்ததாக சி.பி.ஐ.யிடம் கூறியிருக்கிறார். மனோஜ் பிரபாகர், அஜய் சர்மா ஆகியோரும் ஓரளவுக்கு தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

வெளிநாட்டு வீரர்களைப் பொறுத்தவரை, முன்னாள் தென்னாபிரிக்க காப்டன் க்ரோன்யேதான் இந்தப் பிரச்சனைக்கு பிள்ளையார் சுழி போட்டவர். அவருடைய வாக்குமூலம் உலகப்பிரசித்தம். பாகிஸ்தானைச் சேர்ந்த சலீம் மாலிக், தன்னை ரகசியமாக வீடியோ படம் எடுக்கிறார்கள் என்றறியாமல் தான் எந்தப் பந்தயத்தின் முடிவினையும் நிர்ணயிக்கமுடியும், எந்த கிரிக்கெட் வீரரையும் லஞ்சம் கொடுத்து தன் வசமிழுக்கமுடியும் என்று பீற்றியவர், அதன் விளைவாக இப்போது கிரிக்கெட்டை விட்டு விலக்கிவைக்கப்பட்டிருப்பவர்.

இவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் ஒரேயடியாக சாதிக்கிறார்கள் தங்களுக்கெதுவுமே தெரியாதென்று. ரணதுங்க, டி சில்வா, இங்கிலாந்தின் முன்னாள் காப்டன் அலக் ஸ்ரூவர்ட், பிரசித்திபெற்ற மேற்கிந்திய வீரர் ப்ரையன் லாரா, நியூஸிலாந்தின் முன்னாள் காப்டன் மார்ட்டின் க்ரோ, அவுஸ்திரேலியாவின் முன்னாள் காப்டன் மார்க் வோ, அவுஸ்திரேலிய வீரர் டீன் ஜோன்ஸ் ஆகியோர் இந்திய சூதாட்டக்காரர்கள் சொல்வதெல்லாம் கட்டுக்கதை, வேண்டுமென்றே தங்களை அவர்கள் வம்பில் மாட்டிவைத்திருக்கின்றனர் என்கிறார்கள். வாசகர்களுக்கு நினைவிருக்கலாம், இந்திய தலைநகரான புதுடில்லி போலீசார் தற்செயலாகத்தான் இந்த கிரிக்கெட் மாட்ச் ஃபிக்சிங் என்று சொல்லப்படும் சூதாட்டம் பற்றி கண்டறிந்தார்கள்.

மாஃபியா கும்பல் என்றழைக்கப்படும் அடிதடி, கொலை, ஆட்கடத்தல், கட்டைப்பஞ்சாயத்து போன்ற வழிமுறைகளில் இறங்கி, ஏகப்பட்ட பொருள் குவிக்கும் பெரும் ரௌடிகள் சிலரைப் பற்றி துப்பறிவதற்காக சில குறிப்பிட்ட செல்ஃபோன்களை ஒட்டுக் கேட்கத் துவங்கியபோது தான், க்ரோன்யேவிற்கும் ஒரு சூதாட்டக்காரருக்குமிடையே நடந்த உரையாடலைக் கேட்டு திகைத்துப்போனார்கள் போலிசார்.

“இந்த மாட்சை நாங்கள் தோற்றுவிடுகிறோம். நீங்கள் இவ்வளவு கொடுத்துவிடுங்கள்” என்று அவர் பேரம் பேசியதை போலிசார் டேப் செய்துவிட்டார்கள். அதுபற்றி மேலும் விசாரிக்க, விசாரிக்க பல்வேறு திடுக்கிடும் உண்மைகள் வெளிவந்தன.

இந்தியாவிற்குள்ளும் வெளியேயும் ஒரு பெரும் சூதாட்ட கும்பல்களிருக்கின்றன, பல்வேறு வீரர்களுக்கும் இந்தக் கும்பல்களுக்கும் தொடர்பிருக்கிறது. பணம் வாங்கிக் கொண்டு கூசாமல் தங்கள் தங்கள் குழுக்கள் தோல்வியடையச் செய்ய இந்த வீரர்கள் முன்வருகிறார்கள் என்றெல்லாம் தெரிய வந்தது.

ஆயினும் க்ரோன்யே தவிர வேறு எவரும் உண்மையை ஒத்துக் கொள்ள முன்வரவில்லை. தாங்கள் சத்திய சந்தர்கள் என்று அடித்துக்கூறினார்கள். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமும் தங்களது கிரிக்கெட் வீரர்கள் மீது முழு நம்பிக்கையிருப்பதாகவும் அடிப்படையற்ற வதந்திகள் தேவையில்லாமல் குழுவின் மனநிலையினைப் பாதிக்கிறதென்றும் கூறினார்கள். சி.பி.ஐ.விசாரணைக்கு இந்திய அரசு உத்தரவிட்டது.

ஏற்கெனவே மனோஜ் பிரபாகர் ஒரு குண்டைத் தூக்கிப்போட்டிருந்தார். 1994ம் ஆண்டு ஷார்ஜாவில் நடந்த ஒரு பந்தயத்தின் போது தான் சரியாக விளையாடாமல் இருப்பதற்காக ஒரு பிரபல வீரர் தனக்கு 25 லட்ச ரூபாய் அளிக்க முன்வந்ததாகவும், ஆனால் அதை தான் ஏற்க மறுத்துவிட்டதாகவும் அவர் கூறினார். அதுபற்றி ஒரு விசாரணை கமிஷனே அமைக்கப்பட்டு, கடைசியில் அதுவும் பிசுபிசுத்துப் போனது. இதெல்லாம் இரண்டாண்டுகளுக்கு முன்பு.

க்ரோன்யே விவகாரத்திற்கு பிறகு பல்வேறு புள்ளிகளுடன் சூதாட்டம் பற்றி விவாதித்து, அதே வீடியோ படமாக்கி, மீண்டும் ஒரு கலக்குக் கலக்கினார் பிரபாகர். அந்தப் படத்தில் இந்திய வீரர்களுக்கும் சூதாட்ட கும்பல்களுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகவும் அசார் போன்றோர் ஏகப்பட்ட பொருளீட்டிவிட்டதாகவும் உயர் அரசு அதிகாரிகள் கூறியிருந்தனர். ஏறத்தாழ இதே நேரத்தில்தான் லண்டனில் சலீம் மாலிக்கைப் பற்றிய வீடியோ படம் வெளியானது. பாகிஸ்தானில் ஏற்கெனவே ஒரு கமிஷன் அமைக்கப்பட்டு அது காப்டன் அக்ரம் உட்பட பலர் மீது குற்றம் சுமத்தியிருந்தது. வீடியோ படத்திற்குப் பின் மாலிக் இனி எந்த கிரிக்கெட் பந்தயத்திலும் கலந்து கொள்ளக்கூடாது என அந்நாட்டு வாரியம் உத்தரவிட்டது.

இந்திய அரசும் வேறு வழியின்றி சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது. அந்த விசாரணையில்தான் பிரபாகர் தனக்கு பணம் அளிக்க முன்வந்தது கபில்தேவ்தான் என்றார். அந்தக் குற்றச்சாட்டில் ஆதாரம் எதுவும் இருப்பதாக தெரியவில்லை என்கிறது சி.பி.ஐயின் தற்போதைய விசாரணை அறிக்கை. ஆனால் பத்திரிகைகளில் கபிலுக்கும் சூதாட்ட கும்பல்களுக்குமிடையேயான தொடர்புகள் பற்றியும் அவர் சொத்துக்கள் குவித்திருப்பது பற்றியும் பல்வேறு செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அசாருடைய ஆடம்பர வாழ்க்கை முறை பற்றியும் இதே ரீதியில்தான், சி.பி.ஐ. ஏதும் கூறுவதற்கு முன்னரேயே செய்திகள் வெளியாயின. அசார் விஷயத்தில் அச்செய்திகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன, கபில் தப்பி விட்டார். அவ்வளவே.

இதிலே வேடிக்கை என்னவென்றால், கபிலை மாட்டிவிட நினைத்த பிரபாகரே ஏழெட்டாண்டுகளாக சூதாட்டக்காரர்களுடன் தொடர்புவைத்திருந்ததாக சி.பி.ஐ. விசாரணையில் தெரிய வந்திருப்பதுதான்.

க்ரோன்யே தனது வாக்குமூலத்தில் எம்.கே. எனப்படும் முகேஷ் குப்தா மூலமாகத்தான் சூதாட்டக்காரர்கள் தனக்கு அறிமுகமானதாகவும், அந்த எம்.கே.யை தனக்கு அறிமுகப்படுத்தியதே அசார்தான் என்றும் கூறியிருந்தார். அதன் பிறகுதான் இந்திய போலிசே விழித்துக் கொண்டது.

அந்த எம்.கேயுடன் முதன் முதலில் மனோஜ் பிரபாகர்தானாம். இதில் அவருக்கு உதவியவர் இன்னொரு டில்லி வீரர் அஜய் சர்மா. பின்னர் ரணதுங்க உட்பட பல கிரிக்கெட் வீரர்களை பிரபாகர்தான் எம்.கே.க்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

அது என்ன சூதாட்டம்? யார் ஜெயிப்பார், யார் தோற்பார் என்பதிலிருந்து, யார் எவ்வளவு ரன் எடுப்பார்கள், எப்போது ஒரு காப்டன் டிக்ளேர் செய்யக்கூடும், எப்போது மெட்ச் முடியும் என்றெல்லாம் பெட் கட்டப்படுகிறது.

உலகக் கோப்பை நேரங்களிலெல்லாம் கோடிக்கணக்கில் இந்தியாவில் கைமாறுவது அனைவருக்கும் தெரியும். ஆனால் எல்லாமே ரகசியமாக நடப்பதால், அவ்வளவு எளிதில் நடவடிக்கை எடுக்கமுடியாது. ஆட்டக்காரர்களே சூதாட்டக் கும்பலுக்கு தகவல்கள் கொடுக்கிறார்கள். அதற்காக பணம் பெற்றுக் கொள்கிறார்கள். அவர்களே பெட்டும் கட்டுகிறார்கள் என்றெல்லாம் சமீப காலங்களாகவே வதந்திகள் உலவிவந்தன. மார்ச் துவக்கத்தில் என்ன மாதிரி பிட்ச் தயார் செய்யப்பட்டிருக்கிறது. எப்படி வெப்பதட்ப நிலை இருக்கிறது. யார் யார் விளையாடக்கூடும் என்பன போன்ற செய்திகள் தருவதற்குக் கூட வீரர்களுக்கு இந்தக் கும்பல்கள் பணம் கொடுக்கின்றன.

**கானகன்**

மூன்றாண்டுகளுக்கு முன்பு அவுஸ்திரேலிய வீரர்கள் மார்க் வோ, மற்றும் ஷேன் வோர்ன் பிட்ச் பற்றிய செய்திகள் கொடுத்ததற்காக பணம் பெற்றுக் கொண்டதை ஒத்துக் கொண்டார்கள். வோவிற்கு தான் 40 ஆயிரம் அமெரிக்க டாலர்கள் கொடுத்ததாக இப்போது குப்தா கூறுகிறார். இப்படிப்பட்ட செய்திகளை தருவதையாவது மன்னித்துவிடலாம். ஆனால் சூதாட்டக்காரர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு வேண்டுமென்றே தாங்கள், தங்கள் குழு தோற்றுப் போக வழி செய்பவர்களை என்ன செய்வது? இவர்களெல்லாம் மிகப் பெரிய ஆட்டக்காரர்கள், தங்கள் நாட்டிற்காக உயிரைக் கொடுத்து ஆடுபவர்கள் என்று நம்பி காசு கொடுத்து டிக்கெட் வாங்கி மாட்சை பார்க்கும் ரசிகர்களையெல்லாம் முட்டாள்களாக அல்லவா ஆக்கிவிடுகிறார்கள் இவர்கள்? பெர்னாட்ஷா ஒரு முறை வெறுப்புடன் சொன்னார், ‘பதினோரு முட்டாள்கள் விளையாடுகிறார்கள். பதினொராயிரம் முட்டாள்கள் பார்க்கிறார்கள்’. இப்போது லட்சக்கணக்கில் முட்டாள் பார்க்கிறார்கள், ஆனால் விளையாடுபவர்களில் பலர் அயோக்கியர்கள் என்றல்லவா ஆகிறது!

ஒரு ருசிகரமான தகவல், 1994ம் ஆண்டு இந்தியாவில் உள்ள லக்னோவில் நடந்த ஒரு டெஸ்ட் பந்தயத்தில் சரியாக விளையாடாமல் இருப்பதற்காக ரணதுங்கவும் டி சில்வாவும் ஒத்துக் கொள்கிறார்கள். இலங்கையும் தோற்றுவிடுகிறது. பின்னர் டி சில்வா விற்கு 15,000 அமெரிக்க டாலர் கொடுக்கப்படுகிறது.

ஆனால் பின்னர் தொடர்ந்த பந்தயங்களில் எம்.கே.அவர்களை அணுகவில்லை. காரணம் என்ன? இலங்கை ஜெயிக்கப் போவதாக அதிகம்பேர் பெட் கட்ட முன்வராததுதான். இலங்கைவீரர்களும் அதிக ஆர்வம் காண்பிக்கவில்லை ஏனாம்? எனக்கு ஒரு சந்தேகம் வேறு சூதாட்டக்காரர்களுடன் அவர்கள் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டுவிட்டார்களோ? என்கிறார் எம்.கே.ரணதுங்க, சில்வாவைப்பற்றி இலங்கை வாரியம் மேலும் விசாரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

ஆனால் பலரை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருப்பது அசார் பற்றிய குற்றச்சாட்டுக்கள் தாம், ஏறத்தாழ இருபதாண்டுகளுக்கு முன் டெஸ்ட் கிரிக்கெட்டில் நுழைந்து, மிகச் சிறந்த வீரர் என்று புகழ் பெற்று, திறமையான காப்டனாகவும் பெயரெடுத்து, பல்வேறு சாதனைகள் புரிந்து, அவர் இன்று சிறைக்குச் செல்லும் நிலையிலிருக்கிறார். வெளியில் தலைகாட்ட முடியவில்லை. க்ரோன்யே போன்றே அவருக்கும் பெரும் அவமானம், வீழ்ச்சி. அவருடைய கார்கள், சட்டைகள், காலணிகள், வாட்ச்கள் என்றெல்லாமே வெளிநாட்டு சரக்குத்தான். ஒரு முறை பல லட்சம் பெறும் ஒரு ரோலக்ஸ் வாட்சை இந்திய அணியின் மானேஜர் வடேகருக்கு பரிசாக அளித்தாராம். எல்லோரும் மூக்கில் விரல் வைத்தார்கள். பெற்றோர் விருப்பத்துக்கெதிராக தனது முதல் மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு, நடிகை சங்கீதா பிஜ்லானியை அவர் திருமணம் செய்தபோது, பம்பாயில் மிகப் பெரும் பணக்காரர்கள் வசிக்கும் ஒரு பகுதியில் அவர் வீடு வாங்கிய போதுதான் வெளி உலகம் அவரை சற்று உற்று நோக்க ஆரம்பித்தது.

எல்லாப் பந்தயங்களிலும் பிஜ்லானி ஆஜராகிவிடுவார். செல்ஃபோனில் உடனுக்குடன் சூதாட்டக்காரர்களுக்கு தகவல் கொடுத்த வண்ணமிருப்பாராம். அவர் கொடுத்த தகவல்கள் கணிப்புக்கள் தவறாகப்போயின என்பது வேறுகதை.

தன்னுடைய தவறான கணிப்புக்களால் அல்லது ஒத்துக் கொண்டபடி இந்தியா சில மாட்சுக்களில் தோல்வியுறாததால் எம்.கே.க்கு நஷ்டமேற்பட்டதால், ஒரு கட்டத்தில் அவருக்கு ஏறத்தாழ 30 லட்சம்ரூபாயினை அசார் திருப்பிக் கொடுத்திருக்கிறார். அதன் விளைவாக அவர்களுக்கிடையில் நட்பு வலுப்பட்டது என்பதை சொல்லத்தேவையில்லைதானே. அஜய் ஜடேஜா ஒரு ராஜ குடும்பத்தைச் சார்ந்தவர், அவரும் பல்வேறு கட்டங்களில் சூதாட்டக்காரர்களுடன் தொடர்பு வைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவர் ஒரு நபர் இன்னமும் சாதிக்கிறார் தான் தவறேதும் செய்யவில்லையென்று. சி.பி.ஐ. அறிக்கை வந்த நாளன்று தன்னை புகைப்படமெடுக்க வந்தவரை அடித்தே விட்டார் அவர்.

அவர் வீட்டில் சி.பி.ஐ. சோதனையிட்டபோது கிடைத்த தகவல்களின் படி, வேறொரு வீட்டிற்குச் சென்று தடயங்கள் சிக்குகிறதா என்றறிய அதிகாரிகள் முயன்றபோது, அவர்களுக்கு திட்டும் அவமானமும்தான் பரிசாகக் கிடைத்தது. அது பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னான்டசின் கட்சியான சமதாவின் தலைவர் ஜெயா ஜேட்லியின் வீடாகும். ஜேட்லியின் மகளுக்கும் ஜடேஜாவுக்கும் நெருங்கிய தொடர்பு, இருவரும் திருமணம் செய்து கொள்ளலாம் எனச் செய்திகள். வருங்கால மாமியாருக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. சரமாரியாகத் திட்டித்தீர்த்தார். பிரதமர் அலுவலகத்திற்கே ஃபோன் செய்தார். தாங்கள் அவருக்கு சிரமம் கொடுத்ததற்கு வருத்தம் தெரிவித்து விட்டு, அதிகாரிகள் குனிந்த தலைகளுடன் வெளியேறினார்கள்.







அசாராவது சாதாரண நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து கிரிக்கெட்டில் நுழைந்தவர். பரம்பரைப் பணக்காரரான ஜடேஜா இப்படிச் செய்யவேண்டிய அவசியமென்ன? க்ரோன்யே கூட பெரும் பணக்காரராம். ஆசை யாரை விட்டது? அவ்வளவுதான். திருவிளையாடல் நாகேஷ் புலம்புவதுபோன்று, இனி எந்த மாட்ச் நடந்தாலும், யார் வென்றாலும் உண்மையிலேயே அந்தக் குழு வென்றதா அல்லது சூதாட்டக்காரர்களால் ஜெயிக்கவைக்கப்பட்டார்களா என்று ரசிகர்களுக்கு சந்தேகம் வருவது இயற்கை. அடிக்கடி ஒரு நாள் பந்தயங்களை நடத்துவதால், அதுவும் டொரன்டோ, ஷார்ஜா போன்ற இடங்களில் நடத்துவதால் வீரர்களுக்கும் சூதாட்டக்காரர்களுக்கும் தொடர்பு அதிகரிப்பதாகவும், வீரர்களும் இத்தனை மாட்சுகள்தான் நடக்கிறதே, ஓரிரண்டில் தோற்றால்தான் என்ன, கொஞ்சம் பணம் சம்பாதிக்கலாமே என்று நினைத்து சூதாட்டக்காரர்கள் வலையில் விழுந்து விடுகிறார்கள் என்றும் சி.பி.ஐ. அறிக்கை கூறுகிறது. ஒரு விதத்தில் எல்லாம் நன்மைக்கே என்று தோன்றுகிறது. பெரிய பெரிய ஆட்களெல்லாம் அசிங்கப்பட்டுவிட்ட பிறகு வளரும் வீரர்கள் சூதாட்டக்காரர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள அவ்வளவு எளிதில் துணியமாட்டார்கள். எல்லா நாட்டு கிரிக்கெட் வாரியங்களும் தவறு செய்தவர்கள் மீது நிச்சயம் நடவடிக்கை எடுக்கும். சூதாட்டக்காரர்களை ஓரளவாவது ஒடுக்கி வைக்கும்.

ஆனாலும் கனவான்களின், ஒழுக்கமானவர்களின் ஆட்டமென்று கருதப்பட்ட கிரிக்கெட்டில் இத்தனை ஊழல்களா? என்று உலகமெல்லாம் ரசிகர்கள் ரத்தக்கண்ணீர் வடிக்கின்றனர். ■

---

## பார்த்தேன் எழுதுகிறேன்

அம்பும் வில்லும் கொண்டு அரசியலுக்கு வர இருந்தவர்கள் எந்த ஒரு மாவட்டத்திலும் வெல்லமுடியவில்லை. தேசிய மட்டத்தில் கிடைத்த வாக்கு வீதத்தால் ஒரே ஒரு ஆசனம் உபயம்.

சிஹல உருமயவைத்தான் குறிப்பிடுகின்றேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஈ.பி.டி.பி.க்கும் கிடைத்த வாக்குகளை தாம் பெற்ற வாக்குகளுடன் ஒப்பிட்டு அவர்கள் தலா 4ம் 5ம் பெற தமக்கு 1 ஆசனம் என விசனப்பட்டனர்.

கூட்டணியும், ஈ.பி.டி.பி.யும் பெற்றது தேர்தல் மாவட்டங்களில். இவர்கள் ஆசனம் பெற்றது தேசியமட்டத்தில்.

சிங்கள மக்கள் ஓரங்கட்டப்படுகிறார்கள் என உறுமியவர்கள் ஓர் ஆசனத்திற்காக தம்மில் ஒருவரையே ஓரம்கட்டினார்கள். சிங்கள மக்களின் பாதுகாவலர்களாகப் புறப்பட்டவர்கள் தமக்குள் விடுக்கப்பட்ட ஆசன சண்டை அச்சுறுத்தலால் அவர்கள் வீட்டிற்கே பொலிஸ் பாதுகாப்பு போட்டிருந்த காட்சியை நாரஹேன்பிட்டியில் பார்த்தேன்.

சிங்கள மக்களின் நலன்கள் ஆட்சிக்கு வந்த இரு கட்சிகளாலும் சிறுபான்மையினரிடம் அடைவு வைக்கப்பட்டதென்ற உறுமலுடன் ஆரம்பித்தவர்கள் கிடைத்த ஒரு பதவிக்காக போட்ட குஸ்தியில் தலைவர்களில் ஒருவரான எஸ்.எல்.குணசேகரா வெளியேறினார்.

பௌத்தர் அல்லாதவர், தலதா மாளிகைக்கு பூத்தட்டுடன் செல்லாதவர், மேல் நாட்டு பாணி வாழ்க்கையை மேற்கொள்பவர் என்ற குற்றச்சாட்டுக்களே அவர் வெளியேற்றத்திற்கான காரணங்களாகின.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதியின் மகன்ான இவர், கல்லூரி நாட்களிலும் சட்டக்கல்லூரியிலும் சிறந்த பேச்சாளர்; விவாதத்திறமையாளர் என்பவற்றிற்கான சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி, சேர். பொன்னம்பலம் ராமநாதன் விருதுகளைப் பெற்றவர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆலோசகராக இருந்த இவர் திம்பு மாநாட்டிலும் அரசப் பிரதிநிதியாக கலந்து கொண்டவர். 1987ல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்த இவர், அரசியல் அமைப்பின் 13வது திருத்த நகலை தயாரிக்க மறுத்து ஜே.ஆரின் ஆலோசகர் பதவியை விட்டு வெளியேறியவர்.

“இனி தான் சிஹல உருமயவிற்கு மீள வரமாட்டேன்” என்ற வீராப்புடன் வெளியேறியவர். தொலைக்காட்சியில் தெரிவிக்கும் போது விம்மியபடியே வார்த்தைகள் வெளிவராமல் தடுமாறியதைப் பார்த்தேன்.

பௌத்த கலாசார பின்னணியுள்ளவராக பாராளுமன்ற முதல் அமர்வில் கலந்து கொண்ட திலக் கருணாரத்னாவும் தேசிய உடையில் அல்லாது மேல்நாட்டுப்பாணியில் கோட் சூட்டில் முன் வரிசையில் அமர்ந்திருந்ததையும் பார்த்தேன்.

எல்லாம் கோஷங்களும் கோட்டை போகும் வரைதானோ?

புதிய அரசியல் சீர்திருத்த விவாதத்தில் ஜனாதிபதி உரை ஆற்றிய வேளை சீர்திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து சீர்திருத்த யோசனைகள் நகலை கிழித்தும் எரித்தும் கொக்கரித்தும் நரிபோல் ஊளையிட்டும் திரிந்த பின்வரிசைக்காரர்கள் பலரும் பாராளுமன்றம் வராத செய்தியைப் பார்த்தேன். வினை விதைப்பவர்களின் நிலை இது தானோ? ▬

~குத்தியன்~

## அலசுவது - இராஜதந்திரி

# காயாத கானகத்தே துளிர் விடும் சமரச முயற்சி

இலங்கையின் பதினோராவது பாராளுமன்றம் உருவாகியிருக்கும் இத்தருணத்திலேயே நோர்வே பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம், தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு வன்னியில் நிகழ்ந்துள்ளது.

கடந்த சில மாதங்களாகவே தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்த நிலையில், பலதரப்பட்ட கருத்து மோதல்களும் அரசியல் கோதாவில் இடம்பெற்று மீளவும் பொது ஜன ஐக்கிய முன்னணி தலைமையில் பாராளுமன்ற ஆட்சி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் பிரதான பிரச்சனையாக வடக்கு-கிழக்குப் பிரச்சனை இருந்து வருவதையும், அதற்கான அரசியல் தீர்வு விடயங்களில் கூடுதல் அக்கறை எதிர்காலத்தில் செலுத்தப்படவேண்டுமென்பதை வலியுறுத்துவதாகவே திரு.பிரபாகரன், நோர்வே பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு விளங்குவதாக இருக்கின்றது.

இன்றைய காலகட்டத்தில் இனப்பிரச்சனை தொடர்பான சமாதான முயற்சிகளில் நோர்வே மேற்கொண்ட ஒரு காத்திரமான நடவடிக்கையாகவே எல்.ரி.ரி.ஈ. தலைவருடனான சந்திப்பு விளங்குகிறது.

எல்.ரி.ரி.ஈ. அமைப்பைப் பொறுத்தவரை அதன் செயற்பாடுகள் பெரிதும் இராணுவரீதியானவையாகவே இருந்துவருகின்றன.

அரசியல் ரீதியான அணுகுமுறைகளைப் பொறுத்தவரை, எல்.ரி.ரி.ஈ. இயக்கம் அவ்வப்போது தனது நிலைப்பாடுகளை வெளியிட்டுவந்துள்ளபோதிலும், ஒரு நீடித்த ஆரோக்கியமான தீர்வு முயற்சிகள் என்பது இதுவரை கைகூடாமலேயே இருந்து வருகின்றன.

அடிக்கடி சந்திப்புக்களை நடத்துவதையோ அல்லது அறிக்கைகள். கருத்துக்கண்ணோட்டங்களை வெளியிடுவதையோ எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே.பிரபாகரன் தவிர்த்தே வருபவராக இருக்கிறார்.

முக்கியத்துவம் வாய்ந்ததெனக்கருதும் சந்திப்புக்களை மட்டுமே நடத்துவதையும், ஆண்டுதோறும் தமது பிறந்ததினத்தை அண்டியதாக-நவம்பர் மாதத்தில் வருகின்ற மாவீரர் வாரத்தில் தனது அமைப்பின் அரசியல், இராணுவ நிலைப்பாடுகளை வெளியிடுவதையுமே திரு.பிரபாகரன் கடந்த பல வருடங்களாக மேற்கொண்டு வருகின்றார்.

அரசியல் அவதானிகள், திரு.பிரபாகரனின் இப்போக்குப் பற்றிக் கருத்து வெளியிடுகையில், அவர் தமது தனித்துவத்தை இதன் மூலம் பெரிதும் பாதுகாத்து வருவதோடு, தனது அரசியல் நிலைப்பாடுகளை வீண் விதண்டா வாதங்களுக்கு இடந்தராத நிலையில் பேணிவருகின்றார் என்றே குறிப்பிட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் நடவடிக்கைகளை ஆராயும் பட்சத்தில் 1987ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான காலட்டத்திலேயே திரு.பிரபாகரன் அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இந்திய சிரேஷ்ட இராஜதந்திரிகள் என்போரைச் சந்தித்திருந்தார்.

இதன் பின்னர் இலங்கையில் காலஞ்சென்ற ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் எல்.ரி.ரி.ஈ. இயக்கம் இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தது.

அப்பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச்சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலர் பங்குபற்றியிருந்தனரே தவிர, திரு.பிரபாகரன் நேரடியாக பேச்சுக்கள் எதிலும் பங்குபற்றவில்லை.

இதன் பின்னர் 1994ம் ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமரசப் பேச்சுக்கள் நடத்த முன்வந்திருந்தது.

அப்பேச்சுக்களில் கூட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் முக்கியஸ்தரான தமிழ்ச்செல்வன் தலைமையிலானவர்கள் கலந்து கொண்டார்களே தவிர திரு.பிரபாகரன் சந்திப்புக்களில் பங்குபற்றவில்லை.



இருந்தபோதிலும் வடக்கு-கிழக்கு மற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த கிறிஸ்தவ, கத்தோலிக்க பேராயர்களை சிலரை திரு.பிரபாகரன் சில வருடங்களுக்குமுன்னர் சந்தித்திருந்தார்.

எனவே அரசியல் ரீதியாக இந்திய முக்கியஸ்தர்களை 1987ம் ஆண்டு சந்தித்த பின்னர் முதல் தடவையாக திரு.பிரபாகரன் சந்தித்துள்ள வெளிநாட்டு இராஜதந்திரப் பிரதிநிதியே நோர்வேயின் திரு.எரிக் சொல்ஹெய்ம் என்பது குறிப்பிடத்தக்கது.

வன்னியில் திரு.பிரபாகரனுடனான சந்திப்பை முடித்துக் கொண்ட பின்னர் கொழும்பு திரும்பிய திரு.எரிக் சொல்ஹெய்ம் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார். அம்மகாநாட்டில் திரு.சொல்ஹெய்ம் எல்.ரி.ரி.ஈ. தலைவர் பிரபாகரனைச் சந்தித்ததுபற்றியும், அவருடன் பிரயோசனமான முறையில் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாக மட்டும் தெரிவித்திருந்தாரே தவிர, திரு.பிரபாகரன் எதைப்பேசினார்? எதைக் கோரினார், என்பதைப்பற்றி எதுவுமே தெரிவிக்க மறுத்திருந்தார்.

எல்.ரி.ரி.ஈ. தலைவர் கூறியவற்றை ஜனாதிபதியுடனான பேச்சுக்களின்போது மட்டும் தம்மால் வெளியிட முடியுமே தவிர, முக்கியமான விடயங்களைப் பகிரங்கப்படுத்துவது நோர்வேயின் வழக்கமல்ல எனவும் பத்திரிகையாளர்களிடம் எரிக் சொல்ஹெய்ம் கூறியிருந்தார்.

வன்னியில் நோர்வே பிரதிநிதி நடத்திய திரு.பிரபாகரனுடனான சந்திப்பை எடுத்து நோக்கும் பட்சத்தில் இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் நோர்வே வெளிப்படுத்தும் அதீத கரிசனையே வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடிகின்றது.

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகளில் நோர்வே காலடி எடுத்து வைத்த தருணத்தில் பௌத்த சந்நியாசிகள் மற்றும் பேரினவாத சக்திகள் என்பன போர்க்கொடி உயர்த்தியிருந்தன. அச்சக்திகள் கொழும்பில் நோர்வே தேசத்தின் தேசியக் கொடியையும் எரித்து சாம்பலாக்கியிருந்தன.

கிணற்றுத்தவளைகள் போலிருக்கும் இலங்கையின் பேரினவாதசக்திகள் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளையடுத்து சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே விலகிக் கொள்ளும் என்று மனப்பால் குடித்தன.

ஆனால் நோர்வே இலங்கை இன்ப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக இந்தியா மற்றும் உலக நாடுகள் பலவற்றினது ஆதரவைப்பெற்ற நிலையில் தனது மத்தியஸ்த முயற்சிகளைத் தொடர்ந்து கொண்டிருப்பதையே வன்னியில் நடந்த சந்திப்பு எடுத்தியம்புகின்றது.

இலங்கையின் இன்றைய வளர்ச்சியைக் குட்டிச்சுவராக்கும் ஒரு காரணி இருக்குமேயானால், அது வடக்கு-கிழக்கு பிரச்சனையேயாகும் என்பதை தெளிவுற அறிந்து கொள்ள முடியும்.

இந்நிலையில் பேரினவாத சக்திகள் தமது அறியாமை, மற்றும் குறுகிய கண்ணோட்டங்கள் என்பவை காரணமாகவே இலங்கை இன்பிரச்சனைக்குத் தீர்வொன்றை எட்டுவதற்கான எந்தவொரு முயற்சிகளுக்கும் தடைக்கற்களைப் போட்டுவருவதை அவதானிக்க முடிகின்றது.

நோர்வேயின் சமாதானமுயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில், அதற்கு எதிராகக் குரல் எழுப்பிய பேரினவாத சக்திகள், சந்திரிகா அரசு இப்பிரச்சனைத் தீர்வையும் உள்ளடக்கியதாகத் தெரிவித்துக் கொண்டு வரவிருந்த உத்தேச அரசியலமைப்புச் சாசனத்துக்கெதிராகவும் கடும் எதிர்ப்பை சிலமாதங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தன.

எத்தகைய குழப்பங்கள் கூச்சல்கள் ஏற்பட்டபோதிலும் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு முழு இலங்கையையும் அச்சுறுத்தும் உள்நாட்டு யுத்தம் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பதே நியாயமாகச் சிந்திக்கத் தெரிந்த உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளின் விருப்பாக இருக்கின்றது.

இந்த விருப்பத்தை வெளிப்படுத்துவதாகவே திரு. எரிக் சொல்ஹெய்ம், எல்.ரி.ரி.ஈ. தலைவர் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு விளங்குகின்றது.

திரு.எரிக் சொல்ஹெய்ம் வன்னியில் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகத் தாம் கருதுவதாகத் தெரிவித்தாரே தவிர, இனப்பிரச்சனைத் தீர்வை எட்டுவதென்பது மிகவும் நீண்டதொரு பயணமாகும் என்றே சுட்டிக்காட்டியிருந்தார்.

நோர்வே மத்திய கிழக்குப்பிரச்சனை தொடர்பாகச் செய்து கொண்ட பங்களிப்புப்பற்றியும் திரு.சொல்ஹெய்ம் குறிப்பிடத்தவறவில்லை.

மிகவும் காரசாரமான பிரச்சனையாக ஒரு காலத்தில் இருந்து வந்த இஸ்ரேலிய, பாலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் நோர்வே கையாண்ட நடவடிக்கைகள் ஒரு சில வருடங்களுக்கு முன்னர் வெற்றியைத்தந்திருந்தன.

இஸ்ரேலிய, பாலஸ்தீன சமாதான முயற்சியில் ஒத்துழைத்தமைக்காக இருதரப்புத் தலைவர்களுக்கும் நொபேல் சமாதானப் பரிசும் கிடைத்திருந்தது.

ஆனால் சமாதானத்துக்காக நொபேல் பரிசை வென்ற இஸ்ரேலிய, பாலஸ்தீன விவகாரம் தற்போது மீளவும் பலத்த சர்ச்சைக் குள்ளாகியிருப்பதையே அவதானிக்க முடிகிறது.

ஜெரூசலம் நகரைச் சொந்தம் கொண்டாடுவது தொடர்பாக இஸ்ரேலியர்களும் பாலஸ்தீனர்களும் மீண்டும் மோதிக் வருகின்றனர். ஆரம்பித்திருப்பதோடு கடந்த ஒரு சில வாரங்களில் வன்முறைகளில் பலர் கொல்லப்பட்டுமுள்ளனர். உடமைகள், சொத்துக்களுக்குச் சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் நோர்வே இஸ்ரேலிய, பாலஸ்தீனப் பிரச்சனையில் மேற்கொண்ட சமரச முயற்சிகள் ஜெரூசலம் நகர் தொடர்பாகத் தற்சமயம் பிசுபிசுத்துப் போயுள்ளதையும் திரு.எரிக் சொல்ஹெய்ம் இலங்கைப் பத்திரிகையாளர்களிடம் சுட்டிக்காட்டியிருந்தார்.

இலங்கை இனப்பிரச்சனை என்பது கூட மிகவும் மோசமான நிலையை எட்டியிருப்பதையே காணமுடிகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளும், இலங்கை அரசதரப்பும் மிகவும் அபாயகரமான கனரக ஆயுதங்கள் சகிதம் வடக்கு-கிழக்கில் நடத்தி வருகின்ற யுத்தம் எந்தவொரு அரசியல் அணுகுமுறைகளையும் மழுங்கடிப்பதாகவுமிருக்கின்றது.

இத்தகைய மூர்க்கத்தனமான ஒரு சூழ்நிலையில் இலங்கையர்களிடையே அரசியல் தீர்வு குறித்த நம்பிக்கையின்மை நிலவுகின்ற தருணத்தில் நோர்வே மேற்கொள்ள வந்திருக்கும் சமரச முயற்சியென்பது வரவேற்கக்கூடியதாகவே இருக்கின்றது.

இருந்தபோதிலும் நோர்வே பிரதிநிதியின் எல்.ரி.ரி.ஈ. தலைனவருடனான சந்திப்பை ஜனாதா விமுக்தி பெரமுன, (ஜே.வி.பி.), சிஹல உறுமய போன்ற அரசியல் கட்சிகள் கண்டித்திருப்பதோடு, அச்சந்திப்பின் அரசியல் முக்கியத்துவத்தை உணராதவையாகவும் அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளன.

இலங்கை இனப்பிரச்சனையைப் பொறுத்தவரை ஒரு நீடித்த நிரந்தரத்தீர்வுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் பங்களிப்பு மிக. மிக, அவசியமானதென்று அரசியல் சாணக்கியம் கொண்ட அனைத்துத் தரப்பினராலும் சந்தேகத்துக்கிடமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் வன்னியில் நோர்வே பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் அகியோருக்கிடையில் நிகழ்ந்திருப்பது வெறுமனே ஒரு சந்திப்பு மட்டுமே தவிர, அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் என்பது நிறையவே தடைக்கற்களைத் தாண்டவேண்டியதாகவே இருக்கின்றது.

எனவே தடைக்கற்கள் என்றிருப்பவற்றை அகற்றுவதா? அல்லது மேலும் தடைக்கற்களால் சமாதானப் பாதை குறுக்கீடு செய்யப்படுவதை அனுமதிப்பதா? என்பதை ஆட்சியதிகாரங்களில் உள்ளவர்களே தீர்மானிக்க வேண்டியோராகின்றனர்.

---



## அதிரடி அய்யாத்துரை

**பண்டாரவளைச்** சம்பவம் முழு உலகையுமே உலுப்பிவிட்டிருக்குது. அங்கு நடந்த படுகொலைகள் மிகக் கொடூரமானவை. நிராயுத பாணிகளாக இருந்த தமிழ் இளைஞர்கள் துடிதுடிக்க அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர். இக் கொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீதான விசாரணைகள் துரிதப்படுத்தப்படுவதை விட அச்சம்பவத்தைக் கண்டித்து ஆர்ப் பாட்டஞ்செய்த சந்திரசேகரன் எம்.பி. விசாரணைகள் என்று தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார். சட்டமென்பது இருட்டறையல்ல ஒரு கழிவறையாகமாறியிருக்கிறது.

**கந்தசஷ்டி விரத** இறுதிநாளன்று கொழும்பு கொம்பனிவீதி, முருகன் கோவில் சூரசங்காரம். மாலைநேரம் கொழும்பு கோட்டையிலிருந்து வீடுதிரும்புவோருக்கு பஸ்கள், கார்களில் இருந்தவாறே சூரன்போர் பார்க்கமுடிந்தது. கொம்பனி வீதியில் ஆயுதப்படைக் காவல் மையங்களும் அதிகம். படைவீரர்கள் பலரும் வேலேந்தி முருகன் சமர்புரிந்ததைப் பார்த்தனர். மனிதர்கள் மட்டுமல்ல. தெய்வங்களுங்கூட போரிடுகின்றன என்ற பேச்சுக்கள் அடிபட்டதையும் கேட்கமுடிந்தது.

**சிங்களப் பத்திரிகையொன்று** எல்.ரி.ரி.ஈ. தலைவர் பிரபாகரனுக்கு மாரடைப்பு என்று செய்தி வெளியிட்டிருந்தது. பிரபாகரன் எங்கிருக்கிறார்? எப்படியிருக்கிறார்? என்று ஆயிரக்கணக்கில் படையினர் இருந்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் மாரடைப்புச் செய்தி போட்ட சிங்களப் பத்திரிகை எப்படித்தான் பிரபாகரனைக் கண்டு அவருக்கு மாரடைப்பு என்று எழுதியதோ தெரியவில்லை. கற்பனையில் மட்டுமல். மூக்குச்சாத்திரம் பார்த்தும் செய்தி போட சில பத்திரிகைகள் பழகிக்கொண்டுள்ளன.

**அயல்நாடான இந்தியாலில்** ஒரு புதிய மாநிலம் உருவாகியிருக்குது. ஆதிவாசிகள் பலர் வாழும் பிரதேசமே புதிய மாநிலம். ஒரு இனமும் அதன் மொழி, பிரதேசபரம்பல் என்பவற்றை அங்கீகரித்து சுயாட்சியை இந்தியா வழங்குகிறது. ஆனால் இலங்கையில் இனரீதியான தனித்துவம் நிராகரிக்கப்பட்டு இனப் பிரச்சனை நரபலியாகவே நீண்டு சென்றுகொண்டிருக்கிறது.

**இலங்கை கிரிக்கெட்** வீரர்கள் அர்ஜுன, அரவிந்த மீது இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவின் கவனம் திரும்பியிருக்குது. கிரிக்கெட் சூதாட்டத்தில் அவர்களும் சம்பந்தமாம். நெருப்பில்லாமல் புகை வராது. உண்மைநிலையைக் கண்டறிய வேண்டும், இலங்கை கிரிக்கெட் கோதாவையும், சூதாட்டக்களமாக மாற்றுவதற்கு இடமளிக்கக்கூடாது.

# திகில் தொடர்



ஏர்க்கண்டிசன் செய்யப்பட்ட பேருந்துலிருந்து இறங்கி வந்த நடிகர்களும், இயக்குநர் மற்றும் டெக்னி ஷியன்களும் விரைந்து வந்து அந்த கிழட்டு வாட்ச்மேனை சூழ்ந்து கொண் டனர்.

பட அதிபர் தாணுவை மாலையமாமணி வாட்ச்மேன் முட்டாள்தனமாக உளறி கிலியை பரப்புவான் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

அவர் இங்கே வந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது.

நடிகை ரத்னா மிரளும் கண்களுடன் அவர் அருகே வந்து நின்று கொண்டாள்.

அவள் படித்த கதைகளில் யட்சிணி போன்ற தீய தேவதைகள் பற்றி அறிவாள். அது ரத்தம் குடித்து உயிரையம் குடிக்கும் கெட்ட ஜாதி துஷ்டதனமான பிசாசு. அனுமாய வித்தைகள் பல செய்யும் என்று படித்திருந்தாள். அவர்கள் எதுவும் புரியாமல் விழிப்பதைக் கவனித்த வாட்ச்மேன் சம்பூர்ணனுக்கு சுமார் எழு பது வயது இருக்கும். சவரம் செய்யாத முகம், உடைந்து ஒட்டுப் போடப்பட்ட மூக்குக் கண்ணடி, கிழிந்த முழுக்கால் கிழிசல் கண்ட பழைய கருநீல நிறக் கோட்டு, கழுத்தைச்சுற்றியுள்ள மப் பிளர் ஆகியவையே அவனுடைய உடை கள்.

கிழவன் உடம்பில் இன்னும் தோல் சுருக்கம் தெரியவில்லை. அடிக் கொருதரம் லொக் லொக் என்று இருமி மிகுந்த சிரமப்பட்டுக் கொண்டிருந்தான். பேசும் போதே மூச்சு வாங்கியது.

கஞ்சா ஊதும் மதுப்பழக்கம் உள்ள வனாகவும் இருக்கலாம் அவன் தமிழை தாய்மொழியாக்க கொண்டவனும் அல்ல... அவ னுக்கு தமிழில் பேசத்தெரியும் அவ்வளவு தான். நீலகிரி மலைச்சராலில் வசிக்கும் தோடர், படுகர், குரும்பர் ஆகிய இனத்தைச் சார்ந்தவனாகவும் இருக்க லாம்.

"ஒல்டுமேன் எதையோ சொல் லிச்சே. அது என்ன?" என்று ரத்னா மழலை ததும்பும் இனிய குரலுலில் பட அதிபரின் தோளருகே சாயந்து நின்று கொண்டே கேட்டாள்.

ஏற்கனவே குமுறிக் கொண்டிருந்த பட அதிபர் திடீரென்று வெடித்தார். "இந்த வாட்ச் மேன் சம்பூர்ணர் ஒரு சைத்தான். பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டிய ஒரு முட்டாளை இங்கே வாட்சமேனாக போட்டது தப்பு. நான் ஒரு மடையன்."

"சரியாகச் சொன்னது சாரே... நீ ஒரு முட்டாள் தான்!" என்றான் சம்பூர்ணர். அவன் இப்படி சொல்லுவது தன்னுடைய முகத்தில் யாரோ ஓங்கிகுத்தியது போல் இருந்தது.

கேவலம் ஒரு வாட்ச்மேன் தன்னை மிகவும் சாதாரணமாக நினைத்து இப்படி பேசுவானா? அருகில் சூழ்ந்து நின்றவர்கள் அவனுடைய ஏளனமான பேச்சைக் கேட்டபடி என்னையும் மற்றவர்களைப்போல...!

சம்பூர்ண.... என்னையா முட்டாள் என்று சொல்கிறாய்?" இவர்களை உள்ளே அழைத்துச் சென்று பொருத்தமான அறை களில் நான் தங்கவைக்கிறேன்."

மனதிற்குள் கோபம் பொங்கிய போதி லும் அனாவசியப் பிரச்சனைகளை ஏற்படுத்த வேண்டாம் என்ற எண்ணத்துடன் அவர் போனதும் அவன் சண்டைக் கோழி போல் அலறித்தடுத்தான்.

"சாமி..... தப்புத்தண்டா வேண்டாம். இந்த சினிமா கும்பல அநியாய மாக பலி கொடுக்க வேண்டாம்!"

இதுவரையிலும் விலகி நின்றே கவனித் துக் கொண்டிருந்த படத்தின் இயக்குநர் வசீகர் கூலிங் கிளாசை நெற்றிக்கு ஏற்றிக் கொண்டு என் அருகில் வந்தார்.

சற்று அதிகமான நீளமான ஹிப்பிப் பாணியில் தலைமுடியை வளர்த்திருந்தார். மது அருந்தும் பழக்கம் இருப்பதால் கண்கள் சிவந்து முகத்தில் சதைக் கோலம். கண்களுக்குக் கீழே கருவளையங்கள், நீண்டு, மேலுதட்டை மறைக்கும் கொத்து மீசை. உதடுகளின் இடுக்கில் புகையும் சிக ரெட். இவையே டைரக்டர் உருவம்.

ஆனால் அவரிடம் டைரக்டர் என்ற சித் தாப்புக்கும், போலித்தனத்துக்கும் பஞ் சமில்லை.

"என்ன சொல்றே ஒல்ட்மேன்?" அவர் தேவையில்லாமல் மூக்கை நீட்டியது பட அதிபருக்குப் பிடிக்கவில்லை. டைரக்டர் விருப்பம் என்னவோ அதை தான் செய்ய வேண்டும் என்று நினைப்பவர் அவர்.

ஆனால் வாட்ச்மேன் சம்பூர்ண யாரையும் மதித்ததாக தெரியவில்லை.

"எஜமான் ராமி.... முதலில் நீங்க என்னை மன்னிக்க வேணும்," என்று பட அதிபரை நோக்கி ஒரு கூழைக் கும்பிடு போட்டு விட்டு, "எல்லாரும் ஷேமமாக இருக்கணும் என்பதற்காகவே இதை சொல் றேன்," என்று தமிழை அவன் எப்படியெல் லாமோ தட்டுத் தடுமாறி உச்சரித்தான்.

பட அதிபர் உள்ளக் குமுறலோடு பற் களை கடித்தார். அடுத்து செய்ய வேண்டிய முதல் வேலையைச் செய்யும் வாட்ச்மேனுக்கு வேட்டு வைக்கலாம் என்று எண்ணிக் கொண் டார்.

"வாட்ச்மேன் எனக்குப் பயமாக இருக்கு. பேய், பிசாசுகள் என்றால் எனக்கு பயம். என்னத்தைப் போலிருக்கும்..? போலிருக்கும். நீ எதையும் மறைக்காமல் சொல்!"

டைரக்டர் சொல்ல நினைத்ததை நடிகை ரத்னா மிரளும் விழிகளுடன் சொன்னாள்.

தாயார் சவுந்தரவல்லி பட்டுச் சேலை நுனியை இழுத்து விரித்துப் போர்த்தியபடி என்ன நடக்கப் போகிறதோ என்ற திகிலோடு நின்று கொண்டிருந்தாள். பயத்தால் கந்த சஷ்டி கவசத்தை ஓசையின்றி மனதிற்குள் ளாகவே பாராயணம் செய்ய ஆரம்பித்து விட்டாள்.

"புரடியூசர்.... ஏதாவது ப்ராப்ளமா" என்று குரல் கொடுத்துக் கொண்டே வந் தான் படத்தின் கதாநாயகன் நடிகரான சிவப்பிரகாஷம்-ரத்னாவுடன் நடிக்கப் போகும் துடிப்பான இளங்காளை.

பட அதிபர் தாணுக்கு அவனது வருகை பிடிக்கவில்லை. அவன் வாட்ட சாட்டமாக கோதுமை நிற உடம்போடு இருந்தது ஒரு குற்றம். அழகான ரத்னாவை படப்பிடிப்பு முடிவதற்குள் வளைத்துப் போட்டுக் கொள்வானோ என்ற அச்சம் இன்னொரு பக்கம்.

அவன் இளைஞனாக இருப்பதால் வெகு விரைவில் அவளைக் கவர்ந்து மயக்கி விடுவானோ என்ற தாழ்வு மனப்பான்மை. ஓர் இளமங்கையின் உள்ளம் ஒரு வாலிபனிடம் பறி கொடுப்பது புதியது அல் லவே! எல்லோரிடமும் ஜாக்கிரதை வேண்டும் என்று பட அதிபரின் அரைக்கிழட்டு உள்ளம் எச்சரித்தது.

"என்ன ப்ராப்ளம் சார்?" மறுபடியும் கேட்டான் சிவப்பிரகாஷ்.

"நோ... நோ... நத்திங். இந்த கிழட்டு வாட்ச்மேன் சம்பூர்ணை பைத்தியம் பிடித்துக் கொண்டிருக்கிறது!"

பட அதிபர் சொல்ல, உடனே கொக்கலிப்பான சிரிப்புடன் வாட்ச்மேன் மறுத்தான்.

அவர் எதையும் சொல்லாதே என்று சமிக்ஞை செய்த போதிலும் அவன் எதையும் பொருட்படுத்தவில்லை.

"இல்லை.... எனக்குப் பைத்தியம் பிடிக்கல்ல... அரண்மனை போல இருக்கிற இந்த பழைய பங்களாவுடைய பெயர் தான் 'மங்கள விலாஸ்' ஆனால், இங்கே தங்கி னால் மங்களம் ஏற்படாது. மரணம் தான் வரும். இன்று ராத்திரி பவுர்ணமி தானே?"

"ஆமாம்...." என்று மிரண்டான் மேக்கப்மேன் சிங்காரம்.

"அப்படின்னா இன்று ராத்திரி மங்கள விலாஸில் மங்களம் இல்லை" பவுர்ணமி அமாவசையும் யட்சிணி வருகைக்கு உகந்த நாள். யாவருமே தப்பமுடியாது;

இப்படி வாட்ச்மேன் சொன்ன போது உள்ள ஹாலில் இருந்து ஒரு பயங்கரமான சத்தம் கிளித்துக்கொண்டு வந்தது.

அது ஒரு பெண்ணின் அபாய அலறல்.

(திகில் தொடரும்)



**திகில் கதை மன்னன்**
**பி.டி.சாமி**

# தத்துவம் பாடிய முத்தையா

**டாக்டர்.சு.சண்முகசுந்தரம்**

**கோ**வை சென்ட்ரல் ஸ்டுடியோ பரபரப்பாக இருந்தது. திருவேங்கடசா மிக்கு அவன் ஒரு சீட்டு எழுதி அனுப்பி னான். வரச்சொன்னார். போய்ப் பார்த் தார் முத்தையா.


"அருமையாகக் கதை எழுதுவேன்; அற்புதமான வசனம் எழுதுவேன்", என் றார் "அதற்கெல்லாம் ஆட்கள் இருக் கிறார்கள். பாட்டு எழுதத் தெரியுமா?" என்று கேட்டார்.

"ஓ! எழுதுவேனே" என்றார்.

"அப்படியென்றால் கொஞ்சம் இருங்கள்" என்று சொல்லிவிட்டு உள்ளே போனார்.

டைரக்டர் ராம்நாத் வந்தார். ஆண் வேடம் தரித்த ஒரு பெண் இன்னொரு பெண்ணுக்கு ஆறுதல் சொல்வதாக ஒரு கட்டத்தைச் சொல்லி "உங்கள் மனோதர் மத்துக்கு ஏற்ப எழுதிக் கொண்டு வாருங் கள். பிறகு ட்யூன் போடலாம்", என்றார்.

முத்தையா, கண்ணதாசன் ஆனார். இருபது நிமிடங்களில் பாடல் எழுதிக்



கொடுத்தார். ராம்நாத் மாலையில் பாடலைப் பார்த்துவிட்டு 'சபாஷ்' என்றார்.

"கலங்காதிரு மனமே- நீ கலங்காதிரு
மனமே- உன்
கனவெல்லாம் நனவாகும் ஒரு தினமே"

இதுதான் இவரது முதல் பாட்டு. படம் 'கன்னியின் காதலி' 1948ல் இது படத்திற்காக மட்டுமல்ல; அவர் தனக்கே சொல்லிக் கொண்ட ஆறுதலும் ஆகும்.

முதல் பாடல் நன்றாக இருக்கிறது என்ற டைரக்டர், அடுத்த பாடலுக்கான இடத்தையும் சொல்லி எழுதி வரச் சொன்னார். கண்ணதாசன் அங்கேயே இருந்து எழுதி முடித்தார்.

"மற்ற லௌகீக விஷயங்களை வெங்கட சாமியோடு பேசிக் கொள்ளுங்கள். நாளை இசையமைப்பாளரோடு உட்கார லாம்," என்றார் டைரக்டர்.

வெங்கடசாமியோ, 'பாட்டுக்கு நூறு ரூபாய்' என்றார். இதைவிட ஓர் இளங் கவிஞனுக்கு உற்சாகம் அளிப்பது வேறு எது?

கதை எழுதப் போனவர் பாடல் எழுதிய கதை இது.

இசையமைப்பாளர் சுப்பையா நாயு டுவோ, "இரண்டு பாடல்களும் நன்றாக இருக்கின்றன. ஒருவரிகூட மாற்ற வேண் டாம். அப்படியே மெட்டுப் போட்டு விடு கிறேன்" என்றார். போட்டு முடித்தார். கண்ணதாசனும் திரைப்பாடல் கவிஞர் ஆனார். சுப்பையர் நாயுடு இவரை 'பாட்டய்யா' என்று அழைக்க, இவரும் அவரைச் 'சங்கீதய்யா' என்றே மரியாதை யோடு அழைத்துவர ஆரம்பித்தார். இரண்டு நாட்களில் இரண்டு பாடல் களும் பதிவு செய்யப்பட்டன. ஒரு பாடலை கே.வி.ஜானகிபாட, இன்னொன்றைக் கோரஸாகப் பாடினார். பாடல்களைக் கேட்டவர்கள் அனைவரும் பாராட்டினர்.

மறுநாள் டைரக்டர் ஏ.எஸ்.ஏ.சாமி வந்தார். "என்ன சார்? 'ரெக்ரூட்டுகளை எல்லாம் வைத்து பாட்டு எழுதுகிறீர்கள். படம் பெரிய படம். கவிராயரை வைத்து எழுதச் சொல்லுங்கள்" என்றார். கவி ராயர் என்றால் உடுமலை நாராயணக் கவி.

கண்ணதாசனுக்கு உடம்பு நடுங் கிற்று. டைரக்டர் ராம்நாத்தோ பதில் சொல்லவில்லை. சாமி போனதும் "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள்!" என் றார். மூன்றாவது பாடலுக்கான சூழ் நிலையைச் சொன்னார். வசனகர்த்தா எஸ்.டி.எஸ். வந்தார். "பாடல்கள் அற் புதம். நான் நாராயணசாமியிடமே சொல்லிவிட்டேன்" என்றார்.

அன்றைக்குக் கண்ணதாசன் அறைக்கு வந்தபோது அங்கே தந்தி இருந்தது. கொடுத்தது கே.வி.ஜானகி. இவரது பாடலைச் சேலம் மாடர்ன் தியேட்டர்சில் பாடிக் காட்டியிருக்கிறார் அவர். அது அவர்களுக்குப் பிடித்துப் போயிற்று. உடனே அழைத்து தங்கள் படத்துக்கு எழுதவைக்க விரும்பினர். இருவரும் உற்சாகமாக அங்கே போனார். ஆனால் 'மாயாவதி' படத் துக்கு நகைச்சுவை காட்சிகள் எழுதச் சொன்னார்கள். இவர் மீண்டும் கோவைக்கு வந்து 'கன்னியின் காத லிக்கு' மேலும் 5 பாடல்கள் எழுதிக் கொடுத்தார்.

1949ல் 'மர்மயோகி'க்கு இரண்டு பாடல்கள் எழுதி ரூ.300 வாங்கினார். 1950ல் ரூ. 500 வாங்கிக் கொண்டு 'திகம்பர சாமியார்' படத்துக்கு எழுதிக் கொடுத்தார். பின்னர் 'தேவகி' படத் துக்கும் இரண்டொரு பாடல்கள் எழுதினார். இந்த அழைப்புகளால் சந்தர்ப்பங்கள் கிடைத்தன என மகிழ்ந்த இவர், சுதந்திரமாக எழுத முடியாமைக்குக் கொஞ்சம் வருந் தினார். 'கருத்துக்களை மெட்டுகளுக் குள் திணிக்க வேண்டியிருக்கிறதே' என்றும் சங்கடப்பட்டார்.

அந்த நாளில் பாட்டு எழுதுவது என்பது பிரசவ வேதனைபோன்றது. 'தானாதனானா என்றொரு தத்த காரத்தைக் கொடுத்துவிட்டு வார்த்தை களையும் கருத்துக்களையும் அதற்குள் திணிக்கச் சொல்வார்கள். உள்ளம் வலிக்கும்; உடம்பு வலிக்கும். நினைப்ப தைச் சொல்ல முடியாமல் வயிற்றுப் பாட்டுக்காக எழுதித்தீர்க்க வேண்டும். அப்போது உடுமலை நாராயண கவிக்கு மிகுந்த செல்வாக்கு. மற்ற பாடலாசிரியர்களை அவர் அலட்சிய மாகப் பார்ப்பாராம்.

ஒரு நாள் "நாராயண கவியைப் போல எழுதுவதற்கு இன்னொருவன் பிறக்கப் போவதில்லை" என்று இசை யமைப்பாளர் சுப்பராயன் சொன்னா ராம். இவரிடம். இது இவருக்கு ஒரு அவமதிப்பு. கண்ணதாசனோ ஆத் திரத்தோடு "அவரைப் போல ஆயிரம் கவிஞர்களை நான் உருவாக்குவேன்" என்று சவால் விட்டுச் சொன்னார். 'அப்படி தாமே உருவாக முடியும்' என்று நம்பினார். உருவாகியும் காட்டினார்.

'செந்தாமரைக்காக' இவர் எழுதிய பாடல் ஒன்று சரியாக அமையவில்லை, என்று உடுமலையிடம் கொடுத்துத் திருத்தச் சொன்னார்கள். 'அவர் இரண்டு நாள் முயற்சி செய்தார். "இதற்குமேல் இதில் எதுவும் செய்ய முடியாது' என்று கூறிவிட்டாராம். இது கண்ணதாசனின் எதிர்நீச்சல்.

இவர் 'ராணி' படத்துக்காக எழு திய பாடலைப் பானுமதி பாடவேண் டும். அவர் பாடலைப் பார்த்து விட்டு "இது என்ன பாஷை?" என்று கேலி செய்தாராம். பிறகு பாட்டு நன்றாக இல்லை என்று எழுந்து போய் விட்டா ராம். அதனால் வேறு ஒரு பாடல் எழுதச் சொன்னார்கள். இவரும் எழுத, அதுவும் எடுபடவில்லை. இப்படி பல்வேறு அவமதிப்புகள் இவருக்கு.

'பணம்' படத்திற்குப் பெரும் பாலான பாடல்களை இவரே எழுதி னார். இவர் பாடல்களில் தி.மு.க. பிரச்சாரம் நிறைந்து இருந்தது. அன் றைக்கு அது புதுசு; பொருத்தமாகவும் இருந்தது.

'கல்யாணிக்குப் பாடல் எழுதப் போனார். அந்த இசையமைப்பாள ருக்கு இந்தி இசைக்கு ஸ்வரங்கள் எழுதிக் கொள்வது மட்டுமே வேலை இவருக்குச் சில இந்தி ரெக்கார்டுகள் தரப்பட்டன. அதைப் போட்டுப் பார்த்து பாட்டெழுத வேண்டியது தான் இவரது வேலை. மூன்று நாட் களுக்குள் எல்லாப் பாடல்களையும் எழுதி முடித்தார். உடம்பில் புது உற்சாகம். ஆனால் ஆத்ம திருப்தி யில்லை. மனோதர்மத்துக்கு எழுதுவது போல் இசைக்கு எழுதுவது அவ்வளவு சுவையாக இருக்காதல்லவா?

பின்னர் 'வளையாபதி', 'திரும்பிப் பார்' போன்ற படங்கள். எந்தெந்தப் பாடலென்று அவருக்கே நினை வில்லையாம். அன்று அவர் இஷ்டப்படி விட்டிருந்தால் அதைவிட நன்றாக எபதியிருப்பாராம்.

'இல்லற ஜோதி'க்கு கதை, வசனம், பாடல்கள் எழுதினார். இதில் கலைஞருக்கும் இவருக்கும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. கலைஞரும் சிவாஜியும் சேர்ந்துகொள்ள, சிவாஜிக் கும் இவருக்கும் பிடிக்காமல் போனது. எனவே, எம்.ஜி.ஆர். போன் செய்து, அவருடைய படங்களுக்கெல்லாம் இவரை எழுதச் சொன்னார். 1954ல் 'மதுரை வீரனுக்கு' வசனம், பாடல்கள் எழுதினார் இவர்.

'நாடோடி மன்னன்', 'பவானி', 'மன்னாதிமன்னன்', 'ராணி சம்யுத்தா', 'ராஜாதேசிங்கு', 'மகாதேவி' என்று எம்.ஜி.ஆர். படங்களுக்கு நிறைய எழுதினார். சிவாஜிகணேசன் படங் களுக்கு எழுதுவதை விட்டுவிட்டார்.



## பலமான ராட்சசியே

← பெண்களில் உலக அழகியாகத் தெரிவு செய்யும் போது அழகைத்தான் அதிகம் பார்ப்பார்கள். ஆண்களில் உலக அழகர்களைத் தெரிவுசெய்யும் போது. முறுக்கேறிய உடல் பலத்தைப் பார்ப் பார்கள்.

ஆண்கள் மட்டும்தான் உடலைப் பலமாக்கி முறுக்கேற்றிக் காட்டமுடியும். பெண்களால் முடியாதா? எனச் சவால் விடுவதுபோல் தனது உடலை முறுக் கேற்றிக் காட்டுபவர் கரோலினா ஜூன்கர். ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவர்.

வார்சோவில் நடந்த பெண்ணழகிப் போட்டியில் இந்த அழகான ராட்சசிதான் ஒரு பலமான ராட்சசி என்று காட்டிய போது எடுத்தபடம் இது.

## ஆடை அலங்(காரம்) கோலம்

↓ புதிய ஆடைகளை அறிமுகம் செய்கிறோம் என்று புல், பூண்டுகள், உட்பட இன்ன பிற பொருட்களைக் கொண்டு பலவிதமான ஆடை(?)களை அறிமுகம் செய்கின்றன சில ஆடை வடிவமைப்பு நிறுவனங்கள்.

அதுமட்டுமன்றி அந்த ஆடைகளை அழகிகளை அணிந்து வரச் செய்து கண்காட்சியும் நடத்துகின்றனர். சமீபத்தில் ஃபிரான்ஸின் தலைநகர் பாரீஸில் அழகிகளை அணிந்து வரச் செய்து அறிமுகப்படுத்தப்பட்ட ஆடைகள் இவை.

(பட உதவி: மோகன்-சிங்கை)



# தகவல் பெட்டி



## சாதனையும் சவாலும்

↑ அண்மையில் ஹங்கேரி நாட்டின் புடாபெஸ்ட் நகரில் நடத்தப்பட்ட கின்னஸ் சாதனைதான் இது. ஒரு தொன் எடையுள்ள கொங்க்றீட் பாளங்களை அடுக்கி வைத்து, தனது முழங்கையால் அடித்து உடைத்தார் ஓர் ஆசாமி.

இந்த ஆசாமியின் பெயர் சுல்தான் பாத்து ஹைதர் என்பதாகும். சாதனையை நிலைநாட்டிய ஹைதர் ஒரு சவாலையும் விட்டார்.

"இனிவரும் காலங்களில் இந்த உலக சாதனை தவிடுபொடியாகப் போகிறது. அதுவும் என்னால்" என்பதுதான் அந்தச் சவால்.

(பட உதவி: அஹமட் நியாஸ்-கொரியா)



## ஆ(ண்)ள் மாற்றம்


→ தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் உள்ள இரவு விடுதி ஒன்றின் பாடகி இவர். பாடி ஆடும் இந்தப் பாவையின் தற்போதைய பெயர் பாரின்யா.

அப்படியானால் முந்தைய பெயர்? கியா டேபுஷாபே. ஆம் முன்பு ஆணாக இருந்த கியா டேபுஷாபே ஆளும் மாறி பெயரையும் மாற்றி விட்டார். அதாவது பெண்ணாக மாறி பெயரை யும் பாரின்யா என்று மாற்றிக்கொண்டு விட் டார்.

# வடிவேலு கைது

கல்யாண வயதைத் தாண்டியபிறகும் தனக்கு கல்யாணம் நடக்கவில்லையே என்ற ஆதங்கத்தில் சுயம்வரம் வைத்து மணப்பெண்ணைத் தேடிக் கொள்ளலாம் என்று நோட்டீஸ் அடித்து பெண்களிடம் விநியோகித்தான் வெள்ளையன். இதனால் கோபமடைந்த பெண்கள் போலீஸில் புகார் செய்ய, போலீஸார் வந்து வெள்ளையனைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்தக் காட்சி 'எங்களுக்கும் காலம் வரும்' படத்திற்காகப் படமானது. இதில் வெள்ளையனாக வடிவேலு நடித்தார்.

முகப்பில் உதயா-விந்தியா
படம்: பூங்குழலே



வெங்கடேஷ்-மீனா

# பத்ரி விஜய்

விஜய் நடிக்கும் புதிய படமொன்றுக்கு 'பத்ரிநாதன்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப்படத்தில் விஜய் பாத்திரத்தின் பெயரும் இதுதான்.

## மினி சினி

★ முதலிடத்தில் இருந்த சிம்ரானை இறக்கிய பெருமை ஜோதிகாவையே சேரும். இப்போது சிம்ரான்-ஜோதிகா இருவரும் இணைந்து புதிய படமொன்றில் நடிக்கப் போகிறார்கள்.

★ விஜயகாந்தின் 'வல்லரசு'வில் வில்லனாக அறிமுகமான இயக்குநர் மிஷ்கின், அண்மையில் வெளியான 'சிநேகிதியே' வில் கார்த்திக்குடன் நடித்தார். இப்போது சத்யராஜுடன் 'மிலிட்டரி நாராயணசாமி' நடித்து வருகிறார்.

★ 'கண்ணெதிரே', 'புதுமைப்பித்தன்', 'நீ வருவாய் என' ஆகிய படங்களில் இணைந்து நடித்த பார்த்திபன்-தேவயானி ஜோடி தற்போது 'நினைக்காத நாளில்லை' படம் மூலம் மறுபடி இணைகிறது.

★ கார்த்திக்-சிம்ரான் இணைந்து நடிக்கும் 'அழகான நாட்கள்' படத்தை இயக்கி வரும் சுந்தர்.சி. இப்போது இன்னொரு ஜோடியாக இதில் ஜெயராம்-மும்தாஜ் ஜோடியையும் நடிக்க வைத்திருக்கிறார்.

★ பாரதிராஜாவின் மகன் மனோஜுடன் இணைந்து 'பதினாறு வயதினிலே' என்ற இசை அல்பத்தில் சொந்தக்குரலில் பாடிய மீனா, விரைவில் சொந்தக் குரலில் பாடி இசை அல்பம் ஒன்றை வெளியிடவுள்ளார்.

★ அர்ஜுனுக்கு ஜோடியாக 'வானவில்' படத்தில் அறிமுகமான அபிராமி தற்போது 'அக்னி நட்சத்திரம்' என்ற மலையாளப்படத்தில் நடித்து வருகிறார். இதில் சுரேஷ்கோபி நாயகனாக நடிக்கிறார்.

★ 'முத்து' படத்தில் இருந்து 'என்னம்மா கண்ணு' படம் வரை பல படங்களில் ஒரு பாடல் காட்சியில் நடனமாடியிருக்கும் ஜோதிலட்சுமி இப்போது பிரபு நடிக்கும் 'தாலி காத்த அம்மன்' படத்திலும் ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார்.

★ நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் பெரிய திரையில் படமொன்றை இயக்கத் திட்டமிட்டிருக்கிறார். இப்படத்தில் மாதவன் கதாநாயகனாக நடிப்பார் எனத் தெரிகிறது.





பிரசாந்த்-ஷாலினி
படம்: பிரியாத வரம் வேண்டும்

# இந்திப் படத்தில் அஜித்

கொஞ்ச நாட்களுக்கு ரேஸை ஒதுக்கி வைத்து விட்டு 'தீனா' படத்தில் நடித்து வருகிறார் அஜித்குமார். பல கெட்-அப்களில் நடிக்கும் 'சிட்டிசன்' படத்தை இந்நேரத்தில் இந்திப் படமொன்றில் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார். அதுவும் வில்லன் வேடத்தில். 'அசோகா' என்று பெயரிடப்பட்டிருக்கும் இப்படம் ஒரு சரித்திரப்படமாகும். அண்ணன்-தம்பிகளுக்கிடையே நடைபெறும் போராட்டத்தை மையமாகக் கொண்ட இப்படத்தில் அண்ணனாக ஷாருக்கான் நடிக்கிறார். தம்பியாக வில்லன் வேடத்தில் அஜித். பிரபல ஒளிப்பதிவாளரும் இயக்குநருமான சந்தோஷ் சிவன் இயக்கும் இப்படத்தில் அஜித் வேடத்தில் முதலில் அரவிந்த்சாமியை நடிக்க கேட்க அவர் மறுத்து விட்டார்.



பிரதிக்ஷா
படம்: மனு நீதி

# இந்தியில் ரீமா

அகத்தியன் இயக்கத்தில் கார்த்திக்-கவுசல்யா நடித்த 'கோகுலத்தில் சீதை' இந்தியில் தயாராகிறது. தமிழில் கவுசல்யா நடித்த வேடத்தில் இந்தியில் நடிப்பவர் 'மின்னலே' படநாயகி ரீமா சென்.

## காதோடு சொல்லுகிறோம்

விகடகவியின் பெயரில் படமெடுத்த இயக்குநரும் தயாரிப்பாளருமான தாடிக்காரரை உடும்புப்பிடியாகப் பிடித்திருக்கிறாராம் ஜோதிமயமான தங்கை நடிகை. நடிகையின் அழகில் கிறங்கிப் போன தாடிக்காரர், உச்ச நட்சத்திரத்தின் புதிய படத்தில் நடிகையைக் கதாநாயகியாக்குவதாக வாக்குறுதி அளித்துள்ளாராம்.

ஷாஜகானின் மனைவி பெயரைக் கொண்டவரும், 'கட்டிப்புடி கட்டிப்புடி' என திரையப்பேரின் தூக்கத்தைக் கெடுப்பவருமான அந்த இடுப்பழகி நடிகை ஏற்கனவே திருமணமாகி விவாகரத்துப் பெற்றவராம். அந்தக் கணவர் மூலம் இவருக்கு ஒரு குழந்தையும் இருக்கிறதாம்.

மகனைத் தனிநாயகனாக வைத்துப் படமெடுத்தால் ஆகாது என்பதைப் புரிந்து கொண்ட 'இமய' இயக்குநர் 'கடல்' படத்தில் கறுப்பு நடிகருடன் இணைத்து நடிக்க வைத்தார். அடுத்து இயக்கவிருக்கும் படமொன்றிலும் இயக்குநர் இதே முறையைப் பின்பற்றப் போகிறாராம். இம்முறை மகனுடன் இணைந்து நடிக்க 'அலைபாயும்' நாயகனை அணுகியிருக்கிறாராம்.

குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி குமரி நடிகையான நடிகையைக் காதலித்துக் கைப்பிடித்த 'குமார்' நடிகர் 'மனைவி சொல்லே மந்திரம்' என்று இருக்கிறாராம். நடிகரிடம் கதை சொல்லவரும் இயக்குநர்கள் முதலில் மனைவியிடம் சென்று கதை சொல்ல வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறாராம். மனைவி ஓ.கே. பண்ணினால் தான் நடிக்க ஒப்புக் கொள்கிறாராம்.



## பிரபல லைலா

'பார்த்தேன் ரசித்தேன்' படத்தில் பிரசாந்த் ஜோடியாக நடித்த லைலா, அப்பட வெற்றியால் பிரபல இளம் நடிகர்களுக்கு ஜோடியாக ஒப்பந்தம் செய்யப்பட்டு வருகிறார். முருகதாஸ் இயக்கத்தில் அஜீத் ஜோடியாக 'தீனா' படத்தில் நடித்து வரும் லைலா, அடுத்து விக்ரமன் இயக்கத்தில் விஜய் ஜோடியாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

முரளி
படம்: கடல் பூக்கள்

திரையுலக மறுபக்கம் 174
தமிழ்நாட்டிலிருந்து [illegible]

# நடிகரை ஆட்டிப் படைக்கும் ஜோதிடர்

சூப்பர் நடிகர்கள் இருவருக்கு அடுத்த இடத்தில் இருப்பவர் இந்த நடிகர். முதலிரு நடிகர்களுக்கு அடுத்தபடியாக இவரது படங்களுக்குத் தான் அதிக மவுசு.

நடிகர் நடிக்க வந்த புதிதில், நடிகருடைய ஜாதகத்தைப் பார்த்து, "சினிமாவில் பெரிய ஆளாக வருவே" என்று கூறியிருக்கிறார் ஒரு ஜோதிடர். அத்துடன் நடிகரின் சொந்தப் பெயரின் பின் பாதியை மாற்றினால் மக்களைக் 'காந்தமாக' இழுத்து 'வெற்றிகரமாக' உலா வரலாம் என்று ஆலோசனை சொல்லியிருக்கிறார் அந்த ஜோதிடர்.

விடாமுயற்சி, திறமை, அதிர்ஷ்டம் என்பவற்றால் நடிகர் முன்னுக்கு வர, தனக்கு ஆலோசனை வழங்கிய ஜோதிடரை அழைத்து வந்து தனது ஆஸ்தான ஜோதிடராக வைத்துக் கொண்டார்.

நடிகர் படத்தயாரிப்பில் ஈடுபட்டபோதும் ஜோதிடருடைய ஆலோசனையைக் கேட்கத் தவறவில்லை. நடிகராகவும், படத்தயாரிப்பாளராகவும் நடிகர் வெற்றிநடை போட்டார்.

அடுத்து அரசியல் தானே. நடிகரை எப்படியாவது அரசியலுக்கு கொண்டு வரவேண்டுமென்பதற்காக, அவரைப் பொது இடங்களுக்கு வேட்டி, சட்டையுடன் கலந்து கொள்ள ஆலோசனை வழங்கினார் ஜோதிடர்.

நடிகருக்கும் அரசியல் ஈடுபாடும் சபலம் இருந்தது. அதனால் ஜோதிடர் சொன்னபடியே செய்தார். நடிகர் சம்பந்தப்பட்ட எந்தவொரு நிகழ்ச்சிக்கும் ஜோதிடர் வரத்தவறுவதில்லை.

இந்த விஷயம் நடிகரின் நண்பரும், தயாரிப்பாளருமானவருக்கு அறவே பிடிக்கவில்லை. பல முறை நடிகரிடம் சொல்லியும் அவர் கேட்காததால் அப்படியே விட்டு விட்டார் நண்பர்.

நடிகரின் பெயரைத் தவறாகப் பயன்படுத்தி பல இடங்களில் வசூலும் நடத்தியிருக்கிறார் ஜோதிடர். இந்த விஷயம் நடிகரின் நண்பருக்கு எட்ட, உடனே ஜோதிடரைக் கூப்பிட்டுக் கண்டித்தார். இருந்தும் நடிகர் பெரிதாக அதை எடுத்துக் கொள்ளாததால் ஜோதிடர் பாடு கொண்டாட்டமாகிவிட்டது.

சில காலத்திற்கு முன் நடிகருக்கும் நண்பருக்கும் மனக்கசப்பு வர, அதைத் தனக்குச் சாதமாகப்பயன்படுத்திய ஜோதிடர், நடிகரின் மனைவியைக் காக்கா பிடித்து, மனைவியின் சகோதரர் பெயரில் படமொன்றை எடுக்கச் செய்தார்.

இராஜுவ பலம் வாய்ந்த நாடுகளை அழைக்கும் பெயர் கொண்ட அந்தப் படத்தில் எழுத்தோட்டத்தின் போது, நன்றி என இந்த ஜோதிடரது பெயரும் இடம் பெற்றது.

ஜோதிடரின் ஆலோசனையின் பேரில் எடுக்கப்பட்ட இப்படம் பெருவெற்றி பெற்றதைத் தொடர்ந்து ஜோதிடருக்கு நடிகரின் குடும்பத்தில் செல்வாக்கு அதிகரித்துவிட்டது. இதைத் தனக்குச் சாதகமாகப்பயன்படுத்திக் கொண்டு நடிகரை எப்படியாவது அரசியலில் குதிக்க வைக்க தீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் இந்த ஜோதிடர். நடிகரும் ஜோதிடரின் சொற்படி நடந்து வருகிறார்.





சாக்ஷி

## சிம்ரானுக்கு மிரட்டல்

சிம்ரானை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள் அவரது இரசிகர்கள். தனது தொலைபேசி இலக்கத்தை யாருக்கும் கூறாமல் இரகசியமாகப் பாதுகாத்து வந்த சிம்ரானின் தொலைபேசி இலக்கத்தை எப்படியோ அறிந்து கொண்டார்கள் அவரது இரசிகர்கள். அண்மைக்காலமாக நள்ளிரவு வேளைகளில் ஃபோன் எடுத்து சிம்ரானுக்குத் தொல்லை கொடுக்கிறார்களாம். மிகச் சமீபத்தில் இரசிகர் ஒருவர் தொலைபேசியில், "சிம்ரான் கூடப் பேச வேண்டும் இல்லாவிட்டால் சிம்ரான் வீட்டின் முன்னே வந்து தீக்குளிப்பேன்" என்று மிரட்டல் விடுத்துள்ளாராம்.

## ...அசைவ ...ணைப்பு

...ஷ்-திவ்யாஸ்ரீ ...ராஜமந்து என்ற ...கத்தூர பெண்கள்' ...படத்தை எடுத்து ...னார்.

...தார்களைப் பற் ...ளாக இருந்தாலும் ...சேர்க்காமல் தன் ...டுக்கப்பட்டிருக்கிற ...ருப்பினும் தயாரிப் ...வேண்டுகோளுக் ...இரண்டு அசைவப் ...ளை இணைக்கப் ...ராக இயக்குநர்.

## ...குநராகும் ...பதிவாளர்

...ாக்குமார், பி.சி. ...ராஜீவ் மேனன் ...ளிப்பதிவாளராக ...இயக்குநராகிறார்.

...ீராமிடம் உதவி ...பணியாற்றிய பின் ...ந்த 'ஜென்டில் ...மேன்', 'இந்தியன்' ...படங்களுக்கு ...செய்தவர் தீவா.

## வெங்கடேஷ் அறிமுகமாகும் 'பாப்பா'

அண்மையில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'மாயி' படத்தைத் தயாரித்த ஆர்.பி. சௌத்ரியின் சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிக்கும் புதிய படங்களில் ஒன்று 'பாப்பா'.

சுமார் பதினைந்து கோடி ரூபா செலவில் தமிழ்-தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் தயாராகும் இப்படத்தில் கதாநாயகனாக தமிழில் அறிமுகமாகிறார் பிரபல தெலுங்கு நடிகர் வெங்கடேஷ்.

தெலுங்கில் முன்னணி நடிகர்களில் ஒருவராக இருக்கும் வெங்கடேஷ் நடித்த பல வெற்றிப் படங்கள் தமிழில் மொழிமாற்றப்பட்டு வெளியாகியுள்ளன. எனினும் வெங்கடேஷ் முதல் முறையாக நடிக்கும் நேரடித்தமிழ்ப் படம் 'பாப்பா'.

கதாநாயகிகளாக சௌந்தர்யா, அஞ்சலா சவேரி ஆகியோர் நடிக்கிறார்கள். ஏனைய நடிகநடிகையர் தேர்வுகள் நடைபெற்று வருகின்றன.

மணி சர்மா இசையமைக்கும் இப்படத்தை 'இதுதாண்டா போலீஸ்' உட்பட பல வெற்றிப் படங்களை இயக்கிய தெலுங்கு இயக்குநர் கோடி. ராமகிருஷ்ணா இயக்குகிறார். இதற்கு முன் கோடி ராமகிருஷ்ணா 'கேப்டன்' என்ற தமிழ்ப் படத்தை இயக்கியுள்ளார்.

கிராஃபிக்ஸ் காட்சிகள் மூலம் உருவாக்கப்படும் இப்படத்தில் வித்தியாச உருவ அமைப்புடன் 'அதிசய பாப்பா' ஒன்றும் நடிக்கிறது.

## சேரனின் 'ஆட்டோகிரா.:.ப்'

'வெற்றிக்கொடி கட்டு' வெற்றிப்படத்தின் பின், சேரன் இயக்கும் படம் 'ஆட்டோகிராஃப்'. இதில் பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கிறார்.



## எனக்குள்ளேயும்.....

அன்பே எப்போதாவது நீ
எதையோ பார்க்கும் போது,
தற்செயலாய் உன் கண்கள்
என்னைப் பார்க்கும் போது,
'ஷெல்களின் சிதறல்களாய்—
என் மனம்!'
***
எதற்காவது நீ
என்னைக் கடந்து செல்லும் போது
'செக் பொயிண்டை' அண்மிக்கும்
பிரயாணியின் இதயமாய்—
என் இதயம்!
***
உன்னைக் காதலிக்கிறேன்
என்று சொல்ல
தைரியமில்லாதவனாய்
உறங்கும் 'தீர்வுப்பொதி'யாய்—
என் மனம்!
***
எப்படியும் உன்னை
அடைவேன் என்ற
'சமாதானப் பேச்சு வார்த்தைக'ளாய்—
அவ்வப்போது அமைதியுறும்—
என் ஆத்மா!
***
உன்னைப் பற்றிய எனது
தேடலில் அவ்வப்போது
மூக்கை நுழைக்கும்
'மூன்றாந்தர மத்தியஸ்த'மாய்—
உனது பெற்றோர்!
***
அவ்வப்போது எனக்கு ஆறுதல்
சொல்ல 'நான்காம் தர
மத்தியஸ்த'மாய் எனது
நண்பர்கள்!
***
பார்த்தாயா.... மனிதனுக்கிடையில்
மட்டுமா போர்?
என் மனதிற்குள்ளேயும் தான்;
என் இதயம் உன்
நினைவெனும் ரவைகளால்
ரணமாகும் முன்னர்
வெள்ளைப் புறாவாய்
விரைந்தெழுந்து வா!

சி.சிவகுமாரன்-வட்டகொடை.

## என்னைத் துரத்திய அவள்...

"ஐய்யோ...
அம்மா ஏசப்போகிறார்!"
***
அந்தி சாய்ந்து
அரை நாழியாச்சு
அவசர அவரசமாய் நடந்தேன்,
***
என்
உள் மனதில்
ஏதோ ஒன்று கூறிற்று,
***
வேக நடையை
தளர்த்தாமலே நான்
திரும்பிப் பார்த்தேன்!
***
அவள்
என்னைத் துரத்துவது போல்
அவசரமாய் பின் தொடர்ந்தாள்,
***
என் வயிற்றுக்குள் உருண்டன
பயத்தின் பந்துகள்,
***
வேகமாய் நடந்தேன்
திரும்பிப் பார்த்தேன்
அவள் கண்ணடித்தாள்,
***
கண்றாவி...
அவசரமாய் வாசலில் ஏறி
பாதணி கழற்றி,
***
அறைக்குள் புகுந்து
ஆடைகளைக் களைந்து
கங்கரில் கொழுவினேன்,
***
அங்கேயும் அவள்
எட்டி எட்டிப் பார்த்தாள்
யன்னலின் ஊடே,
***
இழுத்து
அறைந்து சாத்தினேன்
அறை யன்னலை,
***
"அப்பாடா"
என அண்ணாந்து படுத்து
கொட்டாவி விட்டேன்!
***
அதிசயம்
அங்கேயும் அவள்
அழகான புன்னகையில்
கண்சிமிட்டி நின்றாள்,
என்
முகட்டுக் கூரையின்
ஓட்டையின் ஊடே
எட்டி எட்டி எனைப்பார்த்தவள்
அழகு மதியவள்
வெண்ணிலா—வானத்தின்
பொன் நிலா—கதிரோன்
பெண் நிலா.

ஈழவாணி—
வவு/வேப்பங்குளம்.

## காதல் மயக்கம்

பொழுது
விடியலுக்காய்
காத்திருந்து
பள்ளி
செல்லும்—டீன்னேஜ்
பாவை நான்!
***
பள்ளிச்
சிட்டுகளின்
பின்னே
சுற்றும்
வாலிப
வட்டங்களில்
ஒருவன் அவன்!
***
தொடர்ச்சியாய்
சுற்றியதால்
பாவி மகன்
பாதிப் படிப்பிலே
மனதைப்
பறித்துவிட்டான்!
***
அவனைச்
சந்திப்பதில்
பள்ளிக்கான
வரவு தவிர
ஓ.எல்.
பரீட்சையை
படிக்காமலே
எழுதி விட்டேன்!
***
பெறு பேறுகளில்
கொடிகள்
பறந்ததால்
என்—உயர்தர
பல்கலைக் கழக
கனவுகளும்
அதனூடே
கிழிந்து
பறந்தன.
***
உறவினர்களின்
ஏச்சுக்களோடு
வீட்டுக்குள்
முடக்கப்பட்டேன்.!
***
இறுதியாய்
உன்னை
நினைத்து
ஏங்குகையில்
தபால்
தாங்கி
வந்ததே—உன்
திருமண
அழைப்பிதழ்.!
***
அதிர்ந்தேன்...
அழுதேன்....!!
விடியல்
இல்லாத
யுகமாய்
தோன்றுகிறது
வாழ்க்கை!

எம்.ஏ.ஐமானியா—காத்தான்குடி 06.

## தேன் கிண்ணம்

## வரலாறு தேடுது

தமிழரின் தர்மத்தை
சரித்திரம் சொல்லுது!
தமிழ் இங்கு தறிகெட்டு
சடுதியாய் வீழுது!
***
சத்தியம் காத்திடும்
மானிடம் சாகுது....!
சாத்தியம் இல்லா
கொடுமைகள் நடக்குது!
***
யுத்தத்தின் வித்தகம்
நாளும் பெருகுது!
சத்தமே இன்றி
வாழ்வுகள் சிதையுது!
***
மக்களின் நலனில்
அக்கறை அருகுது
நித்திரை ஆகி
நீதியும் மாளுது!
***
நித்திலம் எங்கும்
ஆயுதம் ஆளுது
சத்திய வேதம்
சரிந்தெங்கோ போகுது!
***
இன்றை நிலைமாற
மனமது ஏங்குது
வசந்தத்தின் வரவை
வரலாறு தேடுது!

வி.எ.ஃப்.இலக்கியா—
யாழ்ப்பாணம்.

## மனித உரம்

எங்கள் நாட்டில் உள்ள நிலத்தில்
உரத்துக்குப் பஞ்சம் இல்லை!
மனித உயிர்களை அழித்து
ஊரெங்கும், தெருவெங்கும்
உரங்களாக இட்டுள்ளோம்!
மனித உடல்களை அடக்கம் செய்ய
நாங்கள் சுடுகாடு செல்வதில்லை...!
எங்கள் நாடே ஓர் சுடுகாடுதான்!

எஸ்.சுரேஷ்—
களுவாஞ்சிக்குடி.(அபுதாபி)

## அடையாளம்

## அடையாளம் அட்டை

நாய்களுக்கு அடையாளம்
கழுத்து பட்டியில்
மௌனமாய் மனதுக்குள்
சுதந்திரத்தைத் தேடும்
தமிழனுக்கு அடையாளம்
காற்சட்டைப் பையில்!

ச.காயத்ரீ—
ரேந்த பொல.

## அன்றும் இன்றும்



சன் டி.வி. மூலம் ஒளிபரப்பப்படும் 'சப்தஸ்வரங்கள்' நிகழ்ச்சி மூலம் உலகம் முழுவதும் நன்கு பரிச்சயமானவர் ஏ.வி.ரமணன். திரைப்படப் பாடகரான இவரது மனைவி உமாவும் பிரபல திரைப்படப்பாடகிதான்.

திரைப்படங்களில் தனித்தனியாக பாடியுள்ள ஏ.வி.ரமணன் உமாரமணன் இருவரும் இணைந்து ஒரு டூயட் கூடப்பாடியதில்லை. இந்த ஜோடியின் அன்றைய தோற்றம்.

'சப்தஸ்வரங்கள்' என்ற அருமையானதொரு நிகழ்ச்சியின் மூலமாக பல்லாயிரக்கணக்கானவர்களின் நெஞ்சங்களில் இடம் பிடித்துள்ள ஏ.வி.ரமணன் மனைவி உமாவோடு இருக்கும் இன்றைய தோற்றம்.



## நில்—கவனி—முன்னேறு



மனிதன் எல்லா நிலைகளிலும் வாய்ப்புக்களைத் தேடிக் கொண்டிருக்கிறான்.

எல்லாருக்குமே வாய்ப்புகளின் வாசல் திறந்து விடுகிறதா?

தட்டியவுடன் கதவுகள் திறக்கப்படுகின்றனவா?

தேடித்தேடி ஒய்ந்து போனவர்களிடம் கேட்டால், "வாய்ப்புக்களைத் தேடுவது, உருவாக்குவது எல்லாம் சும்மா.

நான் தேடாத இடமா? எவன் தர்றான் வேலை?" என்று கொட்டித் தீர்ப்பார்கள்.

ஏன் இப்படி சிலருக்கு மட்டும் வாய்ப்புகளின் வாசல்கள் திறக்காமலேயே இருக்கின்றன?

சிந்தித்துப் பார்த்தால் உண்மை தெரியும். அவர்களது முயற்சியில் ஏதோ குறை இருக்கும்.

சரியாக 'பயோடேட்டா'வை எழுதி வைத்திருக்க மாட்டார்கள்.

நிறுவன அதிகாரிகளை நேர்முகத் தேர்வில் கவர்ந்திருக்க மாட்டார்கள். அல்லது கேட்கிற தகுதிகளில் குறைபாடு இருந்திருக்கலாம்.

அவர்கள் எதிர்பார்க்கிற ஏதோவொன்றின் இல்லாமையில்தானே வேலை தருவதில்லை.

இன்றைய காலகட்டத்தில் ஓடுகிற குதிரைகளே தேவைப்படுகின்றன.

எழுந்திருக்கவே புல்டோசர் வைக்க வேண்டிருந்தால் என்ன செய்யமுடியும்?

'வாய்ப்புக்களை உருவாக்குங்கள்' என எல்லோரும் சொல்கிறீர்களே? வாய்ப்புக்களை எப்படி உருவாக்குவது? என்று கேள்வி உங்களுக்கு எழும்.

உணர்ந்ததை, அனுபவித்ததை பெற்றதைத்தான் சொல்கிறார்கள். வீணாக சொல்லவில்லை. நான் இவ்வாறு வெற்றி பெற்றேன். நீங்கள் பெற முடியாதா? என்று கேட்கிறார்கள்

அதனைப் பயன்படுத்துவதும்
பயன்படுத்தாமல் போவதும்
உங்கள் விருப்பம்.

இசை.... இசை.... எனத் தேடி அலைந்த இளையராஜாவுக்கு.... பஞ்சு அருணாசலம் வாய்ப்புக் கொடுத்தார்.

'அன்னக்கிளி' மூலம் அகிலத்தையும் இசைகொண்டு மயக்கினார் ராஜா.

கிராமத்தில் பிறந்தவர்களெல்லாம் இசையில் சாதிக்க முடியுமா? என்றிருந்த எண்ணத்தை மாற்றினார்.

ரஜினிகாந்திக்கு ஒரு பாலச்சந்தர். இயக்குநர் ஷங்கருக்கு ஒரு கே.டி.குஞ்சுமோன் இது மாதிரி திரைப்பட உலகத்தில் வாய்ப்புகளின் விசுவரூபங்களை அதிகமாகக் காணலாம்.

சாதாரண படங்களில் அறிமுகப் படுத்தப்பட்ட- வாய்ப்புக் கொடுக்கப்பட்ட நடிகைகள் பின் நாளில் மிகப் பெரும் கதாநாயகிகளாக உருவாகவில்லையா!

நமக்கு வெற்றி பெற்ற மனிதர்களுக்கு கிடைத்தது மாதிரி வாய்ப்புகள் கிடைக்கலாம். வாய்ப்புகளை வசீகரித்துக் கொள்கிற திறமை நம்மிடம் இருந்தால் முன்னேற முடியும்.

வாய்ப்புகளின் வாசல் திறக்குமா?
நம்புங்கள் நிச்சயம் திறக்கும்.

## பேனா நண்பர்கள்



பெயர்: எம். ரஷீன்
வயது: --
முகவரி: 448,
மௌலானா வீதி,
ஏறாவூர்-03, மட்டக்களப்பு.
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை.



பெயர்: எஸ். சுவர்ணா
வயது: 17
முகவரி: சிவகுமாரன்
கோட்டம், சாந்தசோலை,
வவுனியா.
பொழுது போக்கு:
பத்திரிகை.

## இந்தவாரம் உங்கள் பலன்

12.11.2000 முதல் 18.11.2000வரை

ஜோதிடர் 'கானா'

**மேடம் :**
வெளியிடப்பயணம் வெற்றி அடையும். நற்செய்திகள் வரும். சுபகரும வாய்ப்புக்கள் கிட்டும். அத்துடன் சிக்கலான மாற்றநிலை ஏற்படும். தொழில் வசதிகள் பெருகும். பரணிக்காரருக்கு சுபகரும வாய்ப்புக்கள் அமையும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 12, 15.

**இடபம் :**
தொழிலில் போட்டி ஏற்படும். சகோதரர்களால் பிரச்சனைகள் வரலாம். நோய் துன்ப நிலைமாறி மாறி வரக்கூடிய நிலை காணப்படுகிறது. முக்கிய கொடுக்கல் வாங்கல் தள்ளிப் போகும். ரோகிணி நட்சத்திரர் கவனம் எடுக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 13, 17.

**மிதுனம்:**
கல்வியில் வெற்றிகிடைக்கும். தூர தேச நட்பு கிடைக்கும். மாமன் வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படும். இயந்திர, தொழிலில் நுட்பத் தொழில் துறைகளில் உள்ளோருக்கு உயர்வுகள் ஏற்படும். புநர்பூசகாரர் இலாபம் அடை வார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 15, 16.

**கடகம் :**
எதிர்பார்த்த விடயங்கள் நல்ல பலனைக் கொடுக்கும். வெற்றியுடன் தொடரும். புதிய கல்வி வசதிகள் ஏற்படும். பிரயாண முயற்சிகளில் வெற்றி வாய்ப்புக்கள் அதிகமாகும். ஆயிலிய பெண்களுக்கு திருமணத்தடைகள் விலகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 12, 15.

**சிம்மம் :**
பொதுவான நிலை மாறி, சிக்கல்கள் தெளிவு படும். மனதில் சந்தோஷம் பொங்கும். உறவினர் வருகையுண்டு. பணவரவுடன் செலவும் அதிகரிக்கும் தொழிலில் பெரிய வெற்றிகள் ஏற்படக் கூடும். உத்திர நட்சத்திரர் வெற்றிவாகை சூடுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 14, 15.

**கன்னி :**
எதிர்பார்த்த தொழில் கைகூடி வரும். திருமண வசதி வாய்ப்புக்கள் கைகூடும் மனதில் பெரிய மாற்றங்கள். தூரதேச உறவினர்கள் வருகையுடன் ஆலய தரிசனமும் பெரியோர்களின் சந்திப்பும் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 14, 16.

**துலாம் :**
முழுமையான மாறுதல் ஏற்படும். தொழில் கல்வி வளர்ச்சி பெரிய வெற்றியைக் கொடுக்கும். நோய் துன்ப நிவர்த்தியுடன் சகோதர உதவிகள் கிட்டும். சித்திரை நட்சத்திரர் நன்மைகள் அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 12, 15.

**விருட்சிகம் :**
செலவுகள் அதிகரிக்கும். பெரியோர்களைச் சந்திக்கும் வாய்ப்புடன் அதிகாரசம்பத்தும் கிட்டும். பிள்ளைகளின் செயலால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். வாகனவிடயங்களில் மிகவும் அவதானமாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : மரூண்; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 13, 14.

**தனுசு :**
பெரிய முயற்சிகள் தொடங்கும். உயர்கல்வி பயில்வோர் முன்னேற்றத்தைப் பெறுவார்கள். காரிய சித்தியுண்டு. சொத்துக்கள் என்பன சேரும். புதிய வாகனச் சேர்க்கை, தொழிலில் வசதிகள் பெருக்கம் காணப்படுகிறது.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 14, 15.

**மகரம் :**
நோய் துன்பம் தொடர்பான செலவுகள் ஏற்படும். சில விடயங்கள் தள்ளிப்போவதுடன், மனதில் மாறுபாடான நிலை ஏற்படும். கடன் பிரச்சனைகள் குறைவடையும். உறவினர்களின் உதவி கிடைக்கும். பயண அலைச்சல் கல்வி தொழில் அமைப்பில் மாற்றங்கள் தொடரும்.
அதிஷ்ட நாட்கள் : புதன் சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 16, 17.

**கும்பம் :**
மனதில் மாறுபட்ட செயற்பாடுகள் தோன்றும். பணவரவுகள் குறையும். குடும்பத்தில் கஷ்டமான நிலை, கணவரால் பெரிய பிரச்சனைகள் ஏற்படும். சதயக்காரர் கவனமாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 12, 16.

**மீனம் :**
கிரகமாற்ற வக்கிரக பலன் புதியகற்பனைகள் பெரிய வசதிகள் என்பன ஏற்படுத்தும். சகோதர வழியில் பணவசதிகள் கிட்டும். திருமண சுபகரும வாய்ப்புக்கள் ஏற்படும். பெண்களுக்கு வெற்றியான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 15, 16.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## உண்மை அழகு எங்கே இருக்கிறது



'அகத்தின் அழகு முகத்தில் தெரியு' மென்பார்கள். இந்த முதுமொழியில் பெரும் உண்மை பொதிந்திருக்கிறது.

பார்ப்போர் அனைவரையும் சுண்டி இழுக்கும் அழகான பெண் என்று கருதப்படும் எந்தப் பெண்ணும், உண்மையில் எட்டத்திலிருந்து பார்க்கும் போதுதான் அவள் அழகாகத் தோற்றமளிப்பாள். ஆனால் கிட்ட நெருங்கிப் பார்க்கும் போது, அப்பெண்ணினுடைய அழகு உண்மையான அழகல்ல; போலித்தனமான வெறும் பகட்டு என்பது புலப்படும்.

கடைகளில் பெறப்படும் அழகுசாதனப் பொருட்களை விலைகொடுத்து வாங்கி, அவற்றை கண்டமாதிரி முகத்தில் அப்பிக் கொண்டு, அழகு காட்டும் பெண்களைப் பார்க்கிறோம். அளவுக்குமீறிய களிம்புகளை முகத்தில் பூசி, அதிகப் பவுடரைத் தேய்த்து, சருமத்திற்குப் பொருந்தாத உதட்டுச் சாயத்தை அள்ளி அப்பி, கோலங் காட்டுபவர்களையும் பார்க்கிறோம். பார்ப்போரைக் கவர்ந்திழுத்து 'நாங்களே அழகிகள்' என்று நம்பவைக்கும் இத்தகைய நங்கையர் உண்மையில் அழகுடையவர்கள் ஆக மாட்டார்கள்.

முக்கியமாக மனநிறைவு உடையவர்கள் முகத்தில் அமைதியும் பொலிவும் இயல்பாகவே துலங்கும். சாந்தம் குடிகொண்டிருக்கும். பெண்களுடைய முகம் எப்போதும் அழகாக இருக்க வேண்டுமானால் முக்கியமாக அவர்களுடைய மனதில் இருக்கும் அழுக்குகளை முதலில் துடைத்தெறிய வேண்டும். கவலை என்ற கொடிய அரக்கனுக்கு இடமளிக்கலாகாது. தன்னைச் சுற்றி உள்ளவர்கள் எவருடனும் பகைத்துக் கொள்ளாமல், புன்னகை பூத்தவராகப் பழகவேண்டும். எவர் எக்குற்றம் செய்தாலும் அவற்றைப் பெரிது படுத்தி வீட்டில் வீண் ரகளையை ஏற்படுத்தக் கூடாது.

திருமணமான பெண்கள் அதிகாலையில் எழுந்து, வீட்டைத் துப்புரவாக ஒழுங்குபடுத்தி, குளித்து முழுகி விட்டு சில நிமிடங்களாவது பிரார்த்தனையிலீடுபட்டு விட்டு, வேலைக்குச் செல்லும் கணவனுக்கும், பாடசாலை செல்லும் குழந்தைகளுக்குமான உணவு தயாரித்தல் போன்ற இன்னோரன்ன காரியங்களில் ஈடுபட வேண்டும்.

முதல் நாளன்றோ அதற்கு முன்னரோ நடைபெற்ற வேண்டத்தகாத சம்பவங்களை மீண்டும் மீண்டும் நினைத்து வருந்திக் கொள்ளலாகாது. கூடுமானவரை நல்லவற்றையே நினைத்துக்கொள்ள வேண்டும்.

தீமையானவற்றைச் சிந்திப்பதனாலும் ஏக்கப்பெருமூச்சு விடுவதனாலும் முகத்தில் கவலை ரேகைகள் படரும். சுருக்கங்களும் தோன்றும். ஆகவே கவலைக்குச் சிறிதளவும் இடம்தரலாகாது.

மனதைத் தூய்மையாக வைத்திருப்பவரின் முகத்தில் எப்போதும் சாந்தம் தவழும். 'மேக்கப்பே' இல்லாமல் இயற்கை அழகு கொப்பளிக்கும்.

## தாயின் கவலையைப் போக்க வழி?

பெண்களைப் பெற்ற தாய்மார் பாக்கியசாலிகள் பிள்ளை என்று பொதுவாகவே கூறு வார்கள். உண்மையில் ஒரு பெண் குழந்தையைப் பெற்று அவளுக்கு உரிய வயது வந்தவுடன், அவளுக்கான ஓர் ஆண் துணையைத் தேடி, அவளை அவனிடம் ஒப்படைக்கும் வரை, ஒரு தாய் எத்தகைய மனவேதனைகளை அனுபவிக்க நேரிடுகிறது?

பெண் குழந்தையொன்று பிறந்து விட்டமையினால் பூரிப்படையும் அந்தத் தாய், அக்குழந்தைக்குப் பத்து வயதானதும், அவளையுமறியாமல் பலதரப்பட்ட கவலைகளை மனதில் தேக்க ஆரம்பித்து விடுகிறாள்.

பெண்ணுக்குப் பத்து வயதானதும், அவளுடைய அங்கங்களில் ஏற்படும் மாற்றங்களும் அவளுடைய முகத்தில் தென்படும் வசீகரமும் மனமகிழ்ச்சியைக் கொடுத்தாலும், வேதனையையும் அதிகரிக்கவே செய்கிறது. கூடவே மகளைப்பற்றிய சந்தேகங்களும் தாயினுடைய உள்ளத்தில் வளரவே தொடங்குகிறது. தனது மகள் எங்கு சென்றாலும் அந்தத் தாயின் கண்களும் கருத்தும் மகளைச் சுற்றியே வலம் வந்து கொண்டிருக்கும்.

காலையில் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படும் தனது மகள், வீடு வந்து சேரும்வரை அந்தத்தாயின் மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டேயிருப்பாள். வேண்டாத கவலைகளை வரவழைத்துக் கொண்டு கற்பனைகளில் மூழ்கிதன்னைத் தானே வேதனைக்கடலில் அந்தத் தாய் அமிழ்த்திக் கொள்ளுகிறாள்.

தனது மகள் பள்ளிப்படிப்பிலோ அல்லது விளையாட்டுகளிலோ, மேம்பாடடைகிறாள் என்று மகிழ்ச்சியேற்பட்டாலும், உள்ளூர வேதனைப்புண் ஒன்று அவளை வாட்டிய வண்ணமேயிருக்கும். இது பெண் குழந்தையைப் பெற்ற எந்தத் தாய்க்கும் இயல்பாகவே தோன்றும் பிரச்சனைகள் தான்.

தனது தாயாருக்கு ஏற்படும் கவலைகளைப்பற்றி மகளுக்கு எத்தகைய உணர்வும் இருக்காது. தாயார் தன் மீது சந்தேகப் படுகிறாள் என்று எண்ணம் தோன்றினால், அப்பெண்பிள்ளைக்கு மனவுணர்வுகள் விகாரமடையும். இதனால் தாய்கும் மகளுக்குமிடையே விரிசல்கள் தோன்றி, வேண்டாத சிக்கல்கள் தலைதூக்கும். இதனால் குடும்பத்தில் சிக்கல்கள் தோன்றி அமைதி குலைந்து போக நேரிடும்.

இத்தகைய சூழ்நிலை தோன்றாமலிருப்பதற்கு தாய் திறந்த மனதுடன் தன் மகளின் போக்குகளை அவதானித்து, அறிவுரைகளைப் பகர்ந்து, இருவருக்குமிடையிலான உறவினை விரிசலடையச் செய்யாமல், அவதானமாக நடக்க வேண்டும். இல்லையேல் குடும்பத்தில் விபரீதமான நிலைப்பாடே தோன்றக் கூடும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** 10

பெயர்:.....................

முகவரி:.....................

.....................

தொழில்:.....................

கையொப்பம்:.....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 18-11-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# வழங்குவது புவனா

## 62

# மோனிக்கா என் மோனிக்கா

கிளின்ரனுடன் தான் கொண்டிருந்த நெருக்கமான உறவு பற்றி லிண்டா ட்ரிப் நீதிமன்றத்தில் கூறிவிடுவாள் என்ற பயம் மோனிக்காவுக்கு ஏற்படத் தொடங்கிவிட்டது. எப்படியாவது லிண்டாவின் வாயை அடைக்க வேண்டும் என்று கருதினாள். லிண்டா நீதிமன்றத்துக்கு அழைக்கப்படும் தினத்தன்று தனது காலில் ஏற்பட்டிருக்கும் ரணத்துக்கு சத்திரசிகிச்சை செய்வதற்கு சிக்காகோ நகருக்குச் செல்வதானால், சிகிச்சைக்கான செலவை மோனிக்காவின் தாய் மார்சியா ஏற்றுக் கொள்ளத் தயாரானாள்.

பெண்டகனில் தான் பார்த்து வந்த வேலையை ராஜினாமாச் செய்துவிட்டமையினால் டிசம்பர் 23ம் திகதியன்று மோனிக்காவுக்கு பிரியாவிடை இடம்பெற்றது. லிண்டா ட்ரிப்பும் இதில் கலந்து கொண்டாள். மோனிக்காவை அணைத்தபடி ஒரு புகைப் படம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று லிண்டா வற்புறுத்தி படம் பிடித்துக் கொண்டாள். (இப்படம் பின்னர் மோனிக்கா-கிளின்ரன் விசாரணைகள் நடைபெறும்போது பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது.) மோனிக்காவுடன் தனக்கிருந்த நெருக்கமான உறவினை நிரூபிக்கவே லிண்டா இப்படத்தைப் பிடிக்க ஏற்பாடு செய்தாள் என்பது மோனிக்காவுக்குப் பின்னர் தான் தெரிந்தது. பிரியாவிடை தினத்துக்குப்பின்னர், மோனிக்காவைச் சந்திக்கவோ, தொலைபேசியில் தொடர்பு கொள்ளவோ, லிண்டா விரும்பாமல் ஒதுங்கிக் கொண்டாள்.

லிண்டா ட்ரிப்பிடம் உள்ள ஒலிப்பதிவு நாடாக்கள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு சட்ட நிபுணர்களின் கையில் கொடுக்கப்பட்டு விட்டன. கிளின்ரனுக்கும் மோனிக்காவுக்குமிடையில் இடம் பெற்ற தொலைபேசி உரையாடல்களில் பெரும்பாலும் பாலியல் தொடர்பான விவரங்களை பச்சை பச்சையாக இருவரும் பேசியிருந்தனர். இது தவிர தனக்கும் கிளின்ரனுக்குமிடையில் இடம்பெற்றிருந்த பாலியல் ரீதியிலான தொடர்புகளை தொலைபேசிமூலமாகவும் நேரடியாகவும் மோனிக்கா லிண்டாவிடம் கூறியிருந்தாள். இவ்வாறு தனது சிநேகிதியான லிண்டாவிடம் விவரமாக வர்ணித்துக் கூறுவதில் மோனிக்கா ஒருவகை இன்பமடைந்தாள்.

இந்தச் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திய லிண்டா அவை ஒவ்வொன்றையும் தனது ஒலிப்பதிவு நாடாக்களில் திட்டமிட்டுப் பதிந்து கொண்டாள். இவ்வாறு பதிவு செய்யப்பட்ட இருவரினதும் உரையாடல்களும் மொத்தம் 20 மணிநேரம் கொண்டதாக இருந்தது.

லிண்டா தன்னை வஞ்சித்து விட்டாள் என்ற உண்மை மோனிக்காவுக்கு நன்றாகத் தெரிந்த பின்னரும், அவளிடமிருந்து ஒதுங்கி விட மோனிக்காவால் முடியவில்லை. தேன் குடத்துள் வீழ்ந்த ஈயைப்போல், மோனிக்கா பரிதவித்தாள்.

பவுலா ஜோன்ஸ் விசாரணைகளின் போது லிண்டா ட்ரிப் விசாரணைக்கு வராமல் இருந்தால் எப்படியாவது தப்பித்துக் கொள்ள வழிகிடைக்கும் என்று மோனிக்கா கருதினாள். அவளை விசாரணைக்கு முகம் கொடுக்காமல் தடுப்பதற்கு என்னென்ன செய்யலாம் என்பதை அறிவதிலேயே மோனிக்காவின் கவனம் முழுவதும் ஈடுபட்டிருந்தது. தன்னை விசாரிக்கும் போது, கிளின்ரனுடனான தொடர்பு பற்றி பவுலாவின் வழக்கறிஞர்கள் வினா எழுப்பினால், தான் அத்தகைய உறவு எதுவும்அவருடன் வைத்துக் கொள்ளவில்லை என்று கூறப்போவதாக லிண்டாவிடம் மோனிக்கா ஒரு தடவை கூறினாள். அப்போது லிண்டா, "நீதி விசாரணையின் போது நான் ஒரு போதும் பொய் சொல்லப் போவதில்லை. அதேவேளை நீ உண்மையை மறைத்து பொய் கூறினால், இருவருடைய சாட்சியங்களிலும் முரண்பாடு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு விடும். எனவே இருவருக்கும் தண்டனை கிடைக்கக் கூடிய சூழ்நிலைதான் உருவாகும்!" என்று லிண்டா கூறினாள். இதிலிருந்து மோனிக்காவுக்கு லிண்டாவின் குரூரமான மனோநிலை தெளிவாகத் தெரிந்து விட்டது. "எனது சிநேகிதியான உனக்கு எத்தகைய துன்பமும் வர நான் காரணமாக இருக்கமாட்டேன்!" என்று கூறியிருந்த லிண்டாவின் அதேவாயால் இவ்வாறான வார்த்தைகள் வெளிவந்ததைக் கேட்டு மோனிக்கா துணுக்குற்றாள். அப்போதுதான் தன்னை அறியாமலே உண்மைகளை உளறிக் கொட்டிவிட்டதாக மோனிக்கா உணர்ந்து தவித்தாள். இச்சந்தர்ப்பத்துக்குப் பிறகு மோனிக்காவைச் சந்திப்பதை லிண்டா தவிர்த்து வந்தாள்.

மோனிக்காவின் பிரியாவிடை நாளான டிசம்பர் 23ம் திகதிக்கு முதல்நாளன்றிரவு முழுவதும் பல தடவைகள் லிண்டாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மோனிக்கா அழுது, கெஞ்சி, பவுலா ஜோன்ஸ் விசாரணையின் போது தன்னைக் காட்டிக் கொடுத்து விட வேண்டாம், என்று வற்புறுத்திக் கேட்டாள். ஆனால் அதற்குச் சாதகமான பதிலை லிண்டா கொடுக்கவில்லை. இரவு முழுவதும் மோனிக்கா தூங்காமல் அழுதுகொண்டே இருந்தாள். பிரியாவிடை விழா நடந்து கொண்டிருந்த போதும் அவளுடைய அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பெண்டகனில் மிகக்குறுகிய காலம் மட்டுமே மோனிக்கா பணிபுரிந்தாள். இருப்பினும் பிரியாவிடையில் உடன் பணிபுரிந்தவர்கள், வேறு துறைகளில் பணிபுரிந்த போதும் இவளுடன் பழகியவர்கள்

ஏற்கனவே டிசம்பர் 17ம் திகதியன்று அதிகாலையில் தொலைபேசியில் அழைத்த கிளின்ரன், அவளுக்கு கிறிஸ்மஸ் பரிசில்கள் வாங்கி வைத்திருப்பதாகவும் அவற்றை அவளிடம் தருவதற்கு, அவளை வெள்ளை மாளிகைக்கு அழைக்கப்போவதாகவும் கூறியிருந்தார். ஆனால் அதுகூட நடக்கவில்லை. இதனால் அவளுடைய வேதனை பன்மடங்காகியது.

கிறிஸ்மஸ் கழிந்தபின்னர் பெட்டி கியூரிக்கு மோனிக்கா தொலைபேசி அழைப்பு எடுத்தாள். கிளின்ரன் தனக்கு வாங்கி வைத்திருக்கும் கிறிஸ்மஸ் பரிசில்களைத் தருவதற்கு அழைக்கப் போவதாக கூறியிருந்தார், என்பதை நினைவூட்டினாள். ஜனாதிபதியுடன் தான் தொடர்பு கொண்டு விட்டு அறிவிப்பதாக கியூரி சொன்னாள்.

## ஒலிப்பதிவு நாடாக்கள்



அனைவருமே நின்றிருந்தனர். பல பரிசில்களும் அவளுக்கு வழங்கப்பட்டன. தனது உள்ளத்து உணர்வுகளை அப்படியே வெளிக்காட்டாமல் இருப்பதற்காக பொய்யாக சிரிப்பையும் புன்னகையையும் வரவழைத்து தனக்குக் கிடைத்த பரிசில்களுக்கு நன்றி தெரிவித்த வண்ணம் இருந்தாள்.

லிண்டாவிடம் இறுதியாக சில வார்த்தைகளைப் பேசுவதற்கு மோனிக்கா முயற்சித்தாள். ஆனால் வேண்டுமென்றே லிண்டா மோனிக்காவை விட்டு விலகிச் சென்றாள். இருவரும் புகைப்படம் பிடித்ததன் பின் லிண்டா அங்கிருந்து வெளியேறிவிட்டாள். அன்றிரவும் அவளுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள மோனிக்கா பல தடவைகள் முயற்சித்தாள். ஆனால் லிண்டாவோ தொலைபேசியைக் கையில் எடுத்துவிட்டு எதுவும் பேசாமல் துண்டித்த வண்ணம் இருந்தாள்.

கிறிஸ்மஸ் தினத்தன்று மோனிக்கா தனது இல்லத்தில் தனிமையிலேயே, இருந்து பரிதவித்தாள். தன்னுடைய நிலையை எண்ணி பெரிதும் வருந்தினாள். தனக்கு ஒரு வருமானம் தரக்கூடிய தொழில் கிடையாது, தன்னுடைய உள்ள உணர்ச்சிகளை வெளிப்படுத்தி ஆறுதலடைய ஒரு சிநேகிதரோ சிநேகிதியோ இல்லை. தன் அருகிலிருந்து ஆறுதலளிக்க தன் தாயோ, சகோதரனோ இல்லை. தனக்கு பைத்தியமே பிடித்து விடுமோ என்று கூடக்கருதினாள். தன்னை ஒத்தவர்களெல்லாம் கிறிஸ்மஸ் களியாட்டங்களில் ஈடுபட்டு மகிழ்ச்சியாக இருக்கும் போது தான் மட்டும் ஓர் அறைக்குள் முடங்கிக் கிடந்து வேதனையில் மூழ்கவேண்டி இருக்கிறதே என்று விசனப்பட்டாள். சிலசந்தர்ப்பங்களில், தான் ஏற்கனவே பார்த்து மகிழ்ந்த வீடியோப்படங்களை மீண்டும் போட்டுப்பார்த்தாள். அவை அவளுடைய நிலமையை மேலும் மோசமடையச் செய்தன.

அன்று மாலையில் மோனிக்காவுடன் தொடர்பு கொண்ட பெட்டிகியூரி, டிசம்பர் 28ம் திகதியன்று காலை 8.30 மணிக்கு வெள்ளை மாளிகைக்கு மோனிக்காவை வரும்படி கிளின்ரன் கேட்டிருந்ததாகக் கியூரி சொன்னாள்.

பவுலா ஜோன்ஸ்சின் வழக்கில் தானும் ஒரு சாட்சியாகச் சேர்க்கப்பட்டமைக்கு உரிய அழைப்பாணை கிடைத்த பின்னர், கிளின்ரனுடைய முகத்தில் எவ்வாறு விழிப்பது என்ற கவலை அவளை வாட்டியது. தொடர்ந்து பல நாட்கள், கிளின்ரனிடம் எவ்வாறு பேச வேண்டும், எவ்வாறு பழக வேண்டும் என்பதைத் தீர்மானிக்க முடியாமல் தவித்தாள்.

கிளின்ரனை வெள்ளை மாளிகைக்குச் சென்று பார்ப்பதற்குரிய தினத்திற்கு முதல் நாளன்று-டிசம்பர் 27ம் திகதி இரவு முழுவதும் மோனிக்கா தூங்கவில்லை. அவளுடைய மனப்போராட்டம் மிகக் கடுமையாக இருந்தது.

விசாரணைகளின் போது, கிளின்ரனுக்கும் தனக்குமிடையில் இடம் பெற்ற உரையாடல்கள் பதியப்பட்டுள்ள தகவலும், அவற்றை லிண்டா ட்ரிப்பே பதிவு செய்திருக்கிறாள், என்பதும் கிளின்ரனுக்குத் தெரியவருமானால், அவருடைய நட்பை இழக்க வேண்டி வரும். அத்தகைய சூழ்நிலையை அவளால் ஏற்றுக்கொள்ள முடியாது.

எது எவ்வாறானாலும் தங்களுக்கிடையிலுள்ள அந்தரங்க உறவு பற்றி லிண்டாவிடம் தான் கூறியிருப்பதைப் பற்றி கிளின்ரனிடம் தனது வாயால் எதுவுமே கூறுவதில்லை, என்ற தீர்மானம் தான் இறுதியில் வெற்றி பெற்றது.

இத்தகைய தீர்மானத்துடன் அதிகாலையிலேயே தன்னை அலங்கரித்துக் கொண்டு வெள்ளை மாளிகைக்குப் புறப்பட்டாள். ஏற்கனவே செய்து கொண்டிருந்த ஏற்பாட்டின் படி மோனிக்கா வெள்ளை மாளிகையை அடைந்ததும், ஓவல் அலுவலகத்திற்குச் செல்லுமாறு அங்கு பாதுகாப்பிருந்த காவலர் சைகை காட்டினார்.

மோனிக்கா ஓவல் அலுவலகத்தின் முன் கதவுகளின் ஊடேயே உள்ளனுமதிக்கப்பட்டாள். அங்கு கிளின்ரனுடைய 'படி' என்ற கறுப்பு நாயுடன் பெட்டிகியூரி விளையாடிக் கொண்டிருந்தாள். மோனிக்காவைக் கண்டதும் கியூரியிடமிருந்து விடுபட்ட 'படி' ஓடிச் சென்று மோனிக்காவுடன் ஒட்டிக் கொண்டது.

(வருவாள்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**வத்தளை வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | தி.நாகராணி, 24/3, வின்சன் ஜோசப் மாவத்தை, வத்தளை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பாப்பா முரசு சிறுகதை

# ஓநாயிடம் ஒரு மருந்து

ஓநாய்க்கு எப்போதுமே நரியைக் கண்டால் பிடிக்காது. ஏதாவது வேலை செய்யச் சொல்லி ஏவிக்கொண்டே இருக்கும். நரி தந்திரமுள்ளதே தவிர, ஓநாயிடம் பயம் அதிகம். அதைத் தெரிந்து கொண்ட ஓநாய் நரியிடம், "எனக்கு ஆடு கொண்டு வா, மாடு கொண்டு வா"; என்று அதிகாரம் செய்து கொண்டே இருக்கும்.

ஆட்டையும் மாட்டையும் கொண்டு வர நரி அலையும். ஆட்டை அடித்து வாயால் கவ்வியோ, இழுத்துக்கொண்டே வந்து விடலாம். ஆனால் மாட்டை அப்படிச் செய்ய முடியுமா நரியினால்? ஓநாயின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது.

இப்போது ஓநாய் சிங்கத்தின் உதவியாளராகிவிட்டது. அதன் அதிகாரம் அதிகமாகி விடவே, ஆட்டமும் அதிகமானது. நரியைப் பலவிதத்திலும் பாடர்ப்படுத்த ஆரம்பித்தது ஓநாய்.

அந்த ஓநாயிடமிருந்து எப்படித் தப்புவது என்று யோசித்த நரி, அது நடவாத காரியம் என்பதை உணர்ந்தது. ஓநாய் பலமானது. அத்துடன் சிங்கத்தின் உதவியாளராகவும் இருக்கிறது. அதை ஏதாவது தந்திரம் செய்து கொன்றால்தான் ஓநாயின் தொந்தரவு நிரந்தரமாக இல்லாமல் போகும். அதற்கான தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது நரி.

திடீரென சிங்கம் நோய்வாய்ப் பட்டது. கரடி வைத்தியர் வந்து அதன் உடல் நிலையைச் சோதித்து மருந்துகள் கொடுத்தும் சிங்கத்தின் நோய் போகவில்லை. அது சில நாட்களில் இறந்துவிடுமென்று காட்டிலுள்ள எல்லா மிருகங்களுக்கும் பிராணிகளுக்கும் தெரிந்துவிட்டது. அவை வந்து நோயுற்றிருக்கும் சிங்கத்தைப் பார்த்து விட்டுச் சென்றன.

சிங்கத்தின் உதவியாளரான ஓநாய், நேயுற்ற சிங்கத்தைப் பார்க்க எந்தெந்த மிருகங்கள், பிராணிகள் வந்தன என்று பட்டியல் தயாரித்தது. அப்போதுதான் அதுவரை சிங்கத்தைப் பார்க்க நரி மட்டும் வரவில்லை என்று ஓநாய்க்குத் தெரிந்தது.

"ஓநாயாரே! என்னைப் பார்க்க யார் யாரெல்லாம் வந்தார்கள்?" என்று கேட்டது சிங்கம்.

தான் தயாரித்து வைத்திருந்த பட்டியலைப் படித்துக் காட்டிற்று ஓநாய்.

ஒவ்வொரு மிருகங்களின் பெயரையும் மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வந்த சிங்கம், பட்டியலை ஓநாய் படித்து முடித்ததும், "நரி வரவில்லை போலிருக்கிறதே?" என்றது.

"ஆம் அரசே... நோயுற்ற தங்களைக் காண நரி மட்டும் வரவில்லை.

"அதற்கு எவ்வளவு திமிர் இருந்தால் அது மட்டும் வராதிருக்கும்?" என்றது ஓநாய்.

சிங்கத்திற்குக் கோபம் வந்துவிட்டது. நோயுற்ற தன்னை யானை, புலி, கரடி, சிறுத்தை போன்ற பெரிய மிருகங்கள் எல்லாம் பார்த்துவிட்டுப் போக அற்ப ஜீவனான நரி வந்து பார்க்கவில்லை என்றால் அது மமதை பிடித்ததாகத்தான் இருக்க வேண்டும். 'அதைச் சும்மா விடக்கூடாது' என்றெண்ணிய சிங்கம், நரியை உடனே இழுத்துவரச் சொல்லிக் காட்டுச் சேவலிடம் கட்டளையிட்டது.

காட்டுச் சேவல் தன் சகாக்களுடன் காடு முழுவதும் தேடி அலைந்தது, ஒரு நதிக்கரையில் நின்ற நரியைப் பிடித்து வ்ந்து சிங்கத்திடம் ஒப்படைத்தது.

சிங்கம் நரியைப் பார்த்துக் கர்ஜித்தது.

"ஏய் அற்ப நரியே! நோயுற்ற என்னைக் காட்டிலுள்ள எல்லா மிருகங்களும் பார்த்து விட்டுச் செல்ல நீ மட்டும் வராதது ஏன்?... அலட்சியமா...?", என்று கேட்டது.



"அலட்சியமில்லை அரசே!... உங்கள் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆசையும் அன்பும் தான்!" என்றது நரி.

"என்ன சொல்கிறாய் நீ?" என்று கேட்டது சிங்கம்.


"அரசே....! உங்களுக்குக் கரடி வைத்தியர் செய்யாத வைத்தியமும் இல்லை. கொடுக்காத மருந்துமில்லை ஆனாலும் உங்களுக்கு வந்த நோய் தீரவில்லை. இது எனக்குத் தீராத மனவருத்தத்தைக் கொடுத்தது. உங்களை எப்படியாவது காப்பாற்றி விட வேண்டுமென்று அயல்காடு சென்று பல மருத்துவர்களைக் கலந்தாலோசித்தேன். அவர்கள் உங்கள் நோய்தீர ஒரு அருமையான மருந்தைச் சொன்னார்கள்," என்றது நரி.

"என்ன மருந்து அது?" என்று சிங்கம் ஆவலாய்க் கேட்டது.

"ஓநாயின் ஈரலை நீங்கள் சாப்பிட்டால் போதுமாம். உங்கள் நோய் குணமாகிவிடுமாம்." என்றது நரி.

அவ்வளவுதான் அருகிலிருந்த ஓநாயின் மீது பாய்ந்து அதை அடித்துக் கொன்று அதன் ஈரலைச் சாப்பிட்டுவிட்டது சிங்கம்.

நரி தன் எதிரி அழிந்ததைக் கண்டு சந்தோசத்துடன் காட்டிற்குள் ஓடிப்போயிற்று.






மூன்று பட்டங்கள் வானில் பறக்கின்றன. இதில் ரகு பிடித்திருக்கும் பட்டம் எதுவென்று கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்?.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **18.11.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **368**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## சில தகவல்கள்

☆★உலகில் மோப்ப சக்தி கொண்ட உயிரினம்-சக்கரவர்த்தி விட்டில் பூச்சு. அது தனது ஜோடிகள் 5 கி.மி தூரத்துக்கப்பால் இருந்தாலும் மோப்ப சக்தியால் கண்டு பிடிக்குமாம்.

☆★தும்பிகள் ஆயுள் முழுவதும் இரை உட்கொள்வதில்லையாம். அவை முழு வளர்ச்சி அடைந்ததும் இரை உட்கொள்வதை நிறுத்தி விடுகிறதாம்.

☆★மரங் கொத்திப்பறவை தன் அலகினால் மரத்தைத் துளைக்கும் வேகம் மணிக்கு 21 கி.மீட்டர்.

☆★செய்திப் படங்களை 'டொக்கியு மெண்டரி' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். ஃபிரான்சில் டொக்கியு மெண்டரி என்ற ஆங்கிலச் சொல் உருவாகிற்று, டொக்கியு மெண்டி என்பதற்கு ஃபிரான்சிலே செய்தி என்று பொருள்.

தொகுப்பு : ரி.கிருபானந்தன்-
கோடைமேடு.

## நாடுகளும் தலைநகரங்களும்

1. இந்தியா- புதுடில்லி
2. ரஷ்யா- மொஸ்கோ
3. எகிப்து- கெய்ரோ
4. சீனா- பெய்ஜிங்
5. மலேசியா- கோலாலம்பூர்
6. தாய்லாந்து- பாங்கொங்
7. பின்லாந்து- ஹெல்சிங்
8. இந்தோனேசியா- ஜகார்த்தா
9. தென்கொரியா- சியோல்
10. ஜப்பான்- டோக்கியோ

தொகுப்பு : தே.நிசாந்தினி-
புவரசன் குளம், வவுனியா.

## அறிந்து கொள்ளுங்கள்

01. எயிட்ஸ் நோயிற்கான தற்காலிக மருந்து- அஜிட் டோமிட்டின்.
02. குருதியுடன் வேகமாகச் சேரும் வாயு-ஒட்சிசன்.
03. உடலின் அதிர்ச்சியை தாங்கும் பகுதி-குருத்தெலும்பு.
04. மனித உடலில் இரத்த ஓட்டம் இல்லாத பகுதி- கண்ணில் உள்ள விழிவெண்படலம்.
05. முட்டையில் இல்லாத விற்றமின்- விற்றமின் 'சி'.
06. குருதியில் உள்ள வெல்லத்தின் அளவைக் கட்டுப் படுத்துவது- இன்சுலின்.
07. மனித மூளையின் நிறை- 1.4 கிலேகிராம் (3 இறாத்தல்).
08. சிகரட்டின் நச்சுப் பதார்த்தம் உடலை தாக்கும் பிரதேசம்- நுரையீரல்.
09. சுகதேகியான ஒருவருக்கு இருக்கவேண்டிய குருதி அமுக்கம்- 80-120.
10. ஒரு சுகதேகியான மனிதனுக்கு இருக்கவேண்டிய இதயத் துடிப்பு வேகம்- நிமிடத்துக்கு 72 துடிப்புகள்.

எ.என்.எம்.பசிஹா,
க/உடுதெனிய முஸ்லிம் மகாவித்தியாலயம்.

## விஞ்ஞான விளக்கங்கள்

1. ஏனைய இடங்களிலுள்ள கம்பி வேலிகளைவிடக் கடற்கரையோரங்களிலுள்ள கம்பி வேலிகள் அதிகம் துருப்பிடித்திருக்கும்.

இப்பிரதேசத்தில் வீசும் காற்றில் உப்புச் செறிவு அதிகம். உப்பு துருப்பிடித்தலைத் தூண்டும்.

-★-

2. குளிரூட்டியில் வைக்கப்படும் உணவு பழுதடைவதில்லை.

குளிரூட்டியில் நுண்ணங்கிகளின் பெருக்கத்துக்கும் தொழிற் பாட்டிற்கும் ஏதுவான வெப்பநிலை இன்மையாகும்.

-★-

3. மண்ணெண்ணெயைவிட பெற்றோல் விரைவாக தீப்பற்றுகிறது.

மண்ணெண்ணெய்யை விட பெற்றோல் கூடிய ஆவிப்பரப்பும். குறைந்த எரிபற்று வெப்பநிலையையும் கொண்டது.

-★-

4. மாரி காலங்களில் அதிகளவு சிறுநீர் கழிகிறது.

மாரிகாலங்களில் வியர்வை வெளியேறுவதில்லை. இவ்வியர்வையானது சிறு நீராக வெளியேறுகிறது.

-★-

5. உடம்பில் தேனீ குத்தினால் குத்திய இடத்தில் புளி பூசப்படுகிறது.

தேனீயில் காரம் உண்டு. புளியில் அமிலம் உண்டு. இரண்டும் கலக்கும் போது நடுநிலை உண்டாகும்.

எம்.ஐ.எம்.அசாத்-வெள்ளைமணல்.




## ஆபிரகாம் லிங்கனின் அமுத மொழிகள்

- ★ சேமிப்பை அலட்சியப் படுத்தி வளமையைக் கொண்டு வர முடியாது.
- ★ வலிமையை வலுவிழக்கச் செய்து பல வீனத்தைப் பலப்படுத்தமுடியாது.
- ★ கூலி கொடுப்பவனை ஊனமாக்கி கூலி வாங்குபவனுக்கு உதவ முடியாது.
- ★ பணக்காரர்களை அழித்து ஏழைகளை உயர்த்த முடியாது.
- ★ கடன் வாங்கும் பணத்தின் மூலம் தேவையான பாதுகாப்பை அடைய முடியாது.
- ★ சம்பாத்தியத்தை விட அதிகமாக செலவழித்து தொல்லையிலிருந்து மீள முடியாது.
- ★ மனித சுதந்திரத்தைப் பறித்து நன்னடத்தையும் ஊக்கத்தையும் உண்டாக்க முடியாது.
- ★ மக்கள் தாங்களாகவே செய்து கொள்ள கூடிய காரியங்களை நீ செய்து, மக்களுக்கு நிரந்தரமாக உதவ முடியாது.

இராமச்சந்திரன் கலைப்பிரியா,
இரஜவெல்ல தேசிய பாடசாலை,
கண்டி.

## புத்தகங்கள்

★ சுவாமி விவேகானந்தரின் புத்தகங்கள் அனைத்தையும் மிகக் கவனமாக நான் படித்திருக்கிறேன்.

-மகாத்மா காந்தி.

★ உலகில் சாகாவரம் பெற்ற விலை மதிப்பில்லாத பொருட்கள் உண்டு என்றால், அவை புத்தகங்கள் தான்.

-ரூஸோ

★ என் மனதிற்குப் பிடித்த புத்தகங்களை என்னிடம் கொடுங்கள். வாழ்நாள் முழுவதும் சிறையில் இருக்க நான் தயார்

-அரிஸ்டாட்டில்

★ என் உயிரை விட மேலாக நான் மதிக்கும் பொருட்கள் இரண்டு. ஒன்று என் நாடு. இன்னொன்று புத்தகம்.

-நேரு.

★ தமிழும், தரமான நூல்களும் தான், நான் நேசித்துப் பூஜிக்கும் பொருட்கள்.

-அறிஞர் அண்ணா.

தொகுப்பு : ரா.ராஜேந்திரன்.

## விறு விறு தொடர்

## 21 சீம்லா ஷீலா சுசீலா

"ஹாலோ... ஹலோ!" என்று விரயமாகத் தட்டிப் பார்த்து விட்டு, டென்ஷனோடு ரிஸீவரை வைத்தான் பரத்.

"என்னாச்சு பரத்?" என்றாள் சுசீலா.

"யாரோ ஒரு பொண்ணு பேசினா. ஆகாஷை கொலை செய்யப்போற ஒரு பொறுக்கி ராஸ்கலை நீங்க தேடிக்கிட்டிருக்கீங்களான்னு கேட்டா."

"அப்புறம்?"

"நான் ஆமாம்னு சொன்னேன். அவன் இப்போ இந்த நிமிஷம் எங்கே இருக்கான்னு எனக்குத் தெரியும். அட்ரஸ் சொல்றேன் குறிச்சுக்கங்கன்னு சொன்னா. உடனே லைன் கட்டாயிடுச்சு. ச்சே!"

"லைன் கட்டாயிடுச்சா, இல்லை அவளே கட் பண்ணிட்டாளா?"

"இவ்வளவு தூரம் மெனக்கெட்டு தகவல் சொல்ல முன் வந்தவ, எதுக்காக அவளே கட் செய்யணும்?"

"அவ தன் பேரைச் சொன்னாளா?"

"இல்லை. அந்தக் குரல்ல பதட்டம் இருந்திச்சி. அவசரம் இருந்திச்சி?"

"லைன் தானா கட்டாகியிருந்தா அவ மறுபடியும் கூப்பிடுவா!"

"இவ்வளவு நேரம் கூப்பிட்டிருக்கணுமே சுசீ."

"அப்போ என்னாகியிருக்கும்?"

"புரியலையே. அவ எங்கேர்ந்து பேசினான்னும் தெரியலையே. அந்த ரஞ்சித் போலீசுக்கு டிமிக்கி கொடுத்து விட்டு எங்கேயோ தலைமறைவா இருக்கானில்லையா, இவ அந்த இடத்தில இருக்கிறவளா இருக்கணும். அவனோட திட்டம் இவளுக்குத் தெரிய வந்திருக்கணும். தகவல் சொன்னா ஒரு கொலையைத் தடுக்க முடியுமேங்கிற நல்ல எண்ணத்தில இவ ஃபோன் செஞ்சிருக்கணும். இவ ஃபோன் செய்யறதை அந்த ரஞ்சித் கவனிச்சிருக்கணும். அவன்தான் அவசரமா லைனைக் கட் செய்திருக்கணும். இப்போ அவன் ஆத்திரமா அந்தப் பொண்ணையும் ஏதாவது செய்துத் தொலைக்கலாம்."

"இருங்க. அவசரப்படாதீங்க. இன்னும் கொஞ்ச நேரம் வெய்ட் பண்ணலாம். அவ மறுபடியும் கூப்பிடலாம்."

"கூப்புட்டா ரொம்ப நல்லது!" என்ற பரத் டென்ஷனாக சிகரெட் ஒன்றை எடுத்து உதட்டில் வைத்தான்..

"இப்ப இங்கவந்து இது ஏழாவது சிகரெட் பரத்!" என்று அந்த சிகரெட்டைப் பிடுங்கினாள்.

"ஏய்... ப்ளீஸ்... எனக்கு டென்ஷனா இருக்கு. கொடு!"

"எனக்குக் கூடத்தான் இப்ப டென்ஷனா இருக்கு. நானும் பத்த வைக்கட்டுமா?"

"அட்வைஸ் பண்ணறதுக்கு நேரமா இது? ப்ளீஸ்மா!" என்று அவளிடமிருந்து மீண்டும் வாங்கிப் பற்றவைத்தான் பரத்.

"ஏன் இப்படி லைனைக் கட்பண்ணினீங்க?" என்றாள் சுரேகா.

"நல்லா இருக்கே. நீ இங்கே இருந்துகிட்டு கொலைகாரன் அட்ரஸ் சொல்றேன்னு செல்றே. அப்புறம் இப்ப நீ எங்கேர்ந்து பேசிறேன்னு கேட்பாங்க. இந்த நம்பர் சொல்வே. அப்புறம் நான் யாருன்னு போலீஸ் என்னை விசாரிப்பாங்க. இந்த மாதிரி ஃபோன் எல்லாம் இங்கேர்ந்து பேசக் கூடாது!" என்றான் சதீஷ்.

"அய்யோ! என் அவசரம் புரியாம, பிரச்சனையோட தீவிரம் புரியாம நடந்துக்கிறீங்களே... நான் அவங்ககிட்ட பாதி சொல்லிட்டேன். முக்கியமா அட்ரஸ் சொல்லணும். அப்பப்பார்த்து கட் பண்ணிட்டீங்க. இப்ப அவங்க தவிச்சுப் போயிருப்பாங்களே..."

"அதைப் பத்தி எல்லாம் எனக்குக் கவலை இல்லை. நீ இங்கேர்ந்து பேச வேணாம். இங்கேர்ந்து வெளில போனதும் பேசி சொல்லிக்க. இப்ப வா பேசாம!"

சதீஷ் அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

"ச்சே!" என்று அலுத்துக் கொண்ட சுரேகா, "சரி வந்து தொலைய்யா!" என்று அவனோடு படுக்கையறைக்குள் சென்றாள்.

பரத் தன் வாட்சைப் பார்த்தான்.

"ம்கூம். அவ மறுபடி கூப்பிடறதா இருந்தா இந்நேரம் கூப்பிட்டிருக்கணும். அவளா லைனை கட் செய்யலை. ஏதோ விபரீதம் நடந்திருக்கு. இதுக்கு மேலயும் காத்திருக்கிறது சரியில்லை!" என்றான்.

"ஆமாம். எனக்கும் அப்படித்தான் தோணுது.. இப்ப என்ன செய்யப் போறீங்க பரத்?"



பரத் யோசனையாக சிகரெட் சாம்பலைத் தட்டிவிட்டு, சட்டென்ற பிரகாசமாகி, "ஏய்! நான் ஒரு முட்டாள்! ரஞ்சித்தைப் பிடிக்கறதுக்காக செஞ்ச ஏற்பாடுகள்ல ஒண்ணு இந்தக் கல்யாண மண்டபத்துக்கு வர்ற ஃபோன் கால்ஸ் எல்லாத்தையும் கண்காணிக்கச் சொன்னது. நியூட்டன் எக்ஸ்சேஞ்சுக்குச் சொல்லியிருக்கணும். முதல்ல அவரைக் கூட்டிட்டு வா சுசீ!" என்று பரபரத்தான்.

அழைத்து வரப்பட்ட நியூட்டன். "என்ன பரத்?" என்றார்.

நிலமையை விளக்கினான்.

"நோ பிராப்ளம் இப்ப கடைசியா இந்த நம்பருக்கு எந்த நம்பர்லேர்ந்து ஃபோன் வந்திச்சின்னு இப்ப கேட்டுச் சொல்லிடறேன்."

நியூட்டன் ஃபோன் எடுத்தார். பேசினார். வைத்தார். எண்ணைச் சொன்னார்.

"சுசீ, இந்த நம்பரோட அட்ரஸ் என்கொயரில கேளு."

சுசீ கேட்டாள். குறித்துக் கொண்டாள்.

"சதீஷ்னு பேர் சொல்றாங்க பரத். திருவான்மியூர் அட்ரஸ்."

"இந்த சதீஷ் வீட்லதான் ரஞ்சித் தலைமறைவா இருந்திருக்கணும்!" என்ற பரத் நியூட்டனிடம், "சார், எந்த அதிரடி நட வடிக்கைக்கும் தயாரா நாலு பேரக் கூட்டிக்கட்டு நீங்களும் எங்ககூட வரணும். என் யூகம் சரியா இருந்தா இன்னும் கொஞ்ச நேரத்தில அந்த ரஞ்சித்தைப் பிடிக்கப் போறோம்!" என்றான்.

"ஓ.கே. புறப்படலாம்!" என்றார் நியூட்டன்.

சுரேகா பெருமூச்சு விட்டாள். சதீஷை விட்டு விலகினாள். ஆடைகளைப் பொறுக்கிக் கொண்டாள். குளியலறைக்குள் சென்றாள்.

சதீஷ் டவல் எடுத்து தன் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டான். சிகரெட் எடுத்துப் பற்ற வைத்தான்.

வாசல் அழைப்பு மணி ஒலித்தது.

எழுந்து லுங்கியைச் சரியாகக் கட்டிக் கொண்டு வந்து கதவைத் திறந்து அதிர்ந்தான்.

போலீஸ்!

"மிஸ்டர் சதீஷ்?"

"நான்தான்."

நியூட்டன் சட்டென்று அவன் சட்டையைக் கொத்தாகப் பிடித்து, "ரஞ்சித் எங்கே? உள்ளேதானே இருக்கான்?" என்றார்.

"ரஞ்சித்தா? யாரது?"

பொளேர் என்று அறை விழுந்தது.

"சொல்லுடா ராஸ்கல்! உன் ஃபிரண்டை நீ எங்கே ஒளிச்சு வெச்சிருக்கே?"

அவனை வீட்டுக்குள் தள்ளி நடந்தார் நியூட்டன். பரத், சுசீலா மற்றும் கான்ஸ்டபிள்களும் தொடர்ந்தனர்.

"சார்! நீங்க யாரைப் பத்தி விசாரிக்கறீங்கன்னு எனக்குத் தெரியலை. எனக்கு ரஞ்சித்துன்னு ஃபிரண்டு யாரும் கிடையாது."

"பொய் சொல்லாதே!"

"நிஜமா சார்!"

"சரி, இந்த வீட்ல வேற யார் யார் இருக்காங்க?"

"என் வைஃப், குழந்தைங்க இருக்காங்க. ஆனா இப்போ அவங்க ஊர்ல இல்லை."

"கொஞ்சம் முன்னாடி உன் ஃபோன்லேர்ந்து ஒரு லேடி எங்ககிட்ட பேசினா. சட்டுன்னு லைன் கட்டாயிடுச்சு. அது யாரு அப்போ?"

"அது.. வந்து... வந்து..."

"கமான் சொல்லு!"

"என்க்குத் தெரியாது சார். இங்க நான் மட்டும்தான் இருக்கேன். ஏதோ தப்பா என்னைப் புரிஞ்சுக்கிட்டு விசாரிச்சிட்டிருக்கீங்க."

பரத்தின் பார்வை அலைந்தது.

ஹால் ஓரத்தில் ஒரு ஜோடி ஹைஹீல்ஸ் செருப்புகள் கிடப்பதைப் பார்த்தான்.

"சதீஷ், அது யாரோடது?" சுட்டிக் காட்டிக் கேட்டான்.

"அது.. அது..." திணறினான்.

"என்னோடது சார்!" என்று படுக்கையறையிலிருந்து வெளியே வந்தாள் சுரேகா தன் கூந்தலுக்குப் பாண்ட் போட்டபடி.

"நீ யாரு?"

"என் பேரு சுரேகா. நான்தான் போன் செஞ்சேன். அப்போ இவர் தான் லைனைக் கட் பண்ணிட்டாரு. நான் தொழில்ல உள்ளவ சார். நேத்து ராத்திரி என்னைத் தேடி என் வீட்டுக்கு வந்தான் சார் நீங்க தேடிக்கிட்டிருக்கிற அந்த ஆளு. நல்லா தண்ணியடிச்சான். முழு போதையில அவன் தீபிகாவை காதலிச்சி ஏமாந்த தால, கல்யாணம் செஞ்சதும் புது மாப்பிள்ளை ஆகாஷைக் கொலை செய்ய போறதைச் சொன்னான். அவனோட திட்டத்துக்கு என்னையும் உதவ சொன்னான். பணம் தர்றேன்னான். நானும் ஒத்துக்கிட்டேன். ஆனா ஒரு பெண்ணோட தாலியைப் பறிக்கறதுல எனக்குச் சம்மதமில்லாததால உங்ககிட்ட தகவல் சொல்ல அவனைப் பிடிச்சுக் கொடுத்துடலாம்னு நினைச்சிப் புறப்பட்டேன் நல்ல போதையில தூங்கிட்டு இருந்த அவனுக்குத் தெரியாம புறப்பட்டேன். ஆனா இந்தாளு வழிமறிச்சி வற்புறுத்தி இங்க கூட்டிட்டு வந்துட்டாரு. இவரு என் கஸ்டமர்!" என்றாள் சுரேகா.

"ரைட்டு. ரஞ்சித் இப்போ எங்கே இருக்கான்?"

"வாங்க, நான் அழைச்சிட்டுப் போறேன்."

சுரேகாவை ஜீப்பில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்கள்.

அந்த வீட்டிற்குள் அவர்கள் வந்து சேர்ந்தபோது,

ரஞ்சித் அங்கே இல்லை!


(தொடர்ந்து வரும்)

மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

# ஒளிப்பதிவு அனுபவங்கள்

'பகலில் வெயிலில் படமாக்கினால் சிங்கத்திற்கும், நடிப்பவர்களுக்கும் துன்பமாக இருக்கமென்று ஒருமாதமும் இரவிலேயே படப்பிடிப்பு நடததினோம். என்னதான் பயிற்சி அளிக்கப்பட்ட சிங்கம் என்றாலும் அதன் இயல்பு தெரிந்துதான் அதனிடம் வேலை வாங்க வேண்டும். அந்த விஷயத்தில் எம்.ஜி.ஆர்., உஷாராக இருந்தார்.

சிங்கத்தை ஓரிடத்தில் எம்.ஜி.ஆர்., தூக்கிப் போட வேண்டும். அதற்குரிய உடல் வலு எம்.ஜி.ஆரிடம் இருந்ததென்றாலும் சிங்கத்திற்கு அதனால் அடிபடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்.



திரைப்படங்களில் நடிக, நடிகையரை வைத்து இயக்குநர் அமைக்கும் காட்சிகளை திரையில் வடிவமைப்பவர் ஒளிப்பதிவாளர். தமிழ்த்திரைப் பட ஒளிப்பதிவாளர்களில் குறிப்பிடத்தக்க சிலரில் ஒளிப்பதிவாளர் வி.ராமமூர்த்தியும் ஒருவர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நடித்த 23 படங்களை ஒளிப்பதிவு செய்திருக்கிறார் இவர்.
தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி என 5 மொழிகளில்-1951 முதல் 1991 வரை 40 வருடங்களில் - 96 படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார். 76 வயதான ராமமூர்த்தியின் திரையுலக அனுபவங்களைத் தொகுத்துத்தருகிறார் எஸ்.விஜயன்.

நுணுக்கங்கள் நிறைந்த, தெரிந்த நடிகர் எம்.ஜி.ஆர்., படங்களில் அழகுணர்ச்சியை அதிகம் கொண்டு வந்தவர் அவர். வண்ணப் படங்களில் நடிக்க ஆரம்பித்த பின் தான் அணியும் உடைகளின் வண்ணம், அரங்க அமைப்பின் வண்ணம் இதையெல்லாம் எம்.ஜி.ஆர்., கவனிப்பார்.

அரங்கில் இருக்கும் போது உடையை அணிந்து அதன் வண்ணம் பின்புறமுள்ள அரங்கின் வண்ணத்தோடு பொருந்துகிறதா என்பதை முகம் பார்க்கும் கண்ணாடியைக் கொண்டு பார்ப்பார். பொருந்தவில்லை என்றால் வேறு உடை அணிந்து கொள்ளவார்.

'உலகம் சுற்றும் வாலிபன்' படத்திற்காக எம்.ஜி.ஆர்., மேற்கொண்ட உழைப்பு, முயற்சிகள் சாதாரணமல்ல. ஒரு தயாரிப்பாளராக, இயக்குநராக, நடிகராக அந்த படத்தில் அவரது உழைப்புக்கு ஈடாக இன்றுவரை இன்னொருவரைச் சொல்ல முடியாது.

இந்த படத்தினால் தனக்கு இவ்வளவு லாபம் கிடைக்கும் என்று கணக்கு பார்த்து தொடங்கப்பட்டதல்ல 'உலகம் சுற்றும் வாலிபன்.' அந்த படத்தினால் எம்.ஜி.ஆர்., சந்தித்த சோதனைகள் வேறு எவருக்கும் வந்திருக்குமேயானால் சினிமாவை விட்டே போயிருப்பார்கள்.



'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில் எம்.ஜி.ஆர்.-சந்திரகலா

படத்திற்கான பிரதிகளை சென்னையில் உள்ள லேபரேட்டரியில் எடுக்க முடியாததால், மும்பாயில் இருந்து பிரதிகள் வரவழைக்கும்படி ஆனது. அதனால் கூடுதல் செலவானது.

அயல்நாடுகளில் படப்பிடிப்பு நடத்திய போது தாராளமாக செலவு செய்தார் எம்.ஜி.ஆர்., ஜப்பான் தலைநகர் டோக்கியோவிலுள்ள அசோகா ஒட்டலில் நாங்கள் தங்கிய போது அங்கும் சைவ விரும்பிகளாகிய எங்களுக்கு சைவ உணவு கிடைக்கும்படி பார்த்துக் கொண்டார்.

ஜப்பானில் ஒசாகாவில் நடந்த 'எக்ஸ்போ' கண்காட்சியில் நாங்கள் பல நாட்கள் படப்படிப்பு நடத்தினோம். அங்கு அனைவருக்கும் தேவையான உணவு மற்ற தேவைகளை கவனித்துக் கொள்வதில் சில சிரமங்கள் இருந்தன.

எம்.ஜி.ஆர்., அதையெல்லாம் உணர்ந்து அவரவர் உணவு, மற்ற செலவினங்களுக்கு என்று தினமும் தலா 4 ஆயிரம், 5 ஆயிரம் ஜப்பானிய யேன்களைக் கொடுத்தார். அது ஒவ்வொருவருக்கும் தாராளமாகப் பயன்பட்டது.

ஹாங்காங்கில், 'தங்கத் தோணியில்' என்ற பாடலை கடல் பகுதியில் படமாக்கினோம். அப்போது படகில் செல்லும் எம்.ஜி.ஆர்., சந்திரகலாவின் பின்னணியில் விமானங்கள் அடிக்கடி சென்ற வண்ணமிருந்தன. அதைத் தங்களது பின்னணியோடு படமாக்க வேண்டுமென்று எம்.ஜி.ஆர்., விரும்பினார்.

ஆனால், ஒவ்வொரு முறையும் விமானம் வரும் போது, ஏதாவது பிரச்சனை ஏற்பட்டது. ஒரு சமயம் விமானம் வரும் போது புகை விட்டுக் கொண்டு செல்லும். இன்னொரு சமயம் விமானம் மேகக் கூட்டங்களில் மறைந்து விடும். அதனால் மீண்டும் மீண்டும் படமாக்கும் படி ஆனது. எம்.ஜி.ஆர்., சலித்துக் கொள்ளாததால் கடைசியில் அவர் விரும்பியபடி காட்சி படமானது.

அதேபோல் ஹாங்காங் நகருக்குள் எம்.ஜி.ஆர்., காரில் செல்லும் போது மேலே விமானம் செல்லும். அதெல்லாம் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். கதையோடு பொருந்தக் கூடிய அழகு எங்கிருந்தாலும் அதை படமாக்குவதற்கு எம்.ஜி.ஆர்., காட்டிய அக்கறையும், பொறுமையும் அந்த படத்தை மிகப் பிரம்மாண்டமாகக் காட்டியது.

'அவளொரு நவரச நாடகம்' என்ற பாடலில் தண்ணீருக்கடியில் நடக்கும் நடனக் காட்சிகளை ஜப்பானில் படமாக்கி, அதன் அருகாமை காட்சிகளை சத்யா ஸ்டூடியோவில் கண்ணாடியிலான தண்ணீர் தொட்டி அமைத்து, அதற்குள் லதாவோடு எம்.ஜி.ஆர்., நடிக்க படமாக்கினோம். படத்தில் எந்தப் பக்கம் பார்த்தாலும் நம் பிம்பம் தெரியும் வகையில் கண்ணாடி செட் ஒன்று அமைத்து சில காட்சிகளை படமாக்க எம்.ஜி.ஆர்., திட்டமிட்டிருந்தார்.

-எஸ். விஜயன்-

ஐந்து கேமராக்களைக் கொண்டு அந்த காட்சிகள் படமாக்கப்பட்டிருக்குமானால் படத்தில் அது பெரிய அளவில் பேசப்பட்டிருக்கும். கண்ணாடிகள் எல்லாம் வந்து அவை பல அளவுகளில் அறுக்கப்பட்டு தயாராக இருந்த போது எம்.ஜி.ஆரின் திட்டம் மாறிப் போனது.

படத்தின் எடிட்டிங் ஜெமினியில் நடந்த போது, இரவு பகல் என்று பாராமல் 24 மணி நேரமும் சாப்பாடு, காபி, டிபன் என்று எல்லாமும் தவறாமல் கிடைப்பதற்கு எம்.ஜி.ஆர்., ஏற்பாடு செய்திருந்தார்.

எம்.ஜி.ஆர்., அ.தி.மு.க., தொடங்கி அரசியலில் தீவிரம் காட்டியபின் எனக்கு தொடர்ந்து வேலை கிடைக்கும் வகையில் தேவர் பிலிம்ஸில் இணைத்து விட்டார்.

அங்கு 30க்கும் மேற்பட்ட படங்களில் வேலை செய்தேன்.

பாக்கியராஜ் டைரக்ஷனில் 'அவசர போலீஸ் 100', 'பவுனு பவுனுதான்' ஆகிய படங்கள் நான் கடைசியாக வேலை செய்தவை. அதற்கு பின் சினிமாவிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு விட்டேன் என்றார் ராமமூர்த்தி சிரித்தபடி.

முற்றும்

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 28

'பைத்தியக்காரன்' திரைப் படம் விதவை விவாகத்தை வலியுறுத்தும் நோக்குடன் எழுதப்பட்டக்தை. சகஸ்ரநாமம் இதில் கதாநாயகனாகத் தோன்றுகிறார். இளவயதிலேயே விதவையாகிவிட்ட தனது தங்கைக்கு மறுமணம் முடித்து வைக்க அவர் பெரும்பாடு படுகிறார். ஆனால் குடும்பத்தின் மூத்தவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இறுதியில் சகஸ்ரநாமத்தின் நண்பர் ஒருவனே விதவையான அந்தப் பெண்ணைக் கெடுத்து கர்ப்பிணியாக்கி விடுகிறான். தன் நண்பன் செய்த துரோகத்தை மன்னித்து, தங்கையை திருமணம் செய்து கொள்ளும்படி கேட்டபோது அவன் முடியாதென மறுக்கிறான்.

இந்நிலையில் இருவருக்குமிடையில் கைகலப்பு ஏற்படுகிறது. சகஸ்ரநாமம் தன் நண்பனை சுவரில் மோதும்போது சுவரிலிருந்த ஆணியொன்று அவனின் முதுகுப் புறமாக ஏறி நண்பன் சாகிறான். இதற்கிடையில் தான் கணவனில்லாமலே தாய்மை எய்தியமையினால் தற்கொலை செய்து கொள்கிறாள் அப்பெண்.

சகஸ்ரநாமம் முன்பொருதடவை தனது நண்பன் வீட்டுக்குச் சென்றிருந்த போது, அவன் கலைக்கூடமொன்றில் இருந்து வாங்கிவந்த சிறிய சிற்பமொன்றைக் காட்டுகிறான். அது ஒரு நீதி தேவதையின் சிற்பமாகும். அதனுடைய கண்கள் கறுப்புத் துணியால் கட்டப்பட்டிருந்தன. கையில் தராசு ஒன்றிருந்தது. ஆனால் அதிலொரு பக்கம் கோணிக்கொண்டிருந்தது. இதனை அந்த நண்பன் ஆணியடித்து அவனுடைய அறையின் சுவரில் மாட்டியருந்தான். சுவருடன் சிற்பத்தைப் பிணைத்திருந்த ஆணி கூராக வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. இந்த ஆணியே சகஸ்ரநாமத்தின் நண்பனது முதுகில் பாய்ந்து அவன் மரணமடைகிறான். இதனைத் தொடர்ந்து நீதியின் சின்னமான அந்தச் சிலையின் கையிலிருந்த தராசு கோணல் நீங்கி சமநிலையடைகிறது.


நண்பனின் தங்கையைக் கெடுத்து அவளுடைய சாவுக்குக் காரணமானவனை நீதியின் சின்னமான சிலையைத் தாங்கியிருந்த ஆணி குத்திக் கொலை செய்து விட்டமையினால் தராசும் சமநிலையெய்தி நீதி நிலைநாட்டப்பட்டு விட்டதாக அறிவுறுத்துவதாகவே இந்தக் காட்சியை படத்தின் இயக்குநர் சேர்த்திருந்தார்.

கலைவாணருடன், ஓடிக் கொண்டிருந்த வண்டியில் உரையாடிக் கொண்டிருந்த நான், இந்தச் சம்பவத்தைக் கூறி இயக்குநரின் திறமையைச் சுட்டிக் காட்டிப் பாராட்டினேன். இந்தச் சம்பவத்தைக் கூறியதும், கலைவாணர் திகைத்துப்போனார். 'இலங்கை நாட்டின் ஏதோவொரு சிற்றூரில் வசிக்கும் இந்த இளைஞன் எவ்வளவு நுணுக்கமாக ஒரு திரைப்படத்தின் காட்சியைப் பார்த்து இரசித்ததுடன் மட்டுமல்லாமல், இயக்குநரால் கையாளப்பட்டிருந்த நுணுக்கமான சங்கேத குறிமுறையை அவதானித்திருக்கிறாரே' என்று வியந்தார். இப்படியொரு காட்சி அப்படத்தில் இடம்பெற்றிருக்கிறது என்பதையே கலைவாணர் அப்போது மறந்து போயிருந்தார்.

இதனைத் தொடர்ந்து மதுரம் அம்மை யார் "அம்மா, (கலைவாணரை அம்மா என்றுதான் மதுரம் அழைப்பார்) இந்தத் தம்பி இங்கே இருந்துண்டு இம்மாதிரி எல்லாம் அறிஞ்சி வைச்சிருக்கே! இந்தத் தம்பி நம்மோட வந்துட்டா நம்ம ஃபில்டிலே திறமாக ஜொலிப்பாரே!" என்று கூறினார்.

கலைவாணரும் "ஆமா தம்பி! நீங்க மெட்ராஸுக்கே வந்துடுங்களேன். நானே உங்களை ஃபில்டிலே ஜொலிக்க வைக்கிறேன்." என்று ஆர்வத்துடன் சொன்னார்.

இந்தச் சம்பவத்தைப் போல் சினிமாக்களில் நான் ஏற்கனவே பார்த்து இரசித்த பல காட்சிகளைப் பற்றி அவர்களிருவருடனும் மனம் விட்டுக் கலந்துரையாடினேன்.



'பைத்தியக்காரன்' திரைப்படத்தில்

## 'நடிகன் குரல்' சஞ்சிகைக்கு நான் எழுதிய கட்டுரை



சகஸ்ரநாமத்தின் தங்கையாக நடித்தவர் எஸ்.ஜே. காந்தா என்பவர். இவர் மிகச் சிறப்பாக பாடக்கூடியவரும் கூட. ஆனால் இவருக்குத் திரையுலகம் போதுமான ஆதரவுதரவில்லை. 'பைத்தியக்காரன்' படத்தில் கார்த்திகைத் தீபங்களையேற்றி வைத்துவிட்டு "ஜெக ஜோதி..... ஜெக ஜோதி..." என்று தொடங்கும் ஒரு பாடலைக் காந்தா பாடுகிறார்.

இந்தப் பாடலையும் சுட்டிக்காட்டி "காந்தா அருமையாகப் பாடுகிறாரே! இவரை உங்கள் சினிமா உலகம் ஏன் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டது?" என்று கேட்டு வைத்தேன். இதனைக் கேட்ட மதுரம் அம்மையார் "தம்பி! உண்மையாக அவருடைய பாட்டு நன்றாகவா இருக்கிறது?" என்று கேட்டுவிட்டு, கலைவாணர் பக்கம் திரும்பி, "ஏம்மா, அவளுக்கும் பாடறத்துக்கு ஏதாவது சான்ஸ் வாங்கிக் கொடுங்களேன்....." என்றார். கலைவாணரும் "தம்பி சொன்னதனால் ஊருக்குப் போனதும் மொதல் வேலையா காந்தாவுக்குப் பாடறதுக்கு சான்ஸ் வாங்கிக் கொடுக்கறேன்" என்று உறுதியுடன் கூறினார்.

கலைவாணர் என்னிடம் கூறியதுபோல் காந்தாவுக்கு திரைப்படமொன்றில் பாடுவதற்கு உண்மையில் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தார். மொடர்ன் தியெட்டர்ஸ் தயாரித்த 'இல்லற ஜோதி' படத்தில் எஸ்.ஜே.காந்தா 'கண்களிரண்டில் ஒன்று போனால் காண முடியாதே! உடலழகைக் காண முடியாதே.....' என்ற பாடலைப் பாடினார். இப்பாடல் கவிஞர் கண்ணதாசனால் உருவாக்கப்பட்டது.

காந்தா இந்தப்பாட்டுடன் தனது இறுதியைத் தழுவிக் கொண்டார். என்ற தகவலை 1958ம் ஆண்டு சென்னையில் மதுரம் அம்மையர்ரை நான் கண்டபோது, கேள்வியுற்று அதிர்ந்து போனேன். அவர் அஸ்மா நோயினால் பீடிக்கப்பட்டு சின்ன வயதிலேயே காலமாகியிருக்கிறார்.

கலைவாணர் அவர்களைப் பற்றி இக்கட்டுரையில் இத்தனை விரிவாக நான் விபரித்துக் கொண்டு போவதற்கு முக்கிய காரணம் இருக்கிறது என்பதை இந்தக் கட்டத்தில் கூறிவைக்க வேண்டியுள்ளது.

இலங்கையில் கலைவாணரைச் சந்தித்து உறவாடிய பின்னர் நான் அவரை உயிருடன் காணவில்லை. சென்னையில் கலைவாணரின் இல்லத்தின் அருகில் வசித்து வந்த ஓவிய மன்னர் மாதவன் அவர்களுடைய இல்லத்தில் ஓவியமாகத்தான் அவரைப் பார்த்தேன்.

கலைவாணர் 1957ம் ஆண்டு செப்டம்பர் மாதம் காலமாகிவிட்டார். இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பாக 1958ம் ஆண்டு நான் சென்னை சென்றிருந்தேன். அப்போது, தியாகராய நகரிலுள்ள கலைவாணர் இல்லத்தில் மதுரம் அம்மையாரைச் சந்தித்தேன். என்னைக் கண்டதும் துக்கம் தாளாமல் என்னை கட்டியணைத்து அழுது புலம்பினார். "உங்கண்ணா உசிரோடு இருக்கிறப்போ வராமே, இப்ப வந்திருக்கிறீங்களே" என்று பிரஸ்தாபித்தார். தொடர்ந்து பல நாட்கள் அவரிடம் சென்று அறுதல் கூறிவிட்டு வந்தேன்.

சென்னையில் லாயிட்ஸ் சாலையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அண்ணன் எம்.ஜி.சக்கரபாணியுடைய இல்லம் இருந்தது. அதனருகிலேயே எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் ஒரு பெரிய வளவும் இரு கட்டிடங்களும் இருந்தன. இந்த இடமே இன்று அ.இ.அ.தி.மு.க. கழகப் பணிமனையாக இருக்கிறது. அப்போது இந்த இடத்தில் தான் தென்னிந்திய நடிகர் சங்கப் பணிமனை இருந்தது. ஏற்கனவே நடிகர் சங்க செயற்குழுக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது தான் முதன் முதலில் நான் எம்.ஜி.ஆர். அவர்களை சந்தித்தேன் என்ற தகவலைக் கூறி இருந்தேன்.

நடிகர் சங்கப் பணிமனையின் பொறுப்பாளராக ஆர்.எம்.சோமசுந்தரம் என்பவர் கடமையாற்றி வந்தார். அவரிடம் நான் அடிக்கடி சென்று உரையாடி வருவேன். கலைவாணரின் இலங்கைப் பயணம் பற்றி சோமசுந்தரம் அவர்களிடம் நான் கூறியிருந்தேன். ஒரு நாள் அவருடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது ஔவை டி.கே.சண்முகம் அவர்கள் என்னைப் பார்க்க விரும்புவதாக சோமசுந்தரம் சொன்னார். சண்முகம் அவர்களும் அதே லாயிட்ஸ்



சாலையில் வசிப்பதனால் அவரை உடனே சென்று பார்க்கும்படியும் சொல்லி தொலைபேசி மூலம் சண்முகம் அவர்களுக்குத் தெரிவித்தார்.

ஔவை சண்முகம் அவர்களை அவருடைய இல்லத்தில் சந்தித்தேன். சண்முகம் அவர்கள் தமது டி.கே.எஸ். நாடக சபையினருடன் இலங்கை வந்து பம்பலப்பிட்டி

இரா.பத்மநாதன்

சரஸ்வதி மண்டபத்தில் பல நாடகங்களை அரங்கேற்றி இருக்கிறார். அவர் ஔவையார் நாடகத்தில் வயதான ஔவை பிராட்டியாக நடித்து வருபவர். அந்த நாடகம் இலங்கையிலும் மேடையேற்றப்பட்டு பெரும் புகழ் ஈட்டியது. இலங்கை வந்திருந்தபோது அவரை சில தடவைகள் பார்த்துப் பேசிய அறிமுகமும் இருந்தது.

கலைவாணர் மரணமடைந்து. 1958 செப்டெம்பர் மாதத்துடன் ஒரு வருடம் பூர்த்தியாவதால் அவருடைய சிரார்த்த தினத்தை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தென்னிந்திய நடிகர் சங்கம் மாதந்தோறும் 'நடிகன் குரல்' என்றொரு சஞ்சிகையை வெளியிட்டு வந்தது. அந்த செப்டெம்பர்மாத இதழை கலைவாணர் நினைவு மலராக வெளியிடுவதற்கு நடிகர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. இதற்குச் சஞ்சிகையின் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றியவர் ஔவை சண்முகம் அவர்களே.

இந்த சஞ்சிகையில் கலைவாணரைப் பற்றி ஒரு சிறப்புக் கட்டுரையை நான் எழுதித் தரவேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார். சஞ்சிகையின் ஒரே பக்கத்தில் இடம்பிடிக்கக் கூடியதாக கட்டுரை இடம்பெற்றிருக்க வேண்டும் என்றும் சண்முகம் அவர்கள் கேட்டுக் கொண்டார். ஒப்புக் கொண்டேன்.

'இலங்கையில் கலைவாணர்' என்ற தலைப்பிட்டு அடுத்த நாளே கட்டுரையை திரு.சண்முகம் அவர்களிடம் ஒப்படைத்தேன். அவர் அதனை வாசித்தார். முதல் ஓரிரு பந்திகளை வாசித்து விட்டு திருப்திப்பட்ட அவர், கட்டுரையின் இறுதியில் நான் எழுதியிருந்த முடிவைப் பார்த்ததும் அவருடைய நெற்றியில் சுருக்கங்கள் ஏற்பட்டதை நான் அவதானித்தேன்.

கட்டுரையின் இறுதியில் 'கலைவாணர் தற்கொலை செய்துகொண்டார்' என்று தான் குறிப்பிட்டிருந்தேன்.

'கலைவாணர் தற்கொலை செய்து கொண்டார்' என்று நான் கூறியிருந்தது ஒரு பெரும் புயலைக் கிளப்பிவிடும் என்று நான் கனவிலும் கருதவில்லை.

டி.கே.எஸ். அவர்கள் என்னை நிமிர்ந்து பார்த்து, "எதற்காக இப்படி எழுதினீர்கள்...?" என்று என்னிடம் கேட்டார். தொடர்ந்து நான் சென்னைக்கு எப்போது வந்தேன், என்பன போன்ற விவரங்களையும், சென்னையில் எனக்கு யார் யாருடன் தொடர்புண்டு என்பன போன்ற விவரங்களையும் கேட்டார். நான் உரிய பதில்களைச் சொன்னபோதும் கூட அவர் திருப்திப்பட்டதாகத் தெரியவில்லை. உங்கள் கட்டுரையை 'நடிகன் குரலில்' அப்படியே போடுவதனால், தலைவருடைய அனுமதியையும் பெற வேண்டும்," என்று கூறினார். அப்போது நடிகர் சங்கத்தின் தலைவராக இருந்தவர் எம்.ஜி.ஆர். அவர்களே. "முடியுமானால் நாளையே எம்.ஜி.ஆர். அவர்களை நீங்கள் போய்ப் பாருங்கள். நான் அவருடன் உங்களைப் பற்றிக்கூறி வைக்கிறேன்" என்று மேலும் சொன்னார்.

என்னைப் பொறுத்தவரை 'பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையாக' இருந்தது எனக்கு. எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்க்க வேண்டும் என்று பேரவா கொண்டிருந்த எனக்கு, 'பாலில் விழுந்த பழம் என் வாயிலேயே விழுந்துவிட்ட நிலை' தான் ஏற்பட்டது.

**(இன்னும் வரும்)**

---

# திரை உலகில் கருணாநிதி 08

'மருதநாட்டு இளவரசி' வெளியீட்டுத் தேதி: ஏப்ரல் 14, '50', 'மந்திரிகுமாரி' வெளியீட்டுத் தேதி ஜூன் 24,'50',.

'மருதநாட்டு இளவரசி' படம் வெளியான போது, கருணாநிதியின் வசனங்களுக்காக ஒவ்வொரு காட்சியிலும் கைதட்டினார்கள். படத்தில் யார் பேசினாலும் கைதட்டினார்கள் என்கிறார் படத்தின் தயாரிப்பாளர் ஜி.முத்துசாமி.

படத்தின் பாட்டுப் புத்தகத்திலிருந்து அதன் கதைச் சுருக்கத்தை தன் நூலில் எடுத்து வெளியிட்டிருக்கிறார் அறந்தை நாராயணன்.

ஆனால் படம் வெளிவந்த ஆண்டே, கோவில்பட்டியிலிருந்து 'பைந்தமிழ் பாசறை' என்ற அமைப்பினர் 'மருதநாட்டு இளவரசி,' 'மந்திரிகுமாரி' இரண்டு புத்தகங்களின் கதை வசனங்களையும் தனித் தனி புத்தகமாக 'மூன்று அணா' விலையில் வெளியிட்டிருக்கிறார்கள். புத்தகத்தின் அட்டையில் கருணாநிதியின் புகைப்படம் தான் இடம்பெற்றிருக்கிறது. எம்.ஜி.ஆர். திரைப்படத்தில் தோன்றிய படம் இல்லை.

உள்ளே கருணாநிதியின் முன்னுரையோ நடிகர், நடிகைகள் பட்டியலோ இடம்பெறாமல் எடுத்த எடுப்பில் வசனம் ஆரம்பமாகிறது.

'சாம்பிளுக்'காக வசனத்தின் முதல் பக்கத்தை அப்படியே தருகிறேன்.

**கோபதிவர்மன்:** கொலைகாரி! போதும் உன் கும்மாளம். அங்கே நாச வேலை நடத்தி விட்டு, அதை மறைக்க இங்கே நடனம்.

**சித்திரா:** என்ன?

**கோபதி:** சிங்காரியின் வாழ்வைச் சிதைக்க நீ போட்டாயே திட்டம், அது செத்து



விட்டது தெரியுமா? சண்டாளி!

**சித்திரா:** திட்டமா? என்ன?

**கோபதி:** ஆஹா! என்ன நடிப்பு! அக்ரமக்காரி. உன்னை அக்கினியில் தள்ளிப் பொசுக்கினாலும் போதாது.

**அன்பானந்தர்:** அரசே, கோபம் நீதியை மறைத்துவிடும். நிதானமாக..

**கோபதி:** நிதானம்! அன்பானந்தரே, நீரே கேளும் இந்த நீலியை!

**அன்பா:** மகாராணி! இளையராணி கர்ப்பமுற்றிருப்பதில் தங்களுக்குப் பொறாமை. அந்த குழந்தை ராஜ்ஜியத்தில் பங்கு கேட்குமே என்ற பயம். அதன் காரணமாய் இளைய ராணிக்கு அனுப்பப்பட்ட மருந்தில் தாங்கள் விஷம் கலந்து விட்டீர்கள்!

**சித்திரா:** ஆ!

**அன்பா:** இது இளைய மகாராணியின் குற்றச் சாட்டு!

வசனம் இப்படியே ஏகப்பட்ட ஆச்சரியக் குறிகளைக் கடந்து, போய்க் கொண்டே இருக்கிறது!

'மந்திரிகுமாரியில் கருணாநிதியின் வசனங்கள் நல்ல தமிழில் இருந்தாலும், அது இயல்பான வகையில் இல்லாமல், அடுக்குத் தமிழில் வளவளக்கப்பட்டிருக்கும். வாணலியில் கடுகு பொரிகிற மாதிரி பொரியும். இது அண்ணாத்துரையிடம் இருந்து கருணாநிதிக்க தொற்றிக் கொண்ட விஷயம்.

'அ' என்று வார்த்தையில் ஆரம்பித்தால், அ, ஆ என்ற எழுதிக் கொண்டே போவார் அண்ணாத்துரை. 'அரண்மனை மாடியிலே அம்சத்துளிகாமஞ்சத்திலே அமர்ந்திருக்கும் அரிவையை அடைய எண்ணி அங்கு சென்ற ஆணழகன், அகழியின் ஆழத்திற்கோ, அதில் அலையும் முதலையின் வாய்க்கோ அஞ்சிடின் யாங்கனம்அம்மங்கையை அடைய முடியும்?'-இது அண்ணாத்துரையின் 'கலிங்கத்து ராணி' கதையில் ஒரு பாரா. இதே பாணி யைத்தான் சினிமா வசனத்தில் கருணா நிதியும் பின்பற்றினார்.

அகரத்தில் ஆரம்பித்தால் அகரமாகவே எழுதிக்கொண்டு போவதும், 'த'கரத்தில் ஆரம்பித்து தகரமாகவே எழுதிக் கொண்டு போவதுமான கருணாநிதியின் வசனத்தை, 'தகர டப்பாவில் கூழாங்கற்களைப் போட்டு ஆட்டுகிற மாதிரி இருக்கிறது,' என்று 'தினமணிக் கதிர்' எழுதியது. சற்றே ஏகடிய தொனியில் இருந்தாலும், அதில் உண்மை இல்லாமலும் இல்லை. 'மந்திரிகுமாரி' உதவி இயக்குநர் கே.சோமு சொல்கிறார்:

"அவர் எழுதிய வசனங்களை அப்படியே படம் பிடித்து விட்டோம். போட்டுப் பார்த்த போது யாருமே நிம்மதியாக உட்கார்ந்து பார்க்க முடியாது என்ற முடிவுக்கு வந்தோம். அவ்வளவு பரபரப்பாக இருந்தது. மிகவும் சிரமப்பட்டு படத்தை மெதுவாகப் போகச் செய்ய இரண்டு பாடல்கள், நகைச்சுவை காட்சிகளை மேலும் சேர்த்தோம். அப்படியும் அதன் வேகம் போதுமான அளவு குறையவில்லை!"

'மந்திரிகுமாரி'யில் கருணாநிதி தெள்ளு தமிழ் வசனம் தீட்டியிருந்தாலும், அதில் ராஜகுருவாக நடித்த எம்.என். நம்பியார் படத்தில் 'ச' என்ற உச்சரிப்பில் வரும் வார்த்தைகளை-ஷத்தம் போடாதீங்க-ஷாப்புடுங்க-ஷமாதானமா போங்க-என்றெல்லாம் பேசி திருஷ்டி பரிகாரம் செய்தார்.

'மாடர்ன் தியேட்டர்ஸ்'சுக்கு ஒரு நாள் சோமு ஓர் இளைஞரை அழைத்து வந்து கருணாநிதியிடம் அறிமுகப்படுத்தி, 'புது முகம். பெயர் அந்த்வானாம். நடிக்க வாய்ப்பு கேட்கிறார்,' என்றார். கருணாநிதி, "எங்கே நடித்துக் காட்டுங்கள்," என்றார். அந்த்வான் உடனே எடுத்து விட்டார்

ஆர்.சி.சம்பத்

கருணாநிதியின் 'தூக்குமேடை' வசனங்களை. வீராவேசம் பீரிட்டது. கண்கள் சிவந்தன. கருணாநிதி சிரித்துக் கொண்டே அவரை அழைத்துப் போய் பி.ஆர்.எஸ்.,சிடம் சிபாரிசு செய்தார். தமிழ் திரையுலகிற்கு மற்றொரு வில்லன் நடிகர் கிடைத்தார். அவர்தான் நடிகர் எஸ்.ஏ.அசோகன்.

*(வருவார்)*

# வேலைக்காரி

மாலைப் பொழுது மெது மெதுவாக விடைபெற்றுக் கொண்டிருக்க, இருள் ஊரெங்கும் சூழ்ந்து கொண்டிருந்தது. "அப்பா.... எழும்பிச் சாப்பிட்டுப் படுங் கோ....!" சொல்லிக் கொண்டே கோப்பையை தகப்பனிடம் நீட்டினாள். அதில் பாண் துண்டொன்றும் கொஞ்சம் சம்பலும் இருந்தது.

"புள்ள கைகழுவச் செம்புல தண்ணியக் கொண்டு வா!" என்றபடி படுக்கையிலிருந்து எழும்பினார். குமாரி செம்பில் தண்ணீர் நிறைத்துக் கொடுத்துவிட்டு, மேசையிலிருந்த குப்பி லாம்பின் திரியைத் தூண்டி வெளிச் சத்தைக் கூட்டினாள். குடிசைக்குள் இருந்த இருளை அவ்வெளிச்சம் அகற்றியதே தவிர, அவள் மனசுக்குள் இருக்கும் இருளை அகற்ற அந்தச் சுடரால் மட்டுமல்ல எந்தச் சக்தியாலும் முடியாது.

பன்னிரெண்டு வயதிலேயே அவளுக்கு உழைக்க வேண்டிய நிலை. தினமும் காலையிலிருந்து மாலைவரை ஒரு வீட்டில் வேலை செய்கிறாள். அவர்கள் கொடுக்கும் பணத்தில் தான் தன் வயிற்றையும் தகப்பனின் வயிற்றையும் நிரப்பி வருகிறாள். "குமாரி..... குளிசைய எடுத்துத்தா புள்ளே... இந்தா கோப்பையை



ஆ.கோகுலதீபன்-நற்பிட்டிமுனை

யும் எடுத்திட்டுப் போ...!" சொல்லிக் கொண்டே செம்பிலிருந்த தண்ணீரைக் குடித்து முடித்தார்.

அவர் மூன்று வருடங்களுக்கு முன்னர் தபால் ஊழியராகக் கடமையாற்றியவர். தபாலகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு ஒன்றினால், இரண்டு கண்பார்வையை இழந்ததுடன், கால்கள் இரண்டும் பறிபோனது. சிறுவயதிலேயே தாயை இழந்து விட்ட குமாரி, படிப்பில் ஆர்வம் மிகுந்தவளாக இருந்தாள். ஒரு டாக்டராக வரவேண்டும் என்ற எண்ணத்தில் படித்தவள், அவள் படிப்பிற்குரிய எல்லா உதவிகளையும் அன்று அவளுக்குத் தகப்பன் செய்து கொடுத்திருந்தார். தாய்ப்பாசத்தை விட அதிகமாகவே அன்பூட்டி தகப்பன் வளர்த்து வந்தார். ஆனால் விதி அவளையும் விட்டு வைக்கவில்லை. அதனால் இன்று எவ்வித இலட்சியமுமில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். இதற்கு யுத்தம் அடித்தளமிட்டுவிட்டது.

"இந்தாப்பா... ஒரு சாதிக் குளிச தான் இருக்கு... மற்றது முடிஞ்சிற்று. நாளைக்குத் தான் வாங்கவேணும்!" என்றபடி தகப்பனின் வாய்க்குள் குளிசையைப் போட்டு தண்ணீரைக் குடிக்கக் கொடுத்தாள்.

"நீ சாப்பிட்டுட்டு படம்மா... நாளைக்கு வேலைக்குப் போக வேணுமே!" என்றபடி, அவளின் கரத்தைப் பற்றி முத்தமிட்டபடி தலையையும் தடவி விட்டார். 'மகள் படும் கஸ்டத்தைப் பார்க்க வேண்டாம் என்று ஆண்டவன் என் கண்களை எடுத்தது நான் செய்த புண்ணியம்' என்று அவர் அடிக்கடி நினைத்துக் கொள்வார். கண்ணீர் சிந்தாத நாளென்று அவருக்கு வந்ததில்லை. அழுது அழுது இப்பொழுது அழுவதற்கே திராணியற்றவரானார் அவர்.

அவள் குளிசையைத் தரும் போதெல்லாம் அவள் டாக்டராக வரவேண்டும் என்று அன்றைக்குச் சொன்னவையெல்லாம் அவர் காதுக்குள் அடிக்கடி ஒலித்து ஓயும். இந்தப் பிஞ்சு வயதிலேயே மகளை வேலைக்காரியாக அனுப்புவது எந்தத் தகப்பனுக்கும் வந்துவிடக்கூடாது என்று அவர் கடவுளை அடிக்கடி வேண்டிக் கொள்வார்.

நிமிடங்கள் மெல்ல நகர்ந்து மணித்தியாலங்களை அழைத்துச் சென்றன. பல மணித்தியாலங்கள் நகர்வுக்குப் பின்னர் பறவைகளின் ஒலியுடன் புதியதொரு நாள் மலர்ந்துகொண்டிருந்தது. குமாரி எழுந்து சுறுசுறுப்பாக தேனீர் வைத்துக் கொடுத்து விட்டு வேலைக்குப் புறப்பட்டாள். அவளது யோசனையெல்லாம் இன்று தகப்பனுக்குரிய குளிசைகளை வாங்குவதாகவே அமைந்திருந்தது.

"என்னடி இன்றைக்கு நேரம் போயிட்டுது... எங்கே அன்ன நட போட்டு வர்ற... கெதியா வாடி...!" வீட்டுக்காரச் சீதா கோபத்துடன் பேசினாள்.

"அப்பாவுக்கு தேத்தண்ணி போட்டுக் கொடுத்ததுல பிந்திட்டனம்மா!" கள்ளங் கபடமற்ற அவள் மனதிலிருந்து உண்மை தான் வந்தது.

"சரி சரி குசினிக்கபோய் சட்டி பானையெல்லாம் எடுத்திட்டுப் போய்க் கழுவு... சவுக்காரம் கிணத்தடியில இருக்கு!" சீதா சொல்லி முடித்ததும் குமாரி தொடர்ந்தாள்,

"அக்கா... இன்றைக்கு ஒரு.. இருபது ரூபா தருவீங்களா?... அடுத்த மாச சம்பளத்துல கழிக்கலாம்... அப்பாவுக்கு அவசரமா குளிச வாங்கவேணுமக்கா." அவளின் பேச்சில் தயக்கம் தெரிந்தது.

"தாறன்... முதல்ல போய் வேலையைப் பாரு!" உரத்த சுருதியில் சொல்லியபடி, சீதா குசினிக்குள் போனாள். குமாரி அவளைத் தொடர்ந்து உள்ளே போய் சட்டி, பானைகளையெல்லாம் அடுக்கிக் கொண்டு கிணற்றடிக்குப் போனாள்.

தண்ணீர் அள்ள வாளியை எடுத்துக் கொண்டு கிணற்றடிப் படிக்கட்டில் ஏறியவள், படிக்கட்டிலிருந்த பாசியால் சறுக்கி "அக்கா!" என்ற அலறலோடு கீழே விழுந்து மயங்கிப் போனாள் குமாரி. சீதா அவளை நோக்கி ஓடினாள். "குமாரி எழும்புடி.. குமாரி!" என்றபடி தண்ணீரை எடுத்து முகத்தில் தெளித்தாள். அப்பொழுதும் அவள் மூச்சுப் பேச்சின்றியே கிடந்தாள். வீதியால் சென்ற ஆட்டோ வண்டி ஒன்றின் உதவியுடன் சீதா அவளை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றாள். டாக்டர்கள் அரை மணித்தியாலமாகப் பரிசோதித்தார்கள். அரை மணித்தியாலத்தின் பின்னர் ஒரு டாக்டர் வெளியே வந்தார்.

"ஐயம் சொறி... மேடம் அவளுக்குக் கால் நரம்புகள் இழுத்திட்டுது... உயிருக்கு ஆபத்தில்ல. ஆனா அவளால இனி நடக்க முடியாது!" என்றார். சீதா தன் மகளைப் பலி கொடுத்தவள் போல் கலங்கிப் போயிருந்தாள். குமாரி கட்டிலில் தூங்கியபடியே இன்னும் இருந்தாள். குடிசைக்குள் மகளின் வரவுக்காக என்றும்போல் இன்றும் தகப்பன் பார்த்துக் கொண்டிருப்பார். ஆனால் தன் மகளின் நிலையை அறிந்துவிட்டால் அவரது இதயம் துடிக்குமா? என்பது சந்தேகமே.

# திருமணம்

விடிந்தால் கண்ணனுக்குத் திருமணம். அவன் வீடோ திருமணக் களை கட்டி கலகலத்துக் கொண்டிருந்தது. எல்லோரும் பம்பரமாய் சுழன்று கொண்டிருக்க, அவனுக்கு மட்டும் வியர்த்துக் கொண்டிருந்தது. விடிந்ததும் ராகினிக்கு தாலி கட்டப்போவதை அவன் மனம் ஏற்கவில்லை. பெற்றோரின் வற்புறுத்தலால் தான் இவ்வளவு ஏற்பாடும் நடந்தது. நான்கு வருடங்களாய் அவன் காதலித்த கீர்த்தனா அவன் கண்களில் பாவமாய்த் தெரிந்தாள்.



'காதலிக்குத் துரோகம் செய்ய உனக்கு எப்படியடா மனசு வந்தது?' என அவன் மனச்சாட்சி அவனை குடைந்தது.

அவன் நண்பர்களின் திட்டப்படி இன்று இரவு எட்டு மணிக்கு பிள்ளையார் கோவிலடியில் ஆட்டோவுடன் கீர்த்தனாவும் நண்பர்களும் காத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்களே.... வந்திருப்பார்களா...?

கண்ணன் கடிகாரத்தைப் பார்த்தான். எட்டு மணிக்கு இன்னும் பதினைந்து நிமிடமே பாக்கி இருந்தது. திட்டம் தயாரானது. அவன் கோயிலுக்கு தேங்காய் உடைக்கப் போவதாக சொல்லி விட்டு கையில் தேங்காயுடன் புறப்பட்டுச் சென்றான். அவனின் திட்டப்படி அங்கு நண்பர்கள் கீர்த்தனாவுடன் அவனுக்காக காத்திருந்தார்கள்.

நாளை மறுநாள் பத்திரிகையில் மணமகன் திடீர் மாயம், என்று செய்தி வருவது உறுதியாகிவிட்ட நிலையில், அவன் கீர்த்தனாவுடன் ஆட்டோவில் ஏறிப்புறப்பட்டான்.

அ.சுதர்சன்-கல்லடி

இரண்டு நாட்களின் பிறகு பத்திரிகை செய்தியை பார்த்த கண்ணன் அதிர்ந்து போனான். 'திருமணவீட்டில் மணமகனும் மணமகளும் திடீர் மாயம்' என்று செய்தி வெளியாகி இருந்தது. தனக்காகப் பார்க்கப்பட்டு இருந்த ராகினியும் அவள் காதலனுடன் சென்று விட்டாள் என்பது அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது.

# அனுபவம்

அம்பிகா கொழுத்தும் வெயிலில் நடையாய் நடந்து வீடு வந்து சேர்ந்த போது, மணி மூன்றடித்துப் பத்து நிமிடமாகி இருந்தது. கழுத்தில் வடிந்த வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்து விட்டுக் கன்னத்தைக் கைகளால் அழுத்தினாள். ரகுவரன் கேட்ட விஷயம் அவள் மனதில் கனத்தது. இது வரைக்கும் யாரும் தன்னைக் கேட்காத கேள்வியை அவன் கேட்டதை நினைத்ததும், அம்பிகாவின் மனதில் ஒரு குட்டிச்சந்தோஷம் எங்கிருந்தோ வந்து ஒட்டிக் கொண்டது. 'இதை அம்மாவிடம் எப்படிச் சொல்வது' என்று அவள் மூளைக்கு வேலை கொடுக்குமுன்னே பாக்கியம் தன் உள்ளங்கைச் சீனியை நக்கியபடி தேநீர்க் கோளாவுடன் வந்தாள்.

"பசிக்கல்லியா? சீக்கிரம் போய்ச் சாப்பிடு, போன விஷயம் என்னாச்சு? காயா பழமா?" கேட்டபடி பாக்கியம் தன் மகள் அம்பிகாவைப் பாசத்துடன் அணுகினாள்.

"அம்மா என்னோட படிச்ச ரகுவரன் என்னைக் கலியாணம் பண்ணிக்க விரும்புறான். அது உனக்கு இஷ்டமா?" அம்பிகா அவசர அவசரமாகக் கேட்டுவிட்டு நாக்கை கடித்துக் கொண்டாள்.

பாக்கியம் அதிர்ந்து போனாள். "வட்டுகோட்டைக்குப் போற வழியைக் கேட்டா துட்டுக்கு ரெண்டு கொட்டைப்பாக்கு எண்டானாம், ஏண்டி அம்பிகா நான் என்ன கேட்டன் நீ என்ன சொல்ற?" பாக்கியத்தின் பார்வை அம்பிகாவை ஆராய்ந்தது. "நீ சொல்றது நெசமா இல்லாட்டி தமாஸ் பண்றியா?" பாக்கியம் சாதாரணமாகக் கேட்டாள் சிரித்தபடி.

"தமாஸ் பண்ண இதிலென்னம்மா இருக்கு? நான் அப்பா இல்லாதவள். எனக்கு எல்லாமே நீதான். நம் குடும்ப நிலவரம் எனக்குத் தெரியாதா? நான் பீ.ஏ.படிச்சி என்ன பயன்? இன்னுமே வேலகிடைக்கல்ல, உண்ணாவிரதம் இருந்து பாத்தாச்சு, கலியாணமெண்டு வந்தாபட்டத்தைப் பாப்பாங்களா சீதனத்தைப் பாப்பாங்களா? ரகுவரன் கேட்டான் அதைத்தான் சொன்னேன்!" அம்பிகாவின் பேச்சைக் கேட்ட பாக்கியம் ஆடாது அசையாது மெய்மறந்து நின்றாள். தன் மகளின் புத்திசாலித்தனத்தைத் தனக்குள்ளே மெச்சினாள். அதை வெளியே தெரியவிடாமல் கேள்வியால் மறைத்தாள்.

"யாரவன்? பெயர் தெரியிது, அதான் நீ சொன்னியே ரகுவரனெண்டு. அவன் அப்பா அம்மா, உத்தியோகம் எல்லாம் தெரிய வேண்டாமா?" பாக்கியம் சொல்லி முடிப்பதற்கிடையில் அம்பிகா முந்திக் கொண்டாள். "ரகுவரன் நம் ஊர்க்காரன் தான். பெரிய இடத்துப்பையன். எனக்கு சீனியராப் படிச்சவன். கொழும்பில வேலை பாக்கிறதாச் சொன்னான். நல்ல குணம் அதுக்கு மேல எனக்கு எதுவுந் தெரியாதம்மா!" அம்பிகா குழந்தையைப் போல்தாயின் இடுப்பைத் தன் இரு கரங்களாலும் சுற்றி வளைத்து முகஞ்சிவந்தாள்.

"ரகுவரனைக் கலியாணஞ் செய்ய உனக்கு இஷ்டமா சொல்லு!" என்றாள் பாக்கியம். அம்பிகாவின் மௌனம் பாக்கியத்தைச் சிந்திக்கவைத்தது. "நீ வேலை தேடிப் போனாயா, இல்லாட்டா ரகுவரனைத் தேடிப் போனாயா?" பாக்கியம் இப்படிக் கேட்டதும் அம்பிகாவுக்குத் திக்கென்றது "நான் வேலை விஷயமாகக் கல்விக் கந்தோருக்குப் போனபோதுதான், ரகுவரனைக் கண்டன். படிக்கிற போதே என்னை பிடிச்சிருக்காம். வேற எந்தப் பெண்ணையும் கட்டிக்க இஷ்டமில்லையாம். அவனாகச் சொன்னான். நான் பதில் சொல்லல்ல. அவனுடைய வீடு அடுத்தத் தெருவில இருக்கிற பெரிய மாடி வீடு. அவனுக்கு அப்பா அம்மா இருக்கிறாங்க. வாகனமும் இருக்கு!" அம்பிகா விலாவாரியாகச் சொன்ன சங்கதிகளைக் கேட்ட பாக்கியம் பெரிதாகச் சிரித்தாள். அம்பிகா ஒன்றும் புரியாமல் குழம்பினாள்.

"சிரிக்காமல் என்ன செய்யிறது? இடியப் பக்காரியின் மகள் நமசிவாயம் அக்கவுண் டன்ர மகன முடிக்கிறது சாதாரண விஷயமா? ஆழமறிந்து நீ காலை விடவில்லை



என்று நினைக்கிறேன். இதெல்லாம் நமக்கு ஒத்து வராதம்மா. வேலை கிடைக்கிறதுக்கு வழியைப் பாரு?" என்று சொல்லி விட்டுப் பாக்கியம் அடுப்படிக்குச் சென்று மா இடிக்க ஆரம்பித்தாள். அம்பிகா சொன்ன விஷயமும் மாவோடு சேர்ந்து இடிபட்டது. அம்பிகா எதையோ வேண்டா வெறுப்பாகச் சாப்பிட்டு விட்டு வெளியே வேலை விஷயமாகப் புறப்பட்டுப் போனாள். பாக்கியம் அடுப்படிக்குச் சென்று மா இடிக்க ஆரம்பித்தாள்.

பாக்கியத்துக்குப் பழைய நினைவுகள் மனதில் வந்து மோதின. சமையல்காரனின் மகளான தன்னைப் பிரபல சட்டத்தரணியின் மகன் மகேந்திரன் விரும்பிப் பெற்றோரை எதிர்த்து பதிவுத் திருமணம் செய்ததை நினைத்தாள். ஆறுமாதங்கள் ஆனந்தமாக வாழ்ந்தாலும், அற்பவிஷயங்களுக்கெல்லாம் 'உன் அப்பன் ஒரு சமையல்காரன்தானே? அந்தப் புத்தி எங்கேபோகும்?' என்று அடிக்கடி குத்திக் காட்டியதை எண்ணியதும், அவள் நெஞ்சு வலித்தது. காதலுக்காக கௌரவம் மிக்க குடும்பத்தைப் பிரிந்ததை வாய் விட்டுச் சொல்லி வருந்திய கணவன், திடீரென்று காணாமல் போய்விட்டான். அம்பிகாவை வயிற்றில் சுமந்த வேளையில், அவள் பட்ட வேதனையும் விட்ட கண்ணீரும் அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம்! மாதங்கள் உருண்டபோது, தான் கணவன் தன் பெற்றாருடன் வெளிநாடு சென்று விட்டதாக அறிந்தாள்.

அம்பிகாவைப் பெற்று வளர்த்து பட்டதாரியாக்க உதவிய தன் கைகளையும் இடியப்பத் தொழிலையும் பெருமையுடன் நினைத்துக் கொண்டபோது, முன் வாசல் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டு பாக்கியத்தின் நினைவுகள் அறுந்தது. ஜிம்மி நாயும் 'வள் வள்' என்று குரல் எழுப்பியது. உலக்கையை மூலையில் சாத்திவிட்டு, வியர்வையை சேலைத் தலைப்பால் துடைத்தபடி, வாசல் கதவைத் திறந்தாள் பாக்கியம்.

வாட்டசாட்டமான ஒருவன். "நான் ரகுவரன், அம்பிகாவுடன் படிச்சவன். உங்களோடு தனியாக் கொஞ்சம் பேசணும்!" என்றான். பாக்கியத்துக்குச் சட்டென்று விஷயம் புரிந்து விட்டது. உள்ளே அழைத்துச் சென்று உட்காரவைத்தாள். "என்ன காதலா!" என்றாள் கிண்டலாக. "அப்படியெல்லாம் ஒன்றுமில்லையம்மா. படிக்கிற நாளிலிருந்து அம்பிகா மேல ஒரு ஈடுபாடு. நல்ல பெண். கல்விக்கந்தோரில் கண்டபோது கேட்டேன். அதான் உங்ககிட்ட..." வசனத்தை முடிக்காமல் தயங்கினான் ரகுவரன். "உன் அம்மா அப்பா இதுக்கு சம்மதிப்பாங்களா?" என்று சற்றுக் காரமாகவே கேட்டாள் பாக்கியம். அவன் "இல்லை!" என்று உறுதியாகத் தலையசைத்தான். "எனக்கு இதில் துளி கூட சம்மதமில்லை. நீங்கள் போகலாம்!" என்று ரகுவரனை வாசல்வரை வந்து வழியனுப்பினாள் பாக்கியம். அவள் கோளாத் தண்ணீரால் தொண்டையை நனைத்துவிட்டு, மீண்டும் மாவிடிக்கத் தொடங்கினாள்.

அம்பிகா தொங்கியமுகத்துடன் உள்ளே வந்தாள். "என்ன வேலை காலி இல்லை என்று சொல்லிற்றாங்களா?" என்றாள் சிரித்தபடி பாக்கியம்.

"நீ செய்தது கொஞ்சம் கூட நல்லா இல்லம்மா. வீடு தேடி வந்த ஒரு நல்ல மனுஷன் அவமானப்படுத்தி அனுப்பினியே!" அம்பிகாவின் வார்த்தைகளில் வருத்தம் தெறித்தது.

"உனக்கெப்படித் தெரியும்?"

"வார வழியில் கண்டன்!" சுரத்தில்லாமல் சொன்னாள் அம்பிகா. "நாம் அவிக்கிற

ரூபராணி

இடியப்பம். ரகுவரன் வீட்டுக்குப் போகும். ஆனா நீ மருமகளா அங்கபோக ஏலுமா? நீருக்கும் இடியப்பத்துக்குந்தான் சொந்தம். அது நெருப்போடு விளையாடமுடியுமா?" அம்பிகா அம்மா சொன்னதின் அர்த்தம் புரியாமல் குழம்பினாள்.

"நான் சொல்வதை நன்றாகக் கேள். இரண்டு பகுதியும் விரும்பித்தான் கலியாணஞ் செய்தாலும், உன் மாமனோ நானோ உங்களை ஏற்கப் போவதில்லை. இதையும் மீறி வாழ நினைத்தால், வாழலாம் என்று நீங்கள் நினைத்தால் எனக்குத் தெரியாமல் நீ வீட்டை விட்டு ஓடிப்போகவேண்டிய அவசியமில்லை. என் கண் முன்னாலே நீ நடந்துபோகலாம்." பாக்கியம் நிதானமாகக் கூறிய வார்த்தைகளை அம்பிகா ஆழமாகச் சிந்திக்க ஆரம்பித்தாள். ■

# அந்தமொன்றில்லா....!

இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

**வி**சித்திரமாக முச்சை இழுத்து நெஞ்சை நிரப்பிவிட்டு அவளைப் பார்த்து முறுவலித்தான் அமரன்.

கௌசல்யா அவனை விநோதமாகப் பார்த்து "என்ன?" என்றாள்.

"உன் முச்சுக் காற்று உலவுகின்ற இந்த இடத்தின் மொத்தக் காற்றையும் உள்ளே இழுத்து நிரப்பிக் கொள்ள முயற்சித்தேன்!" என்றான்.

"பைத்தியம்!" என்று அவன் தோள்களினுள் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"உலக நினைவே இன்றி உள்ளமெல்லாம் நிறைந்திருக்கும் ஒரு நினைவில், தன் மனதோடு தானே பேசிக் கொள்வதும் சிரித்துக் கொள்வதும் பைத்தியம் என்றால்.... பார்த்த இடமெல்லாம், தொட்ட உணர்வெல்லாம், கேட்கும் ஒலியெல்லாம் கடவுள் நினைவே தென்படுகிற பக்தி நிலையும் பைத்தியம் என்றால், காதல் நினைவில் அல்லாடுகிற நானும் பைத்தியம் தான் சந்தேகமென்ன?"

கௌசல்யா அவளை இறுக அணைத்தாள், காது மடல்களை இதழ்களால் வருடினாள்.

"அங்கே உரசாதே. தீப்பிடித்துக் கொள்ளும்!" என்றான் அமரன்.

"வெள்ளம் ஒன்று என்னை இராட்சதப் பாய்வோடு இழுத்துச் செல்வதைப் போலிருக்கிறது..." அடித்துச் செல்லப்பட்டு விடாதிருக்க, அவனைப் பற்றிக் கொள்வது போல இறுக்கிக் கொண்டாள்.

"உன் கூந்தல் காட்டினுள்ளிருந்து நான் வெளியேற முதலில் வழி சொல்!" என்று அவள் கூந்தலைப் பிரித்து முகத்தை வெளிப்படுத்தினான் அமரன். "தேனாற்றுக்குள் முழ்கியிருப்பதுபோல மிகை இனிப்பில் முச்சுத்திணறுகிறது!" என்றான்.

"ம்... அப்படியானால் விடுங்கள்!" என்று சிணுங்கலோடு விலகினாள்.

"ம்ஹும்... அந்தமொன்றில்லா ஆனந்தம். இதை விடமுடியாது. உன்னைத் தழுவத் தழுவ ஊற்றாகப் பொங்கிவரும் இன்பத்தை நான் இழந்துவிட முடியுமா? என்னிடமிருந்து உனக்கு எதுவும் கிடைக்காதிருக்கலாம். ஆனால் உன்னிடமிருந்து நான் பெற்றுக் கொண்டிருப்பது இவ்வுலகத்



தலைமையின்பம்... 'தந்தது உன் தன்னை; கொண்டது தன் தன்னை; சொல்லு! ஆர் கோலோ சதுரர்?"

கௌசல்யா பாய்ந்து அவன் வாயைப் பொத்தினாள். "தெய்வத் திருவாசகத்தை எங்கே சொல்வதென்று விவஸ்தை இல்லையா? உங்களுக்குப் புத்தி மாறிப் போச்சா?"

"கடவுளிடம் நெருங்கவும் வழி காதல்தானே?"

"அது இந்த இழிந்த உடல்களுக்கு இன்பம் தருகிற காதல் இல்லை!"

"உடம்பை இழிவென்று சொல்லாதே. 'உடம்பினை முன்னம்' இழுக்கென்றிருந்தேன், உடம்பினுள்ளே உறுபொருள்கண்டேன்..."

"ஐயோ! ஆளைப் பாரன்! திரும்பத் திரும்ப கடவுள் குற்றத்தைச் செய்தபடி....."

"எது கடவுள் குற்றம். காதலிப்பது கடவுள் குற்றமா?"

"இல்லை. உடல் இன்பத்தை கடவுளோடு ஒப்பிட்டுப்பேசுவது!"

"கடவுளிடம் பக்தர்கள் கொண்ட, மனதை வெறிகொள்ள வைக்கும் அந்த அன்பு காதலில் ஆண்-பெண் ஈடுபாட்டில் வருவதை ஒத்ததுதான் என்பதை அடியார்களும் ஒப்புக் கொள்கிறார்கள். நீ ஏன் கோபப்படுகிறாய்?"

"சும்மா சமாளிக்காதீர்கள். அதுவேறு இதுவேறு..."

"உனக்கு எப்படிக் கண்ணே நான் புரிய வைப்பது? 'சித்தத்துள் தித்திக்கும் தேனே!' என்று கடவுளிடம் நெக்குருகுகிறார்கள் பக்தர்கள். எனக்கு நீ சித்தத்துள் தித்திக்கும் தேன்தானே? இதைச் சொன்னால் நான் கடவுள் நிந்தனை செய்பவனாவேனா? இன்னும் சொன்னால், எனக்குள் உன் நினைவால் உண்டாகிற களிப்பு வெறியை எப்படிச் சொல்வதென்று புரியாமல் தத்தளிக்கிறபோது, இத்தகைய பக்தியில் பிறந்த வரிகள் என் நிலைமையை விவரிக்க எவ்வளவு பொருத்தமாகி விடுகின்றன! 'சித்தத்துள் தித்திக்கும் தேன்!' ஆஹா நீ என்னைப் படுத்துகிற பாடு இதுவல்லால் வேறென்ன?"

"போதும் போதும்... விட்டால் புராணம் பாடித்தான் நிறுத்துவீர்கள். என்னை எதுவேண்டுமானாலும் சொல்லுங்கள். இந்த இடத்தில் கடவுளை இழுக்க வேண்டாம்....!"

"சரி சரி உன்னை இழுக்கிறேன். வா!"

"ம்... இதுக்கொன்றும் குறைச்சலில்லை..." என்றும் கோபம் கொண்டவள் போல விலகி அமர்ந்தாள் கௌசல்யா. அமரன் நெருங்கினான்.

"என்ன தேவி, ஊடலா?" என்று சிரித்தான்.

அவள் திரும்பி அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, "உங்களிடம் நான் ஊடல் கொண்டு பயன் என்ன? ஒரு நொடியேனும் பிரிந்து தனியாக இருந்துவிட முடியுமா என்னால்? ஒரு கணம் கூட என் கோபம் தங்க மாட்டேன் என்கிறது. என்ன சொன்னாலும், விரலால் கோடு கிழித்த நீர் மீண்டும் ஒட்டிக் கொள்வதுபோல மனமும் உடலும் உங்களிடமே வந்துவிடுகிறது...."

"எல்லாம் சரிதான். ஆனால் கண்மணிக்கு அவ்வப்போது கோபமும் வந்துவிடுகிறதே!"

"அதில் எந்தப் பயனுமில்லை என்று தெரிந்தே வருகிற பொய்க் கோபம் அது. வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விடும் எனத் தெரிந்திருந்தும் ஆற்றில் நீந்தக் குதிப்பவரைப் போல, வெற்றி கிடைக்காது எனத் தெரிந்திருந்தும் ஊடல் கொள்வதால் பயன் என்ன?"

உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து.

(குறள்:1287)

# ஸ்போர்ட்ஸ்

## லாரா விசாரிக்கப்பட மாட்டார்



**மே**ற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் பிரையன் லாரா மீது சாட்டப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களை அந்நாட்டின் கிரிக்கெட் சபை விசாரிக்கப் போவதில்லை என்று அவ்வணியின் பயிற்றுவிப்பாளர் ரோஜர் ஹாப்பர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, இந்தியா போன்ற நாடுகள் தத்தமது நாடுகளில் இத்தகைய ஊழல் பற்றி தனிப்பட்ட விசாரணைகள் பலவற்றை நடத்தி வருகின்ற போதும், மேற்கிந்திய தீவுகள் இத்தகைய விசாரணையை மேற்கொள்ளப் போவதில்லை. என்று அறிவித்திருக்கிறது.

ரோஜர் ஹாப்பர் மேலும் தெரிவிக்கையில், "பிரையன் லாரா என்னிடம் வந்து இந்த ஊழலில் தனக்கு எந்தவிதமான தொடர்புமில்லை என்று கூறுவாரானால், அது ஒன்றே போதுமானது. சர்வதேச கிரிக்கெட் சபை வேண்டுமானால் எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கட்டும்" என்றார்.

## இந்திய அணியின் புதிய பயிற்சியாளர்

**நி**யூஸிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனும், இடதுகைத் துடுப்பாட்ட வீரருமான ஜோன் ரைட் இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இந்திய அணிக்கு வெளிநாட்டுப் பயிற்சியாளராக ஒருவர் இடம் பெறுவது இதுவே முதல் முறை.

ஊழல் குற்றச்சாட்டுக்களால் இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகிய கபில்தேவின் இடத்திற்கு தற்காலிகமாக அன்சுமன் கெய்க்வாட் நியமிக்கப்பட்டார்.

இதன்பின் அவுஸ்திரேலியாவின் ஜெஃப் மார்ஷ், கிரெய்க் சப்பல் மற்றும் நியூஸிலாந்தின் ஜோன் ரைட் ஆகியோரது பெயர்கள் இந்திய அணியின் பயிற்சியாளர்களாகப் பரிசீலிக்கப்பட்டன.

ஜெஃப் மார்ஷ் வெளிநாடொன்றில் அதிக காலத்தைத் தன்னால் செலவிடமுடியாதென விலகிக்கொண்டார்.

தெற்கு அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளராக இருப்பதால் தன்னால் உடனடியாக வரமுடியாதென கிரெய்க் சப்பல் கூறிவிட்டார்.

கடைசியில் ரைட் ஒப்பந்தமானார். முதலில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கும் ரைட்டின் பதவி, பின்னர் மேலும் ஒரு வருடகாலத்திற்கு நீடிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

46 வயது நிரம்பிய ஜோன் ரைட் 16 ஆண்டுகள் நியூஸிலாந்து அணிக்காக விளையாடியுள்ளார். 82 டெஸ்ட் போட்டிகளில் இவர் 5,334 ஓட்டங்களைக்குவித்துள்ளார். இவற்றில் 12 சதங்கள் அடங்கும்.

அத்துடன் நியூஸிலாந்து அணி. விளையாடிய 14 டெஸ்ட் போட்டிகளுக்குத் தலைமை தாங்கிய ரைட் அவற்றில் 3 வெற்றி களைப் பெற்றுக் கொடுத்தார். அந்த மூன்றில் 2 இந்திய அணிக்கெதிராகப் பெற்ற டெஸ்ட் வெற்றிகளாகும்.

# சிந்தியா பதில்கள்

**★ ஒரு பெண்ணைக் காதலிப்பதற்குத் துணிச்சல் வேண்டும் என்கிறான் நண்பன். அப்படியென்றால், கல்யாணம் செய்து கொள்வதற்கு என்ன வேண்டும்?**

ந.சுபாஷ், தலவாக்கலை.

*அசட்டுத்துணிச்சல்.*

**★ சிந்தியா! அதென்னது லெஸ்பியனிஸம்?**

எம்.குமரகுருபரன், கண்டி.

*கிரேக்க நாட்டுக்குப் பக்கத்தில் 'லெஸ்போஸ்' என்று ஒரு தீவு. கி.மு. ஏழாம் நூற்றாண்டில் அந்தத் தீவு, பெண்களுக்கான சிறைச்சாலையாக இருந்தது. பெண்கள் மட்டுமே வசித்தனர். அவர்கள் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டனர். அவர்களிடையே இருந்த பிரபல பெண் கவிஞர் ஒருவர் அந்தச் சுகத்தை அனுபவித்துக் கவிதைகள் எழுதினார். அதன் பிறகே பெண்ணும் பெண்ணும் இணைந்து உடலுறவுச் சுகம் பெறும் ஓரினச் சேர்க்கைக்கு 'லெஸ்பியன்' என்று பெயர் வந்தது.*

**★ காதலிப்பதற்கு என்ன தகுதி வேண்டும்? தமிழ் தெரிந்தும் ஆங்கிலத்தில் பேசும் பெண்கள் பற்றி? திரைப்படம் பார்ப்பதால் ஆயுள் அதிகமாகும் என்கிறார்களே, உண்மையா? நல்ல நண்பர்களைப் பெற என்ன வழி? தாங்கள் என் கேள்விகளுக்குப் பதில் தராததன் காரணந்தான் என்ன?**

எட்வேட் நிஷாந்தன், பெரியநீலாவணை 01.

*எந்தத் தகுதியும் கேட்கப்படாமல் கிடைக்கும் வேலை அது! தமிழ் மட்டும் தெரிந்தவர்கள் கேட்கக் கூடாத விஷயங்களாக இருக்கும்! திரைப்படத் தயாரிப்பிலுள்ள தொழிலாளர்கள் வறுமையால் மடிந்து விடாதிருக்க உதவும் உண்மைதான்! நல்ல நண்பனாக நடந்து கொள்வது! தபாலட்டையும் கூட மூச்சுவிட முடியாதபடி இப்படி நெருக்கித் தாக்குகிறீர்களே என்ற பயந்தான்!*

**★ உலகின் முதல் தர வீரர்களைக் கொண்டிருந்தும் இந்தியா இலங்கையிடம் மண்கவ்வி விட்டதே?**

ச.பாரதிதாசன், பதுளை.

*வெற்றிக்குத் தேவை நட்சத்திர வீரர்களல்ல; நாட்டுக்காக விளையாடும் உண்மை உழைப்பாளிகள். இந்திய வீரர்கள் ஒவ்வொருவரும், அடுத்த போட்டியிலும் தாங்கள் அணியில் இருக்க வேண்டும் என்பதைக் குறியாக வைத்து விளையாடுகிறார்கள். இலங்கை வீரர்களோ விளையாடும் இந்தப் போட்டியை ஜெயித்து விடுவதற்காக விளையாடுகிறார்கள். அது தான் வித்தியாசம். இன்னுமொன்று ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில், வெற்றியின் சூட்சுமம் களத்தடுப்பில் தான் பெருமளவு தங்கியிருக்கிறது. ஜெயசூரியாவின் துடுப்பாட்டத்திற்காகவோ, முரளியின் பந்து வீச்சுக்காகவோ அவர்கள் பாராட்டுப் பெறுவதை விட, பிரமிக்க வைக்கும் அவர்களது களத்தடுப்புச் சாகசத்திற்கே அதிகப் பெருமை போய்ச் சேர வேண்டும்.*

*இவற்றோடு சேர்ந்து, இலங்கை அணியின் வெற்றிகளை, பெவிலியனுக்குள்ளிருந்து மூக்குக் கண்ணாடியூடாகத் தன் குறுகுறுத்த விழிகளால், விளையாட்டின் ஒவ்வொரு கணத்தையும் குறிப்பெடுத்துக் கொண்டிருக்கும் அந்த குண்டு மனிதரும் பெருமளவு தீர்மானிக்கிறார்.*



'அன்புடன்' படத்தில் அருண்குமார்–ரம்பா

**★ எனது அபிமான நடிகை ரம்பாவின் விலாசத்தைத் தருவீர்களா? (ஏமாற்றி விடாதீர்கள்)**

மோகன், நீர்கொழும்பு வீதி, வத்தளை.

*ஏமாற்றப் போவது நானில்லை. உங்கள் கனவுக்கன்னிதான். விரைவில் காணாமல் போய்விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிற அந்த 'அடிவாழை' அழகியின் விலாசத்தை இப்போது போய்க் கேட்கிறீர்களே.... படவாய்ப்புக்கள் குறைந்து நொந்து போயிருக்கும் அவருக்கு, முடிந்தால் ஓரிரு வரி எழுதிப் போடுங்கள், மகிழ்வார். இதோ முகவரி:*

இல:184, பாஸ்கரன் காலனி,
பாரதிதாசன் தெரு, விருகம்பாக்கம்,
சென்னை 600092.

**★ ஒன்றிரண்டு பேரைக் கொலை செய்தவன் கொலையாளி எனக் காணப்பட்டு சிறையிலடைக்கப்படுகிறான். பல்லாயிரக் கணக்கானோரைக் கொலை செய்தவன், படைத் தளபதியாகப் பதக்கம் அணிவிக்கப்பட்டுக் கௌரவிக்கப்படுகிறான். அந்த வகையில் பல்லாயிரம் கொலைகளுக்குக் காரணமாயிருந்த ஸ்டாலினை எப்படி மதிப்பிடுகிறீர்கள் சிந்தியா?**

வி.குமரேஸ், கொழும்பு 06.

*கொலைகளின் மூலம் மக்களின் விடுதலை என்பது ஒரு பயங்கரமான கனா என்பதை நிரூபித்தவர்களில் அவரும் ஒருவராகிறார். மற்றப்படி ஸ்டாலின் சொல்லியதாகக் குறிப்பிடப்படுவதில் என்னைக் கவர்ந்த ஒரு வாக்கியம் : "ஜனநாயகம்-வாயாடிகளின் அதிகாரம்!"*

**★ நற்பண்புகளில் சிறந்தது நேர்மை தானே?**

ச.வான்மதி, யாழ்ப்பாணம்.

*ம்... நேர்மை எனக்கும் பிடிக்கும். அது நற்பண்பு என்பதால் அல்ல. மன உறுத்தல் இல்லாமல் நிம்மதியாக இருக்கலாம் என்பதால்தான்.*

**★ கிளின்ரனுக்குப் பிடித்த பாடல் "மோனிக்கா.... எனை தினம் தாக்கிடும் ரகசியப் புயலே வா...." என்றால், மோனிக்காவுக்குப் பிடித்த பாடல் எதுவாகயிருக்கும்?**

ஜே.பாத்திமா ரிஸ்னா, நிககொள்ள.

*தின்னாதே.... என்னைத் தின்னாதே!"*

**★ மனதிற்கு ஜன்னல் கண்கள் என்றால், உலகிற்கு ஜன்னல் எது என்று தெரியுமா?**

எம்.பிரியம்வதனா, கொழும்பு 13.

*தொலைக்காட்சிப் பெட்டி.*

**★ தற்போது வந்துள்ள திரைப்பாடல்களில் உம்மைக் கவர்ந்தது எது?**

கோ.கிஷ்ஜனா, ஆரையம்பதி 02.

*பாரதி படப் பாடல்கள் அனைத்துமே.*

## 'முரசு விலையேற்றம்'

பத்திரிகை அச்சிடுவதில் ஏற்பட்டுள்ள செலவுகள் அதிகரித்து விட்டமையினால் அடுத்த வார முரசின் விலை ரூபா 13.50 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. ஆனால் இந்த முரசின் முகப்பில் விலை ரூபா 14 என்று தவறுதலாக இடம்பெற்றிருக்கிறது. இந்த முரசின் விலை ஆக ரூபா 12 மட்டுமே என்பதை அனைவருக்கும் அறியத் தருகிறோம். *-நிர்வாகி-*

# மன்னாதி மன்னன் 31

விலைமகளான சௌந்தரவல்லியின் வீட்டு வாயிலில் காந்தரூபியைக் கண்ட அரசகுமாரனான மதனசிம்மன் அன்றிரவு சௌந்தரவல்லியின் வீட்டைச் சென்றடைந்தான். அவன் அந்த வீட்டினுள் செல்வதற்கு முன்னர் வாயிற்புறத்தில் காராம் பசுவொன்றும் அதன் கன்றும் கட்டப்பட்டிருந்தன.

மோக வெறியில் சென்ற மதனசிம்மன் அங்கு கட்டப்பட்டிருந்த கன்றின் கயிற்றைத் தாண்டிய வண்ணம் சென்றான். இதனைக் கண்ட கன்றானது தனது தாயாரிடம் "அம்மா இந்த அரசகுமாரன் என்னைக் கட்டியிருக்கும் கயிற்றைத் தாண்டிக் கொண்டு போகிறான்!" என்று கூறியது. மிருகங்களின் உரையாடல்களை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்றிருந்த மதனசிம்மனின் காதுகளில் கன்றின் குரல் விழுந்ததும் சற்று நேரம் தாமதித்து, பசு என்ன கூறப்போகிறது என்பதையும் அவதானித்தான்.

தனது கன்றின் முறைப்பாட்டுக்குத் தாய்ப்பசு "அவன் தனது சொந்தத் தாயையே மோகித்து, தனது இச்சையைத் தீர்க்க எண்ணங் கொண்டு போகிறான். அவனுக்கு நன்மை, தீமை எப்படித் தெரியப் போகிறது?" என்று கூறியது.

பசு கூறியதைக் கேட்டு மதனசிம்மன் திணுக்குற்றாலும் அவனுடைய மோக வெறி அவனை உள்ளே இழுத்துச் சென்றது.

மஞ்சத்தில் தன்னுடைய இக்கட்டான சூழ்நிலையை எண்ணி ஏங்கிப் பரிதவித்துக் கொண்டிருந்த காந்தரூபியை அவன் அருகியதும் அவளுடைய மார்பகங்களிலிருந்து பால் சுரந்து மதனசிம்மனின் முகமெங்கும் பீய்ச்சியடித்தது. உள்ளே செல்லும்



போது தாய்ப் பசுவும் அதன் கன்றும் பேசிய வார்த்தைகளைக் கேட்டமையாலும் பால் சுரந்து தனது முகத்தில் பாய்ந்தமையினாலும் குழப்பமடைந்த மதனசிம்மன், அங்கிருந்து வெளியேறி தனது அரண்மனைக்குச் சென்றான். தனது படுக்கை அறைக்குச் சென்று மஞ்சத்தில் படுத்துக் கொண்டான்.

அரசன் காந்தநாதன் வழமையாக உணவு உண்ணும் போது மதனசிம்மனை எப்போதும் தன்னருகிலேயே வைத்துக் கொள்வது வழக்கம். அன்று தன்னுடன் உணவருந்த மதனசிம்மன் வராமையினால் பதற்றமடைந்த மன்னன், மதனசிம்மனின் படுக்கையறைக்குச் சென்று பார்த்தான். படுக்கையில் கிடந்த மதனசிம்மனுக்கு உடல் நலம் குன்றியிருக்கிறதோ, என்று பயந்த மன்னன், அவனருகே சென்று பார்த்தான். மதனசிம்மன் துயரம் தோய்ந்த முகத்துடன் அழுது கொண்டிருப்பதைக் கண்டான்.

அவனை ஆதரவாக தூக்கியணைத்து, "என்ன மகனே! உனக்கு என்ன நடந்தது? ஏன் துயருற்றிருக்கிறாய் எழுந்து வா!" என்று அழைத்தான். மதனசிம்மன், "எனக்கு உணவும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். எனக்கு சில உண்மைகள் தெரிந்தாக வேண்டும். அதுவரை நான் எதையும் உண்ண மாட்டேன்!" என்று விம்மலுடன் கூறினான்.

திணுக்குற்ற காந்தநாதன் "என்ன உண்மை தெரிய வேண்டும்!" என்று கேட்டான்.

"நான் யார்? எங்கிருந்து வந்தேன்? இதுவரை நான் உங்கள் வம்சத்தின் வாரிசு, அரசகுமாரன் என்று எண்ணியிருந்தேன். ஆனால் இதில் இப்பொழுது எனக்குச் சந்தேகம் எழுந்துள்ளது. என்னுடைய தாய்-தந்தையர் யார்? அவர்கள் எங்கிருக்கிறார்கள்? என்னுடைய உண்மையான வரலாறு பற்றிய முழுவிவரங்களும் எனக்கு இன்று மாலைக்குள் தெரிந்தாகவேண்டும். இல்லையேல் ஊன், உறக்கம் எதுவுமின்றி நான் என்னையே மாய்த்துக்கொள்ளப்போகிறேன்," என்று கூறினான் மதனசிம்மன். மதனசிம்மனின் கேள்வியால் கலக்கமடைந்த காந்தநாதன் தன்னுடைய மகன் காந்தரூபன்-அவன் மனைவி காந்தரூபி ஆகியோரின் வரலாற்றைச் சொல்லி முடித்தான். காந்தரூபன் காணாமற் போனதும்-பின் காந்தரூபி கருவுற்றமை, அதனால் அவளைக் கானகத்திற்கு அனுப்பியமை போன்ற தகவல்களையும் மதனசிம்மனிடம் கூறினாள்.

இக்கதையைக் கேட்டதும் மதனசிம்மனுக்கு மேலும் குழப்பம் அதிகரித்தது. காந்தநாதனிடம், "இந்தக் கதையினால் நான் திருப்தியடையப் போவதில்லை. இந்த நகரத்தில் இருக்கும் விலைமகளான சௌந்தரவல்லியையும் அவளுடைய வீட்டில் வாழும் பெண்ணையும் விசாரித்தறியுங்கள். அப்போது தான் பல உண்மைகள் வெளிப்படும்," என்று கூறிய மதனசிம்மன், மஞ்சத்தில் மறுபுறம் புரண்டு படுத்தான்.

அரசன் காந்தநாதன் மதனசிம்மன் கேட்டுக் கொண்டபடி உடனடியாகக் காவலர்களை

## தாயை மோகித்த தனயன்!

சௌந்தரவல்லியின் வீட்டுக்கு அனுப்பி அவளையும் காந்தரூபியையும் அரண்மனைக்கு வரவழைத்தான். தனது மருமகளாகிய காந்தரூபியை நேரில் கண்டதும் மன்னன் துணுக்குற்றான். 'கர்ப்பிணியாகவிருந்த இவளை எப்போதோ கானகத்தில் விட்டுவிடும்படி ஏற்பாடு செய்திருந்தேன். இன்று இவள் இங்கு வந்து சேர்ந்திருக்கிறாள். எனது மகன் காந்தரூபனின் மனைவி காந்தரூபியாகத்தான் இவளிருக்க வேண்டும், என்றும் எண்ணினான்.

சௌந்தரவல்லியைப் பார்த்து மன்னன், "இப்பெண் யார்?உன்னிடம் இவளெப்படி வந்து சேர்ந்தாள்?" என்று வினவினான்.

சௌந்தரவல்லி, தனது மகள் நிறை கர்ப்பிணியாக மரணமடைந்தபோது அவளுடைய உடலை சுடலையில் தகனம் செய்ததையும், அதே வேளையில் தன்னுடைய மகளைப் போல் மற்றுமொரு கர்ப்பிணிப் பெண் தன்னுடைய மகளின் சிதையில் மூட்டப்பட்டிருந்த தீயினுள் விழுந்து தற்கொலை செய்ய முயற்சித்தபோது தடைசெய்து, தனது மகளைப் போல் அவளை இதுகாலம் வரையும் வளர்த்து வந்ததையும் கூறினாள்.

இந்தக் கதையைக் கேட்ட மன்னன் காந்தநாதனுக்கு ஓரளவு விஷயம் புரிந்தது இதற்கிடையில் குழந்தையை காட்டில் கொண்டுபோய்ப் போட்டுவிட்டு வந்த மருத்துவச்சியும் அரண்மனைக்கு அழைக்கப்பட்டாள். காந்தரூபிக்குப் பிறந்த குழந்தையை பாம்புப்புற்றின் அருகில் தான் கிடத்தி விட்டு வந்ததாக அவள் ஒப்புக் கொண்டாள்.

பாம்புப் புற்றடியில் போடப்பட்ட குழந்தை தானாகத்தான் இருக்குமோ என்று மதனசிம்மன் எண்ணிப் பார்த்தான். அதிலும் பலத்த சந்தேகம் தான் எழுந்தது. இந்த நிலையில் இந்தச் சிக்கல்கள் நீங்கி தெளிவு பிறக்க வேண்டுமானால் தனது குல தெய்வமான காளிகாம்பாளின் துணையையே நாட வேண்டும் என்றும் மன்னன் காந்தநாதன் முடிவுக்கு வந்தான். இதன்படி அனைவரும் காளிகாம்பாள் கோயிலுக்குச் சென்றனர். அம்பாளின் சந்நிதியில் நின்று எழுந்துள்ள சந்தேகத்தைத் தீர்க்குமாறு மனமுருகி வேண்டிக் கொண்டனர். அப்போது காளிகாதேவி தோன்றி மதனசிம்மனைச் சுட்டிக் காட்டி "பாம்புப் புற்றடியில் போடப்பட்ட காந்தரூபியின் குழந்தை இவனே!" என்று கூறியருளினாள்.

காளிகாம்பாள் கூறிய கதையைக் கேட்ட மன்னன் காந்தநாதன், "அன்னையே! எனது மகன் காந்தரூபன் திடீரெனக் காணாமற் போய்விட்டான். அவன் காணாமற் போன பின்னர் தான் காந்தரூபி கருவுற்றாள். அவளுடைய வயிற்றில் ஜனித்த குழந்தையின் தந்தை யார் என்று எவ்வளவோ முயன்று விசாரித்துப் பார்த்தோம். ஆனால் குழந்தையின் தந்தை யாரென்று தனக்குத் தெரியாது என்று கூறி விட்டாள். இதனாலேயே அவளைக் கானகத்திற்கு அனுப்பினோம். மதனசிம்மன் காந்தரூபியின் மகனாக இருப்பதனால் மட்டும் அவன் என்னுடைய மகன் காந்தரூபனுக்குத் தான் பிறந்தவன் என்பதை என்னால் எப்படி ஒப்புக்கொள்ள முடியும் தாயே! இந்தச் சிக்கலிலிருந்து விடுவிக்க வேண்டிய பொறுப்பும் உன்னையே சேர்ந்தது. அம்மா!" என்று காந்தநாதன் வேண்டிக் கொண்டான்.

"மதனசிம்மன் உன்னுடைய மகன் காந்தரூபனுக்கு பிறந்தவனே, ஆனால் காந்தரூபன் வாரத்தில் ஒரு தடவை காந்தரூபியிடம் வந்து போனது அவளுக்கே தெரியாது. காந்தரூபன் இப்பொழுது கந்தர்வலோக சப்தகன்னியர்களிடம் இருக்கிறான். தனக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கிறது என்ற தகவல் கூட, பாவம் அவனுக்கே தெரியாது!" என்று காளிகாம்பாள் கூறினாள்.

அம்பாளின் விளக்கத்தைக் கேட்ட காந்தரூபி அம்பாளின் தாளில் விழுந்து மனமுருகி "அன்னையே! எனது கணவர் உயிருடன் தானிருக்கிறார் என்று கூறியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. அன்னையே! மீண்டும் என் கணவர் என்னிடம் வந்து சேர அனுக்கிரகம் செய்ய வேண்டுகிறேன் தாயே!" என்று வேண்டினாள்.

காளிகாம்பாள் "மகளே அஞ்சவேண்டாம். நீ சப்தகன்னியரை நோக்கி வெள்ளிக்கிழமை தோறும் விரதம் இருக்க வேண்டும். அப்போது அவர்கள் மனமிரங்கி உன் கணவரை உன்னிடம் கொண்டு வந்து சேர்ப்பார்கள்!" என்று கூறி மறைந்தருளினாள்.

அமபாள் கூறியபடி காந்தரூபி தொடர்ந்து ஏழு வெள்ளிக்கிழமைகள் கடும்விரதம் இருந்தாள். ஏழு நாட்கள் விரதம் முடிந்ததும் சப்தகன்னியரும் காந்தரூபனை அழைத்துக் கொண்டு வந்து காந்தரூபியிடம் ஒப்படைத்தனர். கந்தர்வலோகத்தில் இதுவரை வாழ்ந்தமையினால் காந்தரூபன் அவனுடைய திருமணமன்று எவ்வாறு இளமையோடு அழகுடனும் இருந்தானோ அதேபோன்று இருந்தான். மன்னன் காந்தநாதனும் அரண்மனையிலுள்ள அனைவரும் அவனைக்குதூகலமாக வரவேற்றனர். தனது மகன் மதனசிம்மன் தன்னைப்போன்றே இருப்பதைக் கண்டு காந்தரூபன் அவனை அணைத்து உச்சிமோர்ந்து மகிழ்ச்சியுடன் தனது மனைவி காந்தரூபியைப் பார்த்தான். அவளும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தாள்.

பட்டத்துக்குரிய தனது மகன் காணாமல் போய் பல வருடங்கள் கழித்து மீண்டும் வந்த பெருமகிழ்ச்சியில் திளைத்திருந்த மன்னன் காந்தநாதன் உடனடியாக காந்தரூபனுக்கு முடிசூட்டு விழாவை நடத்தி வைத்து விட்டு தவக்கோலம் பூண்டு கானகம் ஏகி விடத் தீர்மானித்தான்.

இத்துடன் கதையை நிறுத்திய தலையணை, கதைகேட்டுக் கொண்டிருந்த மன்னனைப் பார்த்து, "விக்கிரமாதித்த பூபதியே! இந்தக் கதையை நான் தங்களிடம் மட்டுமே, தாங்கள் கேட்டுக் கொண்டமைக்காகக் கூறினேன். வேறு யார் கேட்டிருந்தாலும் இந்தக் கதையைக் கூறியிருக்க மாட்டேன்!" என்றது.

"விக்கிரமாதித்த பூபதியே!" என்று கதை கேட்டுக் கொண்டிருந்த மன்னவனைப் பார்த்து தலையணை அழைத்ததைக் கேட்ட இளவரசி ஏலக்கரம்பை துணுக்குற்றாள். தான் மாலை சூட்டிய மணாளன் வெறும் இரத்தினக் கல் வியாபாரி அல்ல; பராக்கிரமசாலியான மாமன்னன் விக்கிரமாதித்தனுக்கே தான் மாலை சூட்டியிருப்பதாக நினைத்ததும் மகிழ்ச்சி பொங்க, மன்னவரின் காலடியில் வந்து பணிந்தாள்.

## இராஜகுமாரன்

மன்னன் சம்புநாதனும் மன்னாதி மன்னன் விக்கிரமாதித்தனே தனக்கு மருமகனாக வாய்த்திருக்கிறார் என்று மகிழ்ந்தான். திருமணவிழாவை மிகச் சிறப்புடன் நடத்தி வைத்தான். திருமண விழா முடிவடைந்ததும் தனது மனைவியாகிய ஏலக்கரம்பையையும், ஏற்கனவே மீனின் வயிற்றிலிருந்து மீட்டெடுத்த வேதகோவிந்தனின் மகளையும் அழைத்துக் கொண்டு வேதாளத்தின் துணையுடன் உஜ்ஜையினி மாகாளிபுரம் போய்ச் சேர்ந்தார் மன்னன் விக்கிரமாதித்தன். மூன்றாவது பதுமை இவ்வாறு விக்கிரமாதித்த மன்னனின் வீரதீர பராக்கிரமச் செயல்களைக் கூறி முடித்து விட்டு, மூன்றாவது படியில் கால் வைத்திருந்த போஜ மகாராஜனைப் பார்த்து, "மன்னவரே! விக்கிரமாதித்த மாமன்னரின் இத்தகைய ஆற்றலில் சிறிதளவேனும் உம்மிடம் இருக்குமானால் நீர் தாராளமாக சிம்மாசனத்தில் போய் அமர்ந்து கொள்ளலாம்!" என்று கோமளவல்லிப் பதுமை கதையைக் கூறி முடித்தது.

*(மன்னன் வருவான்...)*

## கத்தரித்த கடிஜோக்ஸ்



ஒருவர் : இந்த அலுவலகத்திலே நின்று கொண்டே வேலை செய்கிறாரே ஒரு பெண்,அவரது பெயர் என்ன?
மற்றவர் : 'அமரா'வதி

❑❑

பாபு : ரேடியோவைக் கண்டுபிடித்தது யார் சொல்லு பார்க்கலாம்.
கோபு : முதலில் அதைத் தொலைத்தது யார், என்று நீ சொல்.

❑❑

மாலா : எங்க சித்தப்பாவுக்கு சித்தி மேல் பைத்தியம்.
விமலா : அப்படியென்றால் 'சித்தி'ப்பிரமை என்று சொல்.

❑❑

அவர் : எனது பிறந்தநாளும் என் மனைவியின் பிறந்தநாளும் ஒரே நாள்தான்.
இவர் : எனது திருமணநாளும் என் மனைவியின் திருமணநாளும் ஒரேநாள்தான்.

❑❑

ராணி : என்.டி.ராமராவும், நாகேஸ்வரராவும் திருப்பதி கோயிலுக்குப் போனா எப்படிப் போவாங்க?
வாணி : எப்படி?
ராணி : ராவோட ராவாத்தான்.

❑❑

கதாசிரியர் : பதினாறாவது மாடிக் கட்டடத்தின் உச்சியில ஒரு கொலை நடக்குது.
இயக்குநர் : கொஞ்சம் ஆழமான கதையா இருக்க வேணும்.
கதாசிரியர் : சரி, பாதாளச் சுரங்கத்தின் அடியில் ஒரு கொலை நடக்குது.

❑❑



அவள் : கிருஷ்ணபரமாத்மாவின் நண்பர் குசேலருடைய கதையை பாலச்சந்தர் படமெடுத்தால் என்ன பெயர் வைப்பார்?
அவள் : அவல் ஒரு தொடர்கதை.

❑❑


பார்வதி : என் மகளுக்குக் கல்யாணம் நடக்கணும்னு வேண்டாத தெய்வத்தை எல்லாம் வேண்டிக்கிட்டேன். இன்னும் கல்யாணம் நடக்கலை.
லட்சுமி : வேண்டாத தெய்வத்திட்ட ஏன் வேண்டினே? வேண்டின தெய்வத்திட்ட வேண்டிப் பாக்கிறதுதானே.

❑❑

நண்பர் : உங்க குழுவில மிருதங்கம் வாசித்தவரை நிறுத்திட்டீங்களே ஏன்?
பாகவதர்: என் பாட்டுக்கு வாசிக்காம, அவர் பாட்டுக்கு வாசிச்சுக்கிட்டிருந்தார் அதான் நிறுத்திட்டேன்.





அருள் ஜூவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன

கிளை:

105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

Website: www.lspih.com/arul

436331







ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்


SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

323657


அமெரிக்க சான் ப்பிரான்சிஸ்கோ விலுள்ள சான் ஜோஸ் ஊரில் ஒருநாள் பகல் தெருவில் போவோர் வருவோர் எல்லாரையும் கவர்ந்திழுத்தது ஒரு வோக்ஸ்வாகன் மோட்டார் வண்டி. அந்த வண்டி பூமாதேவியையும் ஐம் பெரும் பூதங்களான நெருப்பு, நீர், காற்று, பூமி, ஆகாயம் ஆகியவற்றையும் சுமந்து கொண்டு வேகமாக ஓடிக்கிரிந்தது. இச் சாதாரண மோட்டார் வண்டியில் பூமாதேவி மற்றும் பஞ்ச பூதங்களையும் இந்தியாவைச் சேர்ந்த பெண் ஓவியரான சவுமியா சீதாராமன் அழகாக வரைந்திருக்கிறார்.

இந்த ஓவியங்களோடு மட்டுமல்லாமல், 'சகல ஜீவராசிகளும் இன்பமாகவும் மகிழ்ச்சியாகவும் என்றென்றும் வாழ வேண்டும்' என்ற வாழ்த்துரையும் இவ் வண்டியில் பொறிக்கப்பட்டுள்ளன.




## விநோதம்




உலகப் பிரசித்தி பெற்ற சிற்பிகள், ஓவியர்கள் போன்ற கலை ஞர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் உருவாக்கிவிட்டுச் சென்ற சிற்பங்களும் ஓவியங்களும் இன்றும் எம்மைக் கவர்ந்திழுக்கின்றன.

படத்தில் பார்ப்பது உயிருடன் வாழ்ந்த எந்தச் சிற்பியாலும் உருவாக்கப்பட்ட சிற்பம் அல்ல. அமெரிக்காவின் கொலராடோ, நியூமெக்ஸிகோ, அரிஸோனா மற்றும் உட்டா ஆகிய நான்கு மாநிலங்களும் சந்திக்கும் பிரதேசத்திலுள்ள கல்லியன் குன்றுகளில் இயற்கை அன்னை வடித்த அதிசய சிற்பம் தான். இந்தப் பிரதேசத்தில் இது போன்ற எண்ணற்ற கலை வடிவங்கள் காணப்படுகின்றன. அதிசயமாக இவ்விநோதக் காட்சியைப் பார்க்க ஏராளமான பயணிகள் உலகளாவிய ரீதியில் இருந்து வந்து அதிசயிக்கின்றனர்.

பூமாபும்மாபாய் புறநகர்ப் பகுதியில் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த 20 வயதான சபரி என்ற நங்கை சில வருடங்களுக்கு முன்னர் நோய்வாய்ப்பட்டமையினால் பள்ளிப் படிப்பையும் இடைநிறுத்தி வீட்டிலேயே வெறுமனே காலம் கழித்தாள்.

எதையாவது செய்து பொழுதுபோக்குவதுடன் பிறருக்கும் மகிழ்வூட்டி வாழ்க்கைக்கு அன்றாடச் செலவுக்குப் பணம் தேட வேண்டுமே என்று கருதினாள். தனது கற்பனையில் உதயமான எண்ணங்களை சின்னச் சின்னப் பொருட்களாக உருவாக்கினாள். பூக்கள், பொம்மைகள் மற்றும் பள்ளிப் பிள்ளைகளுக்குத் தேவையான பென்சில்களைப் படத்திலுள்ளது போல் கவர்ச்சிகரமாக மாற்றினாள். இவற்றுக்கு பள்ளிக் கூடங்களில் கிராக்கி அதிகம் ஏற்பட்டது. சபரி இன்று மும்பாயின் தரமான பொம்மை தயாரிப்பு விற்பனையாளர் பட்டியலில் பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டாள்.

காதலின் ஜோராம் படத்தில் நடித்த வசுந்தராதாஸ் இப்படம் வெளிவரு முன்னரே, முதல்வன் படத்தில் இடம் பெற்ற 'ஷக்கலக்க பேபி' என்ற பாடலைப் பாடியதன் மூலம் புகழ் பெற்று விட்டது பலரும் அறிந்த சங்கதி.

'ஹேராம்' படத்தில் ஆச்சாரமான குடும்பப் பெண்ணாக, அது முழுப்புடவையில் வந்த இவர் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் போது ரசிகர்களுக்கு கவர்ச்சி விருந்தளிக்கும் வகையில் உடை உடுத்திருப்பார்.

சமீபத்தில் மேடை நிகழ்ச்சியில் கிறங்கடிக்கும் உடையில் வந்து பாடிவிட்டு மேடையில் இருந்து இறங்கும் போது ரசிகர்கள் இவரைச் சுற்றி வளைத்து விட்டார்களாம்.

ரசிகர்களிடம் சிக்கித் தவித்த இவரை மீட்டுக் கொண்டுவரப் பெரும்பாடாகி விட்டதாம்.





படத்தைப் பார்த்ததும் இது பல வசதிகளும் உள்ள ஒரு நகரம் போல் தோன்றுகிறதே என்று எண்ணுகிறீர்களல்லவா? ஆனால் இது ஒரு கிராமம்! ஆம் இங்கிலாந்திலுள்ள ஒரு கிராமம் தான் இதுவாகும்.

உலகப்பிரசித்திபெற்ற துப்பறியும் நாவல்களை எழுதி வாசகர் நெஞ்சங்களைக் கவர்ந்த எழுத்தாளர் அகதா கிறிஸ்டி வாழ்ந்த தென் டேவோன் பிரதேசத்திலுள்ள டாட்மௌத் என்ற கிராமத்தின் ஒருபுறம் தான் படத்தில் காணப்படுகிறது.

அகதா கிறிஸ்டி எழுதிய பல நாவல்களில் இந்நகரம் இடம் பிடித்துள்ளது. 1890ம் ஆண்டு பிறந்த அகதா, 1976ல் இக்கிராமத்தில் தான் தனது இறுதி மூச்சை விட்டார். இவர் எழுதிய கதைகள் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டன. திரைப்படங்களாகவும் அகதா கிறிஸ்டியின் கதைகள் தயாரிக்கப்பட்டன.

1990ம் ஆண்டு அகதா கிறிஸ்டியின் 100வது பிறந்தநாள் விழாவை ஒரு தேசிய விழாவாக இங்கிலாந்து கொண்டாடியது. தென் டேவொனிலுள்ள பல நகரங்களும் கிராமங்களும், அகதா வாழ்ந்த காலத்திலிருந்த அதே நிலைக்கு ஏற்றாற்போல் வடிவமைக்கப்பட்டிருந்தன.




1வது பிறந்தநாள் வாழ்த்து

10.11.2000



ரஜித் வில்வராஜ்

மன்னார்-கொக்குப்படையானை சேர்ந்த நோர்வேயில் வதியும் வில்வராஜ் யூலியா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ரஜித் தனது முதலாவது பிறந்த தினத்தினை 10.11.2000 அன்று நோர்வேயில் தனது இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா மற்றும் மாமா, மாமிமார், பெரியப்பா மார், பெரியம்மாமார், குட்டி அன்ரி சின்னம்மா (நோர்வே) குட்டி சித்தப்பா (பரிஸ்), மச்சான் (நோர்வே) தாத்தா மார் (நோர்வே) தொட்டப்பா, தொட்டம்மா (நோர்வே) மற்றும் இலங்கையில் உள்ள அண்ணாமார், அக்காமார், சித்தப்பாமார், மச்சான் மார், மச்சாள்மார், தாத்தாமார், பாட்டிமுத்தப்பா, நண்பர்கள் யாவரும் செல்வன் ரஜித்தை அன்னை வேளாங்கண்ணி மாதா அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்கவென மனமார வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: குட்டி அன்ரி (ஜூலியா) மன்னார்